வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வீர மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 03 பக்கங்கள் : 20


07 மீண்டும் தொடங்கும் வான், கடல்வழிப் பயணங்கள்


08 இரட்டைக்குடியுரிமையுடன் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களை கண்டறிய ஏன் இதுவரை நடவடிக்கையில்லை?


09 யாழில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி இடை நிறுத்தப்பட்டது ஏன்?


10 சிங்களத்தின் இறையாண்மையை நிலைநாட்ட தமிழ்த் தேசியம் அடகு வைக்கப்படுமா?

# இலங்கைக்கு நிதியுதவி வாய்ப்பை ஏற்படுத்துவது சீன அரசின் கையில்!

## சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் வலியுறுத்து



கொழும்பு, டிசெம்பர் 11

**இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியமும் ஏனைய சர்வதேச அமைப்புக்களும் நிதியுதவி வழங்குவதற்கான முன்னேற்பாட்டு முயற்சி சீனாவின் கைகளிலேயே தங்கியுள்ளது என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புக்களைச் சீனா விரைவுபடுத்தவேண்டும் என அது சீனாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சீன அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சின்போதே சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா இதனைத் தெரிவித்தார்.

சீனாவுடன் ஜி-20 பொதுக்கட்டமைப்பு சம்பந்தமான சில முக்கிய விடயங்கள் குறித்து விசேட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

19

## நெல் விலை வீழ்ச்சியால் விவசாயிகளுக்கு பாதிப்பு

வவுனியா, டிசெ. 11

விவசாய செலவுகள் அதிகரித்துள்ள நிலையில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளமை விவசாயிகளை பாதிக்கும் என வவுனியா கமநல உதவி ஆணையாளர் நேசரத்தினம் விஸ்ணுதாசன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

19

## மாவட்டம், மாகாணங்களுக்கு வெளியே ஆடு, மாடு இறைச்சி விநியோகம் தடை

### ஜனாதிபதி ரணில் உடனடி உத்தரவு

கொழும்பு, டிசெ. 11

பொதுச் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி கொண்டு செல்வதை நிறுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விலங்குகள் பல உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியி

19

## மண்டாஸ் கரை கடந்தது

கொழும்பு, டிசெ. 11

இலங்கை மற்றும் நாட்டைச் சுற்றியுள்ள கடற்பரப்புகளில் 'மண்டாஸ்' சூறாவளியின் தாக்கம் படிப்படியாக குறையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் 'மண்டாஸ்' சூறாவளி யாழ்ப்பாணத்தில் இருந்து 280 கிலோமீற்றர் வட-வடகிழக்கே நிலைகொண்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு 08.30 மணிக்கு, இந்த சூறாவளி, வடமேற்கு திசையில் நகர்ந்து வட தமிழ் நாடு, புதுச்சேரி மற்றும் தெற்கு ஆந்திரா கடற்கரையின் ஊடாக நேற்று அதிகாலை கடந்தது.

19

## வேலுகுமார் இடைநிறுத்தம் வெளியேற்றப்படவில்லை!

கொழும்பு, டிசெ. 11

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இருந்து கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் வெளியேற்றப்படவில்லை. அவர் இடைநிறுத்தப் பட்டுள்ளார் என தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜன நாயக மக்கள் முன்னணி என்பவற்றின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்

19

## யாழில் 142 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 11

மண்டாஸ் சூறாவளியால் யாழ்.மாவட்டத்தில் 142 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ் மாவட்ட உதவிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா இது தொடர்பில் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 142 குடும்பங்களை

19

## கோட்டாபயவை சிலர் பிரதமராக்க முயற்சி?

கொழும்பு, டிசெ. 11

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்துக்குள் அழைத்து வர பொதுஜன பெரமுனவுக்குள் ஒரு குழுவினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரியவருகின்றது.

மக்கள் புரட்சியால் கோட்டாபய ஜனாதிபதி பதவியை துறந்தார்.

19

## இலங்கை இராணுவ அதிகாரி மீது அதிரடி தடை விதித்த அமெரிக்கா!

கொழும்பு, டிசெ. 11

இலங்கை இராணுவ அதிகாரி மேஜர் பிரபாத் புலத்வத்த மீது அமெரிக்கா தடை விதித்துள்ளதாக தெரியவருகிறது.

2008ஆம் ஆண்டு இலங்கை ஊடகவியலாளர் கீத் நொயாரை கடத்திச் சென்று சித்திரவதை செய்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அவருக்கு அமெரிக்கா தடைகளை விதித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு உலகம் முழுவதும் ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக மேஜர் பிரபாத் புலத்வத்த மீது அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

19

## "எங்கள் உரிமையே எங்கள் சுதந்திரம்"

### மன்னாரில் ஊர்தி பவனி

மன்னார், டிசெ.11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று வாகன ஊர்தி பவனி மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளை சுற்றி வலம் வந்தது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான

19

## இப்படியும் நடக்கிறது...!

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் நாற்பத்து மூன்று மேலதிக வாக்குகளால் நிறைவேறியிருக்கின்றது. அடுத்த ஒரு வருடத்துக்கு ரணில் ஆட்சிக்கு எந்தப் பங்கமும் இல்லாமல் ஆட்சியைத் தொடர சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது.

வரவு - செலவுத் திட்டத்தை அக்குவேறு ஆணிவேறாக வறுத்தெடுத்த நமது கூட்டமைப்பினர் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் மீண்டும் ஒரு தடவை தமது முதுகெலும்பு விடயத்தை நிரூபித்திருக்கின்றனர்.

அந்த வாக்கெடுப்பில் அவர்கள் கலந்துகொள்ளாமல் விட்டதற்கு சொன்ன காரணம் நியாயமானது என்று வாதிடுவோரையும் இந்த ஊர்க்குருவி அவதானித்திருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப் பிரச்னைக்கு தீர்வு காண பேச்சுக்கு அழைத்திருப்பதால் அதற்கான நல்லெண்ணத்தை காண்பிப்பதற்காக தாங்கள் வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்று அறிவித்திருந்ததை மூத்த ஊடக நண்பர் பனங்காட்டான் வர்ணித்திருந்தது ஞாபகத்துக்கு வருகின்றது.

'கடந்த வாரம் பாராளுமன்றத்தில் ரணிலின் வரவு - செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பின்மீது வாக்கெடுப்பு நடைபெற்றபோது கூட்டமைப்பு இதனைப் புறக்கணித்தது. இதன் பின்னர் இதுபற்றி விளக்கம் கொடுத்த கூட்டமைப்பின் எம். பி. சுமந்திரன், ரணிலின் பேச்சு நல்லெண்ண முயற்சிக்கான சமிக்ஞையாகவே தாங்கள் வாக்களிப்பைப் புறக்கணித்ததாக விளக்கமளித்தார். புறக்கணிப்பு என்பது பகிஷ்கரிப்புத்தான். ஆனால், சுமந்திரன் வழக்கம்போல தலையைச் சுற்றும் பாணியில் விளக்கம் கொடுத்தது புதுமையான அரசியல் விண்ணானம்.'

பனங்காட்டான் வர்ணித்ததுபோல கூட்டமைப்பு மீண்டும் மூன்றாவது வாசிப்பின்மீதான வாக்கெடுப்பிலும் அரசியல் விண்ணானத்தை அரங்கேற்றியிருக்கின்றது.

பேச்சுக்கு அழைப்பு விடுத்தபோதே தமிழ் தரப்பினர் நிபந்தனை எதுவுமின்றி கலந்துகொள்ளவேண்டும் என்று ஜனாதிபதி தெளிவாக அறிவுறுத்தியிருக்கின்றார். ஆனால், எமது தலைவர்களோ, பேச்சு மேசையில் ஒரு வழிபாதை இருக்க வேண்டும் அப்போதுதான் பேச்சு சரியான திசையில் செல்லும் என்று தெரிவித்திருக்கின்றனர்.

முன்னதாக வடக்கு பிரச்னைக்கு தீர்வு காணப்போவதாக அறிவித்த ஜனாதிபதி ரணில், அதற்காக தமிழ் கட்சிகள் தனக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அப்போது அவர் வடக்கின் பிரச்னைகளையும் பட்டியலிட்டிருந்தார். இரண்டு வாரங்கள் கழித்து இனப் பிரச்னைக்குத் தீர்வு காணப்போவதாக அறிவித்தவர் அதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டப்போவதாகக் கூறினார்.

அந்த அறிவிப்பை விடுத்தபோது பாராளுமன்றத்தில் இருந்த கட்சித் தலைவர்களிடம், "நீ ரெடியா... நீ ரெடியா..." என்று கருத்துக்கணிப்பு நடத்தினார். இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதெனில், அது அனைத்துக் கட்சிகளும் உடன்பட்டால் மாத்திரமே சாத்தியமாகும் என்பது புரிந்து கொள்ளக்கூடியதுதான். அதற்காக அனைத்துக் கட்சிகளுடனும் பேசவேண்டியதும் தவிர்க்க முடியாதது மாத்திரமல்ல, கட்டாயமானதும் கூட.

ஆனால், வடக்கின் பிரச்னை என்று அவர் முதலில் அடையாளம் கண்ட பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதும் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதும் இரு வேறு விடயங்கள். ஆனால், அவர் முதலில் உறுதியளித்த விடயத்தை மிக இலகுவாக மறந்துவிட்டு இப்போது மற்றைய பிரச்னைக்கான தீர்வு நோக்கிப் பயணிக்க தொடங்கியிருக்கிறார்.

இந்த திடீர் மாற்றம் எந்த 'நெருக்குவாரத்தால்' அவருக்கு ஏற்பட்டது என்பது அவருக்கு மாத்திரமே வெளிச்சமானது. அந்த நெருக்குவாரம் முடிந்ததும் அல்லது அதனால் ஏற்படும் வலி குறைந்ததும் அவர் வேறு ஒரு விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழ் தரப்பினரை பயன்படுத்தியே தனக்கு சர்வதேச ரீதியாக வந்த நெருக்குவாரங்களை எல்லாம் குறிப்பாக, ஜெனிவாவிலிருந்து வந்த நெருக்குவாரங்களையெல்லாம் 'வெட்டி ஆடிய' அப்போதைய பிரதமர், இப்போதும் அதேபாணியில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறார் என்பதையே கிடைக்கின்ற செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

மேலே சொன்ன ஊடக நண்பர் பனங்காட்டன் மற்றுமொரு முறை எழுதியிருந்த கட்டுரை ஒன்றில், ஜனாதிபதி ரணில், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண்பதை விட, அரசியல் கட்சிகளை பலவீனப்படுத்துவதிலேயே கவனம் செலுத்துகிறார் என்று எழுதியிருந்தார். அது உண்மைதான் என்பதையே கடைசியாக கிடைத்த ஒரு செய்தியும் ஊர்ஜிதம் செய்திருக்கின்றது. தான் நடத்தவிருக்கும் அனைத்துக்கட்சி கூட்டத்தை எப்படி நடத்துவது என்பது குறித்து அவர் கூட்டமைப்பின் ஓர் எம். பியுடன் பேசியதாக ஒரு செய்தி தெரிவித்தது.

இருபத்து இரண்டு உறுப்பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பு பின்னர் பதினாறு ஆகியிருந்தது. கடைசியாக நடந்த தேர்தலில் அது பத்தாகியதற்கு நல்லாட்சி அரசு காலத்தில் நடந்த சம்பவங்கள்தான் காரணம் என்பது இரகசியமானதல்ல. அதாவது, அந்தப் படத்தின் இயக்குநர் இன்றைய ஜனாதிபதிதான்.

இப்போதும் அதே இயக்குநரின் கீழ் அதே நடிகர்கள் நடிக்க தொடங்கப்போவது தெரிகின்றது. படத்தின் முடிவு, பத்து ஐந்தாகப் போகின்றது என்பதையே இப்போது உணரமுடிகின்றது.

தமிழ் மக்களும் அதன் தலைவர்கள் என்போரும் விழித்துக் கொள்ளாவிட்டால், நம்மை யாரும் காப்பாற்ற முடியாது.!

**- ஊர்க்குருவி.**

## ஊனமுற்றவர்களுக்கு நிதி சேகரிப்பதாக கூறி அச்சுவேலியில் நூதன முறையில் கொள்ளை!

யாழ்ப்பாணம், டிசெ. 11

அச்சுவேலி பத்தைமேனி பகுதியில் நேற்றுக் காலை ஊனமுற்றவர்களுக்கு நிதி சேகரிப்பதாக சென்ற ஒருவர் பத்தைமேனி பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்று நிதி சேகரித்துள்ளார்.

அதேபோல முதியவர் வசிக்கும் வீடொன்றுக்கும் குறித்த நபர் சென்றபோது அனுசரித்த முதியவர்100 ரூபா நிதிப் பங்களிப்பை வழங்கியபோது, இது காணாது சற்று அதிகமாக தாருங்கள் என 500 ரூபாய் பணத்தினை வாங்கியிருந்தார்.

பின்னர் குடிப்பதற்கு கொஞ்சம் தண்ணீர் தாருங்கள் என கேட்டார். முதியவர் வீட்டுக்குள்ளே சென்றபோது முதியவரின் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியை அபகரித்துச் சென்றுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## இரண்டு கிலோ கஞ்சாவுடன் இரு சந்தேக நபர்கள் கைது

கிளிநொச்சி, டிசெ. 11

கிளிநொச்சியில் 2 கிலோ கஞ்சாவுடன் இரு சந்தேகநபர்கள் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி 57ஆவது படைப் பிரிவின் தலைமை கட்டளை அதிகாரி மற்றும் 573வது படைகளின் கட்டளை அதிகாரி ஆகியோரின் வழி நடத்தலில், இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக விசேட அதிரடிப் படையினர் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது குறித்த 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விவேகானந்தா நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டபோது, குறித்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கஞ்சா பொதி மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா பொதி 2 கிலோ மதிக்கத்தக்கது என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதன் போது, குறித்த வீட்டிலிருந்த ஆண்



ஒருவரும், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் 16,169 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, டிசெ. 11

டிசெம்பர் மாதத்தில் வந்த சுற்றுலாப் பயணிகளில் ரஷ்யா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் 50 வீதம் பேர் வந்துள்ளனர்.

டிசெம்பர் முதல் வாரத்தில் மொத்தம் 16,169 சுற்றுலாப் பயணிகள் ஏற்கனவே இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த மாதத்தின் முதல் ஏழு நாட்களில் ரஷ்யா, இந்தியா, இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து 1000 இற்கும் அதிகமான பார்வையாளர்கள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு இலங்கை 644,186 சுற்றுலாப் பயணிகளை வரவேற்றுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்து பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

மார்ச் மாதத்தில் 106,500 சுற்றுலாப் பயணிகள் வந்தனர், பின்னர் பொருளாதார நெருக்கடி, எதிர்ப்புகள் மற்றும் பாரம்பரிய பயணிகளுக்கு விடுமுறை காலம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்தது.

கடந்த சில மாதங்களாக மற்றும் ஐரோப்பாவில் குளிர் காலம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேற்கத்திய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான வருகையை சுற்றுலா அமைச்சகம் எதிர்பார்க்கிறது. 2021 டிசெம்பரில் 89,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகளை இலங்கை வரவேற்றது.

குளிர்கால மாதங்களில் சுற்றுலாப் பயணிகளை குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வரும் பயணிகளை ஈர்க்க சுற்றுலா அமைச்சகம் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள், கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதாரம் காரணமாக மூன்று கடினமான ஆண்டுகளுக்குப் பிறகு சுற்றுலாத் துறை படிப்படியாக முன்னேறி வருகிறது. (அ)

## 32,000 பேருக்கு நிரந்தர நியமனம்

கொழும்பு, டிசெ. 11

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது பல துறைகளிலும் பணிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 32 ஆயிரம் பேரும் அடுத்த வருட ஆரம்பத்தில் அரசாங்க நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இவர்கள் தற்போது பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு சிறந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஒரு தரப்பினரை வெளிநாட்டுப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கான அனைத்துத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்கள் வெளிநாடு செல்வதற்கு தேவையான தொழில்திறன் பரீட்சைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## சம்பூரில் முத்தமிழ் விழாவும் நாவலர் சிலை திறப்பு விழாவும்

திருகோணமலை, டிசெ. 11

சம்பூர் தமிழ் கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவும் ஸ்ரீலஸ்ரீஆறுமுகநவாலரின் திருவுருவச் சிலை திரை நீக்க நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சம்பூர் பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பூர் தமிழ் கலாமன்றத்தின் தலைவர் செ. திவாகர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அருள் விருந்தினர்களாக தென்கைலை ஆதீன குருமுதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகள், சுப்பிரமுனிய கோட்டம் கோப்பாய், யாழ்ப்பாணம் ஹவாய் ஆதின முதல்வர் ஆன்மீகச்சுடர் ரிஷிதொண்டுநாத சுவாமிகள் கலந்து கொள்வர்.

முதன்மை விருந்தினராக சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், சிறப்பு விருந்தினர்களாக சைவப் புலவர் க. வெற்றிவேல், சைவப் புலவர் அ. குகராஜா, கௌரவ விருந்தினர்களாக மூதூர் பிரதேச சபை உறுப்பினர் து. ஜெகன், சம்பூர் மகா வித்தியாலய அதிபர் பு. பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# செலான் வங்கியிடமிருந்து சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் துறைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வசதிகள்



அன்புடன் அரவணைக்கு வங்கி, செலான் வங்கி, சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களின் தொழிற்படு மூலதன வசதிக்கு ஆதரவளிக்கும் வகையில மைந்த நிதி வசதிகளை வழங்கி வருவதுடன், அதனூடாக பொருளாதார சுபீட்சத்துக்கு முக்கிய பங்காற்றுகின்றது. அதன் பிரகாரம், சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் வகையில் மத்திய வங்கியின் மீள் நிதியளிப்பு சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் குறைந்த வட்டி வீதங்களில் வழங்க முன்வந்துள்ளது.

நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்களிப்பு வழங்கும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளை ஊக்குவிப்பதனூடாக இந்த பொருளாதார நெருக்கடி நிலவும் காலப்பகுதியில், பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், நாட்டின் பொருளாதாரத்தில் பெருமளவில் பங்காற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைத் துறையின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்கும் ஆதரவளிக்க தனது பங்களிப்பை வழங்க செலான் வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் மற்றும் இந்த மூன்று துறைகளிலும் விளைச்சலை பதப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடும் தொழில்முனைவோர் உள்வாங்கப்பட் டுள்ளதுடன், இவர்களுக்கு ஆகக்கூடியது ரூ. 25,000,000 வரை கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும். 60 மாதங்கள் வரை மீளச் செலுத்தும் காலம் வழங்கப்படுவதுடன், வருடாந்த வட்டியாக 9% அறவிடப்படும்.

இந்தக் கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையாக குறித்த வியாபாரங்களின் காணி மற்றும் கட்டடங்கள் தவிர்ந்த மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ. 40 மில்லியனை விட குறைவாக அமைந்திருப்பதுடன், ஊழியர்களின் எண்ணிக்கை நூறிலும் குறைவாக இருக்க வேண்டும். மில்லியன் 1 இற்கு குறைவான கடன் வசதியை எதிர்பார்க்கும் வியாபாரங்களுக்கு குறைந்த ஆவணங்களுடன் துரிதமாக கடன் வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செலான் வங்கி மேற்கொண்டுள்ளது.

**செலான் வங்கி பற்றி...**

அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, அதிநவீன தொழில்நுட்பம், புதுமையான கணக்குகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயல்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர, சில்லறை மற்றும் நிறுவனங்கள் என வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள வங்கி, நாடு முழுவதிலும் 540க்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் அலகுகளைக் கொண்டுள்ளது. பிற்ச் மதிப்பீடுகளால் செலான் வங்கி, தேசிய நீண்டகால மதிப்பீடு 'A(LKA)' ஆக தரப்படுத்தப் பட்டுள்ளதுடன், அதனூடாக செயல்திறன் சிறப்பைக் கொண்ட நிதி ரீதியாக நிலையான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனைகள் செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். •

# அடுத்த வருடமும் மின் தடைப்படும்!

## இ. மி. ச. பொறியியலாளர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11

மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டாலும் அடுத்த வருடம் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

நீர்த்தேக்கங்களில் நீர் பற்றாக்குறை நிலக்கரி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அடுத்த வருடம் மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய நிலை ஏற்படும் என அதன் பேச்சாளர் தெரிவித்தார்.

நிலக்கரி மற்றும் எரிபொருளைப் பெறுவதற்கு டொலர்கள் கிடைக்காத பிரச்சினை காரணமாக அடுத்த வருட ஆரம்பத்தில் தொடர்ந்து மின்சார விநியோகத்தை வழங்க முடியாது எனக் கூறினார்.

மின்வெட்டை நிறுத்த மின் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் என அமைச்சர் கூறியுள்ள நிலையில் எவ்வாறாயினும் மின்சாரம் துண்டிக்கப்படும் என்பதனால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டாம் என மின்சார சபைக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அணு ஆயுத சோதனைகள் இல்லாத உலகத்தை உருவாக்கும் இலங்கை !



கொழும்பு, டிசெ.11

அணு ஆயுத சோதனைகள் இல்லாத உலகத்தை உருவாக்க இலங்கை உறுதி பூண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

வியன்னாவில் நடைபெற்ற 3ஆவது அறிவியல் இராஜதந்திரக் கருத்தரங்கின் உயர்மட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அணு ஆயுத சோதனை குறித்து 1996ஆம் ஆண்டு கையொப்பமிட்டதற்கு அமைவாக இலங்கை செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இந்த கருத்தரங்கில் சுமார் 80 நாடுகளில் இருந்து விஞ்ஞானிகள், வல்லுநர்கள், சிவில் சமூகம் மற்றும் தூதுவர்கள் உட்பட 250க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பின் பின்னர் சர்வதேச அணுசக்தி முகவரகத்தின் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து, இலங்கைக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கு அவர் நன்றி தெரிவித்தார். (அ)

# யாழ். கியூடெக் நிறுவனத்தில் சர்வதேச மனித உரிமைகள் தினம்



யாழ்ப்பாணம், டிசெ. 11

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட "அனைவருக்கும் கௌரவம், சுதந்திரம் மற்றும் நீதி" என்னும் தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தினமானது நேற்று யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவ னத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிப்பாளர் த. கனகராஜ், சட்டத்தரணிகள், சிறுவர்கள் மற்றும் மகளிர் விடயங்கள் தொடர் பான உத்தியோகத்தர்கள், யாழ். பொலிஸார், சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



# அசாதரண காலநிலை காரணமாக வடக்கில் 600 கால்நடைகள் பலி!

## மேலும் 400 கால்நடைகள் படுக்கையில்

கிளிநொச்சி, டிசெ. 11

நாட்டில் அசாதரணமாக நிலவும் கடும் குளிர், விடாத மழை, அதனால் ஏற்பட்ட பெரு வெள்ளம், சுழன்றடித்த புயல் காற்று ஆகிய சீரற்ற காலநிலை காரணமாக கடந்த இரு நாள்க ளில் மட்டும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லை தீவு மாவட் டங்களில் சுமார் 600 கால்நடை கள் ஒரேடியாக உயிரிழந்துள்ளன. மேலும் 400 கால்நடைகள் வரை படுக்கையில் கிடக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது

உத்தியோகபூர்வமாக செய்யப் பட்ட தரவுகளின் அடிப்படையில் 367 கால் நடைகள் உயிரிழந்துள் ளன என வடக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் சி.வசீகரன் தெரிவித்தார்.



நாட்டில் ஏற்பட்ட அதிக குளிரு டன் கூடிய காலநிலையின் காரணமாக ஒரே நாளில் அதிக கால்நடைகள் உயி ரிழந்துள்ளன. இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் 168 கால்நடைகள் உயிரிழந்துள்ள அதேநேரம் மேலும் 162 கால் நடைகள் முழுமையாக இயங் காத நிலையில் வீழ்ந்து கிடக்கின்றன. இருப்பினும் சிகிச்சைகள் இடம்பெறு கின்றன. இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 120 கால்நட்டைகள் உயிரிழந்துள்ளன. 159 கால் நடைகள் படுக்கையில் விழுந்து கிடக்கின்றன. யாழ்ப்பாணம் மாவட் டத்தில் 49 மாடுகளின் உயிரிழப்பு உறுதி செய்யப் பட்டுள்ள அதேநேரம் 17 மாடு கள் அதிக நோய் வாய்ப்பட் டுள்ளன. யாழ்ப்பாணப் பிரி வில் வரும் மருதங்கேணியில் ஒரு பட்டியில் மட்டும் 58 உயர் இன ஆடுகள் கூண்டோடு மரணித்துள்ளன.

இதேநேரம் அதிக நோய் வாய்ப்பட்ட எஞ்சிய 338 கால் நடைகளுக்கும் சிகிச்சை அளிப் பதற்கான மருந்துப் பொருள் களைப் பெற்றுக் கொள்வதி லும் பெரும் நெருக்கடி நிலை அல்லது தட்டுப்பாடு நிலவுவதாக கால் நடை வளர்ப்பு உரிமையாளர்கள் எமக்கு தெரிவிக்கும்போது எம்மாலும் உடனடியாக மாற்று ஏற்பாடுகளை செய்ய முடியவில்லை என்றார் பணிப் பாளர் சி.வசீகரன். (அ)

# இலங்கை வந்த தமிழக சிற்பி நுவரெலியாவில் திடீர் மரணம்!

கொழும்பு, டிசெ. 11

நுவரெலியா ஹய்பொரஸ்ட் இல.03 பிரிவு நகரில் அமைந்துள்ள ஸ்ரீ மஹா விஷ்னு ஆலயத்தில் சிற்பி பணியில் ஈடுபட்டிருந்த இந்திய பிரஜை ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நன்னைலன் திருவூர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பக்கிரி சாமி புருசோத்தமன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஹய்பொரஸ்ட் இல.03 பிரிவு நகரில் பழமையான ஸ்ரீ மஹா விஷ்ணு ஆலய புனரமைப்புக்கு சிற்பி பணிக்காக தமிழ் நாட்டிலிருந்து இவரும் இன்னொருவரும் கடந்த பெப்ரவரி மாதம் வருகை தந்துள் ளார். இவர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து சிலை வடிவமைப்புப் பணிகளை செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன் தினம் காலை இவர்கள் தமது வழமையான பணியை ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது மயக்கம் வருவதாகவும் குடிக்க தண்ணீர் தரும்படியும் உயிரிழந்த வர் கேட்டுள்ளார்.

பின்னர் அங்கிருந்தவர்கள் தண்ணீர் எடுத்துவரும் முன்னர் இவர் மயங்கி கீழே விழுந்துள்ளார். இதனைத் தொடர்ந்து ஊர்மக்களின் உதவியுடன் ஹய்பொரஸ்ட் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவரை பரிசோ தித்த வைத்தியர் இவர் இறந்து விட்டதாக அறிவித்துள்ளார்.

உயிரிழந்த இந்திய பிரஜையின் உடல் மரண விசாரணையின் பின்னர் பிரேத பரி சோதணைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டது. (அ)

# 50 குடும்பங்களைச் சேர்ந்த 184 பேர் மன்னாரில் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தில் மாண்டஸ் சூறாவளியின் தாக்கம் காரணமாக 50 குடும்பங்களைச் சேர்ந்த 184 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத் துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உத விப் பணிப் பாளர் கே.திலீபன் தெரி விக்கையில்,,

மன்னார் மாவட்டத்தில் வியாழக் கிழமை இரவு மாண்டஸ் சூறாவளி யின் தாக்கத்தால் மன்னார் , நானாட் டான், மாந்தை மேற்கு, மடு ஆகிய நான்கு பிர தேச செயலாளர் பிரிவுக ளில் உள்ள கிராமங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. மீன்பிடி வலை கள் கடல் நீரில் இழுத்துச் செல்லப் பட்டு காணாமல் போய் உள்ளன.

இதன் காரணமாக மன்னார் மாவட் டத்தில் 50 குடும்பங்களைச் சார்ந்த 184 நபர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகி உள்ளனர். 11 வீடுகள், ஒரு சிறு வியா பார குடிசை மற்றும் கடை சேதம டைந்துள்ளது. 100க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சேதமாகியுள்ளன.

மீன்பிடி படகுகள் பாதிப்புகளுக்கு உள்ளாகி உள்ளது. அத்தோடு 10 மீன் பிடி வலைகள் கடலுக்குள் இழுத்துச் செல்லப் பட்டு உள்ளது. 7 படகு சேதம டைந்துள்ளது. பல ஏக்கர் விவ சாய செய்கையும் பாதிக்கப்பட்டுள் ளது-என்றார். (அ)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குறித்து இறுதி தீர்மானம் விரைவில் வரும்!

கொழும்பு, டிசெ. 11




ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ், ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் கிரவுண்ட் சர்வீசஸ் நிர் வாகத்தை ஏதேனும் முத லீட்டாளருக்கு அல்லது தனித்தனியாக வழங்குவது குறித்து விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அந்த நிறுவனங்களை மறுசீர மைப்பதற்கான வழிகாட்டுதல்களை திறைசேரியின் குழுவொன்று வழங் கும் என்றும் அதன் பின்னர் அமைச் சரவை இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த நிறுவனங்களின் மறுசீர மைப்பு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை முத லில் நாடாளு மன் றத்திற்கு தெரியப் படுத்தப்படும் என் றும் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட் டார்.

பெருந்தொகை யில் புரளும் ஸ்ரீ லங்கன் விமான சேவையை மறுசீர மைப்பதைத் தவிர வேறு வழி யில்லை என கூறிய அமைச்சர், நிறுவனத்தை மறுசீரமைப் பதை மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே எதிர்க் கிறது என்றார்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறு வனம் நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கடன்பட்டுள் ளதாகவும், விமான சேவைக்கு சொந் தமான அனைத்து விமானங்களும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சஜித் பிரேமதாஸ, மத்தும பண்டாரவை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு!

கொழும்பு, டிசெ. 11

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அதன் பொதுச் செய லாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர், ஐக்கிய மக்கள் சக்தியில் பதவிகளை வகிப் பதற்கு தடை விதிக்கக்கூடாதமைக்கான காரணங்களை ஜனவரி 25 ஆம் திகதி நீதி மன்றத்தில் உண்மைகளை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன் தினம் அவர்களுக்கு அழைப்பாணை களை அனுப்பியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ மற்றும் அதன் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியில் பதவி வகித்த மைக்கு எதிராக இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தாக்கல் செய்த வழக்கை பரிசீலித்த கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி பூர்ணிமா பரணகம இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலமைப் பின் பிரகாரம் வெளிக் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒருவர் ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்க முடியாது என மனுதாரர் டயானா கமகே மனுவில் குறிப்பிட்டார்.

சஜித் பிரேமதாஸ மற்றும் ரஞ்சித் மத் தும பண்டார ஆகியோர் வேறு கட்சியின் உறுப்பினர்களாக செயற்படுவதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி தமக்கு எதிராக முன்னெடுத்த ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் வேறொரு கட்சியைச் சேர்ந் தவர்கள் எனத் தோன்றுவதால், அவர்கள் ஐக் கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாக இருக்க முடியாது என்றும் அவர் புகாரில் குறிப்பிட் டுள்ளார். சஜித் பிரேமதாச மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தியின் பதவிகளில் பணியாற்றுவதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறும் அவர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் விவரங்கள் திரட்டல்

கொழும்பு, டிசெ. 11

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள இடர் நிலை மைகளினால் நாட்டின் பல பாகங்களி லும் பாடசாலைகள் சேதமடைந்துள் ளன. அவ்வாறு சேதமடைந்த பாட சாலைகளின் தகவல்களையும் சேத மதிப்பீடுகளையும் அந்தந்த மாகா ணங்களின் கல்வி ப் பணிப்பாளர்களிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாடசாலைகளின் தகவல்கள் கிடைக் கப் பெற்றதும் சேதங்களை சீர்செய்து பாடசாலைகளை உடன் இயக்கி மாண வர்களின் கற்றல்-கற்பித்தல் செயற் பாடுகளை வழமைக்கு கொண்டு வர திட்டமிட்டுருக்கின்றோம்.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக பல குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன. மலையகத்தை பொறுத்த வரை பதுளை மாவட்டமே அதிகளவு சேதங்களை எதிர்நோக்கியுள்ளது.இங்கு சுமார் 900க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் இழந்து நிர்கதிக்கு ஆளாகி யுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலை யத்துடன் நான் தொடர்புகளை ஏற்ப டுத்தி, உடனடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு தலா 10 ஆயி ரம் வழங்கவும்,உலர் உணவுப் பொருட் களையும் வழங்க நடவடிக்கைகளை அந் நிலையம் மேற்கொண்டுள்ளது.

கடும் காற்றின் காரணமாக கடுமை யான சேதங்களை எதிர்நோக்கியுள்ள வீடுகளை திருத்தி வழமை நிலைக்கு கொண்டு வர வெறும் 10ஆயிரம் ரூபாய் பணம் போதுமானதாக இல்லை என்பது நாமறிந்த விடயம், ஆனால் அனர்த்த நிலைமையின்போது செயற்பட வேண் டிய நடைமுறைகள் தொடர்பான சுற்ற றிக்கையின் காரணமாக அனர்த்த முகா மைத்துவ நிலையத்திற்கு 10ஆயிரத் திற்கும் அதிகமான தொகையை வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்நிலையில் குறித்த வீடுகளை முழுமை யாக சீர்திருத்தம் செய்து வழமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் விசேட அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்து தேவையான நிதியைப் பெற்று அவற்றை திருத்தம் செய்யவேண்டிய கட்டாயத் தேவை உள்ளது.

அதை அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் துரிதமாக மேற்கொள்ளவதற்கு உயர்மட்ட நடவ டிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்-என் றார். (அ)

ஈழநாடு
Eelanadu
11.12.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பு?

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில், எதிர்வரும் 13ஆம் திகதி கட்சிகள் சந்திக்கவுள்ளன. இந்த சந்திப்பின் பின்னர்தான், சந்திப்பின் நோக்கம் மற்றும் சந்திப்பின் எதிர்காலம் தொடர்பில் நாம் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியும். தமிழர் ஒரு தரப்பென்னும் அடிப்படையில் இந்த பேச்சுவார்த்தை இடம்பெற வில்லை. அரசியல் தீர்வு தொடர்பில் ஆராய்வதற்கான ஒரு ஒன்றுகூட லாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. இந்த பின்னணியில் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணும் முயற்சியில் மூன்றாம் தரப்பொன்றை ஈடுபடுத்த வேண்டுமென்னும் வாதம் தமிழ் சூழலில் முன்வைக்கப்படுகின்றது.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ, அந்த மூன்றாம் தரப்பு இந்தியாவாக இருக்க வேண்டுமென்று வெளிப்படையா கவே அறிவித்திருக்கின்றது. அதே வேளை, புத்திஜீவிகள் சிலரும் இந்தக் கருத்தை வெளிப்படையாக முன்வைத்திருக்கின்றனர். இது தொடர்பில் ஈழநாடு ஏற்கவே தெளிவான பார்வையை முன்வைத்திருக்கின்றது. மூன்றாம் தரப்பென்னும் வாதம் எழுமானால், அது இந்தியாவாகவே இருக்க முடியுமென்னும் பார்வையை நாம் தெளிவாக குறிப்பிட்டிருந் தோம். எமது நிலைப்பாட்டை இப்போது பலரும் முன்வைக்கின்றனர்.

மூன்றாம் தரப்பில் ஒரு அடிப்படையான பிரச்னையுண்டு. அதாவது, மூன்றாம் தரப்பென்பது, பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ள இரண்டு தரப் புக்களின் விருப்பத்தினடிப்படையில்தான், இடம்பெற முடியும். தமிழர்கள் மட்டும் மூன்றாம் தரப்பின் அவசியம் தொடர்பில் பேசிப் பயனில்லை. அரசாங்கம் மூன்றாம் தரப்பை நிராகரித்தால், அதன் பின்னர் தமிழர் தரப்பால் எதுவும் செய்ய முடியாது. வேண்டுமானால், பேச்சுவார்த்தையை தவிர்க்க முடியும்.

ஆனால் ஒரு இறைமையுள்ள நாடென்னும் அடிப்படையில், மூன்றாம்தரப்பின் தலையீட்டை, இலங்கையின் மீது எவரும் நிர்ப்பந் திக்க முடியாது. இந்த விடயத்தில் வெளியார் தலையீடு செய்வதற்கான வாய்ப்பில்லை. அரசாங்கமோ, உள்நாட்டு பொறிமுறைகளின் மூலம் தான் தீர்வென்பதை தொடர்ந்தும் அழுத்திவருகின்றது. இந்த நிலையில் எவ்வாறு மூன்றாம் தரப்பொன்றை ஈடுபடுத்த முடியும்? இதனை சமா ளிப்பதற்கான மாற்றுத் தெரிவிருக்கின்றதா?

ஒரு தெரிவுண்டு. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கையிலெடுப்பதன் ஊடாக, இந்தியாவை ஒரு மூன்றாம் தரப்பாக இணைக்க முடியும். இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒரே நேரத்தில், இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வின் அடிப்படையாகவும் அதேவேளை, ஒரு மூன்றாம் தரப்பாகவும் தொழிற்படக் கூடியதாகும். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா எந்த வேளையிலும், இனப்பிரச்னைக்கான தீர்வில் தலையீடு செய்ய முடியும். அதற்கான சட்ட உரித்தை இந்தியா கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் விடயங்களை கையாளும் போது, அரசாங்கத்தினால் அதனை ஒரு கட்டத்திற்குமேல் எதிர்க்கவும் முடியாது. ஆனால் பிறிதொரு (நாடு) மூன்றாம் தரப்பென்றால் அதனை அரசாங்கம் இலகுவாக நிராகரிக்க முடியும். தவிர, ஒரு பிராந்திய சக்தியென்னும் வகையில், பிறிதொரு மூன்றாம் தரப்பை இந்தியா பரிந்துரைக்கவும் மாட்டாது. ஏனெனில் அது இந்தியாவின் இயலாமையை இந்தியா ஒப்புக் கொள்வதாகிவிடும்.

எனவே மூன்றாம் தரப்பென்றால் அது இந்தியாதான். இந்தியா இல்லையென்றால் மூன்றாம்தரப்பு சாத்தியமாகாது. ஒரு வேளை, திம்புவில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது போல், இந்தியாவிற்கு நெருக்க மானதொரு சார்க் நாட்டை இந்தியா விரும்பினால் ஈடுபடுத்த முடியும். ஆனால் அதனையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசாங் கம் விரும்பினாலும் தவிர்க்க முடியாத விடயமென்றால், அது இந்தியத் தலையீடு மட்டும்தான். காரணம், இந்திய-இலங்கை ஒப்பந்தம் காலம் தோறும், இந்தியாவின் தலையீட்டுக்கான வாய்ப்பை தன்னகத்தே கொண்டிருக்கின்றது. எனவே தற்போதுள்ள சூழலில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை கையிலெடுப்பதன் ஊடாக மட்டுமே, ஈழத் தமிழர்கள் மூன்றாம் தரப்பு விவகாரத்தை கையாள முடியும்.

# ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயரின் இலட்சார்ச்சனைப் பெருவிழா



வற்றாத செல்வமும், வளம்மிகு சோலை களும் வானுயர் மலைகளும், பாய்ந் தோடும் நதிகளும் பக்தி நெறி வழுவா மக்க ளும் நிறைந்த ஞான பூமி யான ஈழமணித் திரு நாட் டில் புகழ் பூத்த தேச பக்தர்கள் நிறைந்த யாழ்ப் பாணத்தில் மகிமை மிக்க மருதனார் மடத்தில் வானுயர வளர்ந்து நின்று காவல்புரி யும் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் பெரு மானுக்கு இலட்சார்சனைப் பெருவிழா கோலாகலமாக ஆரம்பித்துள்ளது.

கையில் அர்ச்சனை தட்டேந்தி பக்தியுடன் வரிசை தவறாது பக்தர்கள் மருதனார்மடம் நோக்கி நாலாபக்கமிருந்தும் வரும் காட்சி மிகுந்த பரவசத்தையூட்டும்.

மந்திர ஒலியும் மணிநாதமும் பஜனை இசையும் கலந்த சுந்தர ஆஞ்சநேயர் திருக் கோவிலில் சுபகிருது வருஷம் கார்த்திகை 25ம் நாள் ஞாயிறு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி 22.12.2022 வியாழக்கிழமை ஹனமத் ஜெயந்திதின விழாவுடன் இலட் சார்சபை பெருவிழா நிறைவடையும்.

ஸ்ரீராம பிரான் அவதரித்த பாரத புண் ணிய பூமியில் எங்கெல்லாம் ஸ்ரீராமனின் பாதங்கள் பட்டனவோ அங்கெல்லாம் எமத பாதங்களை வைத்தாலே போதும் எம்மோடி ஒட்டிவந்த பாவங்கள் பதறியடித்துக் கொண்டு பறந்து போய்விடும் ஸ்ரீராமன் மீது பக்தி கொண்டு சிரத்தையுடன் அவன் பாதங்களில் சரணாகதி செய்தாலே போதும் சர்வ வல் லமை பெற்ற அந்தப் பாதங்கள் எமக்க சகல சௌகரியங்களையும் அள்ளிக் கொடுக்கத் தவறாது.

ராவணனுக்கு ராமனை நன்றாகவே தெரிந் திருந்தது ஸ்ரீராமனிடம் அவன் பூரண சரணா கதி அடைந்ததன் அதனாலேயே இலங்கைக்கு அதிபதியாகும் அரிய வாய்ப்பு பெற்றான் ஸ்ரீராமனின் பாதங்களக்கு அவ்வளவு மகிமை யுண்டு பாதங்களுக்கு மட்டுமே மகிமை ராம நாதத்திற்கு இதைவிட அதிகமான வலிமை யுண்டு

அருள் வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவி லில் ஹனுமனுக்கு ஜெயந்தி இலட்சார்ச்சனை பெருவிழாவையொட்டி மருதனார்மடத்தில் உள்ள சந்தைகள் வர்த்தக நிறுவனங்கள், பாட சாலைகள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் எல் லாம் வாலில் வாழைமரங்கள் நாட்டி மங்கள தோரணங்கள் கட்டி மலர்மாலைகளால் அலங்கரித்து காணப்படுகின்றன. ஆஞ்சநேயர் கோயிலின் ஆதினகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்த ரேஸ்வரகுருக்கள் தலைமையிலான அந்தணர் கள் வேதம் ஓதி ஆஞ்சநேயபெருமானுக்கு பூஜைகள் அபிஷேகங்கள் மிக நேர்த்தியாக நிறைவேற்றும் காட்சி பக்தி பரவசமூட்டு வதாக அமையும்.

இலட்சார்சனை பெருவிழாவில பதின் மூன்று தினங்களும் இசை ஆராதனை நிகழ்வு கள் அதிசிறந்த கலைஞர்களின் கலைஞானத்தால் உயர்ந்து விளங்குகிறது. தவில் கச்சேரிகள், நாதஸ்வர போட்டிகள், வாய்ப்பாட்டு டன் வில்லிசைகள் உட்பட பல கலை நிகழ்வுகள் இந்த 13நாட்களும் இடம்பெறு வது வேறெந்த ஆலயங் களிலும் இல்லாத தனி சிறப்பு மிக்கதாகும். பக்தர் களும் இந்த பதின்மூன்று தினங்களும் பசியாற அன்ன தான நிகழ்வும் விசேடமாக நடைபெறும்.

ஆலயத்தின் வாசவில் ஆஞ்சநேயரின் எழுபத்தைந்தடி உயரமான சிலையை கண்டு பிரமிப்படையாதோர் எவருமில்லை என லாம். தழிழ்நாடு காரக்காலைச் சேர்ந்த இந்திய சிற்பிகள் குழுவினர் க.விஜயன் ஸ்தபதியின் தலைமையில் மிகக்குறைந்த நாட்களில் நிறைவு செய்த இச்சிலையானது வடமாகாணத்தில் உள்ள வேறெந்த ஆலயத்தி லும் காணமுடியாத சிற்பம்சம் நிறைந்ததாக கருதப்படுகிறது.


தைத்திங்கள் 2001ம் ஆண்டு கும்பாபிஷே கத்தினை தொடர்ந்து மூன்றாம் வருடம் ராஜ கோபுர கும்பாபிஷேகத்தினையும் ஆறாம் வருடம் விஷ்பரூப கும்பாபிஷேகத்தினையும் அதே ஆண்டு பஞ்சமுக ஆஞ்சநேயர் உற்சவ மூர்த்தியையும் உருவாக்கியமை மிகவும் பாராட்டப்பட்டது.

2006ம் ஆண்டு முதல் தடவையாக தேர் நேர்த்தியாக செதுக்கப்பட்டு வெள்ளோட் டம் நடைபெற்றது. சுவிஸ்லாந்தில் வதியும் காரைநகரை சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் திரு வாளர் கதிர்காமன் தனலட்சுமி குடும்பத் தினர் தேர் தயாரிப்புக்கான முழுச் செலவை யும் பொறுப்பேற்று நிறைவு செய்தமை பக்தர் களால் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

ஆஞ்சநேயரின் மூல நட்சத்திரத்தன்று பூஜைகளும் பக்தர்களுக்கு பன்னிரு மாதமும் ஆலயத்தில விசேட அன்னதானமும் அபிஷே கமும் இடம்பெறுகின்றது. ஒவ்வொரு வருட மும் கார்த்திகை தீபத்திருநாளில் உயிரிழந்த ஆத்மாக்களின் ஞாபகமாக விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று உயிரிழந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது. "வாயு குமரனைப் போற்றி வாழ்வில் வளம் பெறுவோம்"

**சபா. புஷ்பநாதன்**

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# போதைப் பகிர்வு

**கணபதி சர்வானந்தா** — பகிர்வு -59



தேசிய கலை இலக்கியப் பேரவை கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் 07.12.2022 அன்று மாலை 4 மணியளவில் ஒரு நிகழ்வு நடைபெற்றது. சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் அதனை ஒழுங்குபடுத்தியிருந்தது. "சமூக நெருக்கடிகளும் போதைக் கலாசாரமும்" என்ற தலைப்பிலமைந்த அந்த நிகழ்வில் பலர் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

போருக்குப் பின்னால் சமூகத்துக்குத் தேவைப் பட்ட மறு சீரமைப்பைக் கொஞ்சம் கூடக் கவனத்தில் கொள்ளாது சந்திக்குச் சந்தி சாராயக்கடைகளைத் திறக்க அனுமதி வழங்கிய அரசை அப்போது தட்டிக் கேட்டிருக்க வேண்டும். அதனைச் செய்யாது விட்டுவிட்டோம். அந்த அனுமதிகளைப் பெற்றுச் சாராயக்கடைகளைத் திறந்தவர்கள் வேறு யாருமல்ல, நம்மவர்கள். சமூகப்பொறுப்பைச் சொல்லி அவர்களை நாம் தடுத்திருக்க வேண்டும். பேசாது இருந்து விட்டோம்.

அதனைத் தொடர்ந்து வந்த கேரளக் கஞ்சாப் பாவனையாளர்களைக் கண்டறிந்து அவர்களைத் தண்டித்த அளவுக்கு அதன் மூலதாரிகளைக் கண்டறியத் தவறிய அதிகாரிகள் பற்றிய பின்னணி களைத் தேட யாரும் முயற்சிக்கவில்லை. கேரளக் கஞ்சாவின் இயங்குதளமாக யாழ்.மண் மாறிக் கொண்டபோது பலர் அது பற்றிப் பேசினர். இருந்தும் அதனைத் தடுக்கச் சமூகத்தால் கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய அழுத்தத்தை யாரும் கொடுக்கவில்லை. போதைப்பொருளின் சமூக விளைவை அறிய... உதய சீலன் கற்கண்டு என்பவரின் அனுபவப் பதிவொன்றை முகநூலில் கண்டேன். அதன் சாரம்சத்தை, உங்க ளுக்காக..!

மணி நேரம் இரவு பதினொன்றைக் கடந்திருந்தது. கடும் காற்றும் மழையும் என்னை எதிர்க்க அதற்கு எதிர்வினையாற்றியவாறு நான் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். யாழ் கச்சேரியைக்கடந்து பிரதான வீதியூடாக வந்துகொண் டிருந்த போது மின்சாரக் கம்பத்தில் மோதியபடி ஒரு மோட்டார் சைக்கிள். அதிலே ஓர் உருவம் சரிந்து கிடந்தது. அந்த உருவம் மதிலை நோக்கிச் சரிந்து கிடந்ததால் முகம் தெரியவில்லை.

இளைஞனாக இருக்கலாம். பதறிப் போய்விட்டேன். அந்த இருட்டுக்குள் கடும் மழை மற்றும் காற்றுக்குள் என்னால் தனியாக ஏதும் செய்துவிட முடியுமா என்று கூட எனக்குத் தெரியவில்லை. ஆளரவமற்றுக்கிடந்த வீதியில் வீழ்ந்து கிடப்பவர் எதனால் கிடக் கிறார்? விபத்தாக இருக்குமோ? காற்றினால் ஏற்பட்ட மின்சாரத் தாக்கமாகக் கூட .... வேலைக்கு சென்று வீடு திரும்பும் ஒருவராக... ஒரு குடும்பத்தலைவனாக ? ஏதேனும் அவசர விடயமாக நகருக்கு வந்து திரும்பும் ஒருவராக.. ஏன் அவசர மருந்து வாங்க வந்தவராகக் கூட இருக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. நிச்சயமாக அவரது வரவை எதிர்பார்த்து யாரோ காத்திருப்பர்? அவர்களுக்காகவேனும் அவருக்கு உதவ வேண்டுமே! அவ்வேளையில் அவரைத் தனியாக விட்டுச் செல்ல மனம் கேட்கவில்லை.

அவசர சேவை இலக்கத்திற்கு அழைத்தேன். அடுத்த நிமிடமே அவசர ஊர்தி வந்தது. வந்தவரிடம் விடயத்தைக் கூறி விழுந்து கிடந்தவர் பற்றிய தக வல்களை எனக்கும் அறியத் தாருங்கள் என்று விடை பெற்றேன். ஏறத்தாழ முப்பது நிமிடங்களில் அழைப்பு வந்தது.

" பார்த்தோம். வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. ஆள் " ட்ரக்ஸ்" அடிச்சிருக்கிறார். இந்த மழையில் அவரை அங்கே விட்டுச் செல்ல முடியாது. அருகி லுள்ள கடை வாசலில் கொண்டு வந்து இருத்தி விட்டி ருக்கிறோம்." என்றவாறு வந்தவர் தனது அடுத்த கட மைக்குத் தயாராகிவிட்டார்.

போதை தடுப்புப் பற்றிய உயர் மட்டக் கூட்டங் களும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் அடி மட்ட மனிதர்களை என்றுமே எட்டுவதில்லை. இது ஒரு நாளில் தொடங்கியதல்ல. போதைப்பொருள் என்ற விதை முளைத்து, வேர்விட்டு, மரமாகி, பூத்துக் காய்த்துக் கனியாகி அதன் பல்லாயிரக்கணக்கான வித்துக்கள் சமூகம் முழுக்கப் பரவிக் கிடக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மரமாகி கனி உவந்து விதை பரப்ப முதல் அதனைத் தடுக்காவிடில், அடுத்த ஒரு தலைமுறையே இங்கு இருக்கப் போவதில்லை.

ஒவ்வொரு குடும்பத்தினரும் உங்கள் உங்கள் குடும்பத்தை மாத்திரம் பார்த்து கொண்டாலே போதுமானது. ஏனெனில் சமூக விழிப்புணர்வு, சமூக மாற்றம் என்ற நிலையை நாம் எப்போதே கடந்து விட்டோம். "அரசியலும் சட்டமும் நினைத்தால் ஓர் இரவில் இதனை ஒழித்து விடலாம்" என்று பேசிக்கொண்டு இருப்பது பயனற்றது. தற்போது உங்கள் வீட்டைச் சுற்றி மட்டும் வேலி இடுங்கள். ஒவ்வொருவரும் உங்கள் குடும்பத்தை எல்லையிட்டுக் காத்து நில்லுங்கள். சமூகத்தைக் காக்கலாம். வேறு வழி இல்லை!

# இந்தவார ராசிபலன் 11.12.2022 - 17.12.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00** **ராகு காலம் : 04.30 - 06.00** **திதி : திரிதியை**

**டிசெம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - கார்த்திகை 25**

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குடும்பத்தில் சுபநிகழ்ச்சிக்கு வாய்ப்புண்டாகும். வரவுகள் அதிகரிக்கும். உங்கள் செயல்களில் லாபம் காண்பீர்கள். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். செயல்களில் அனுகூலம் தோன்றும். அரசு வழியிலான முயற்சிகள் பலிதமாகும். முயற்சிகள் வெற்றியாகும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். புதிய நட்புகளிடம் அதிகமான நெருக்கம் வேண்டாம்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்காலம் குறித்த செயல்களில் ஈடுபடுவீர்கள். திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். பொறுப்பு அதிகரிக்கும். வெளியூர் பயணம் லாபம் தரும். செலவுக்கேற்ற வரவு வந்து சேரும். புதிய முயற்சி லாபமாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. குடும்பத்திற்காக சுபச்செலவுகள் ஏற்படும் என்றாலும் அதற்கேற்ப வரவும் உண்டாகும். விலகிச்சென்ற உறவினர்கள் இல்லம் தேடி வருவர். திட்டமிட்டு செயல்பட்டு வெற்றி காண்பீர்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செலவு அதிகரிக்கும். அலைச்சல் உண்டாகும். அதன்பின் மனம் மகிழும்படியான நிலை ஏற்படும். செயலில் வேகம் தோன் றும். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். விருப்பம் பூர்த் தியாகும். அதன்பின் செலவுகளில் கவனமும் பணத்தில் பாதுகாப்பும் தேவை. எண்ணம் நிறைவேறும். எண்ணங்கள் நிறைவேறும். செயல்களில் வேகம் அதிகரிக்கும். அந்நிய மனிதரின் உதவி கிடைக்கும். மனதில் இருந்த குழப்பங்கள் விலகும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

செலவு அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டாகும். அதன்பின் திட்டமிட்டு செயல்படுவீர்கள். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். வருமானத்திற்குரிய வழிகள் தெரியும். சுபச்செலவு உண்டாகும். புதிய இடம் வாங்கும் முயற்சி நிறைவேறும். வியாபாரத்தை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். திருப்பம் உண்டாகும். வரவுகள் வரத் தொடங்கும். வேலை தேடியவர்களுக்கு நல்ல தகவல் வந்து சேரும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

முயற்சியில் வெற்றி அடைவீர்கள். தொழிலில் இருந்த தடைகள் விலகும். அரசு வழியில் நன்மை உண்டாகும். செலவு அதிகரிக்கும். முயற்சியில் இருந்த தடைகள் விலகி ஆதாய நிலை உண்டாகும். அரசியல் வாதிகளின் செல்வாக்கு உயரும். அதன்பின் எதிர்பாராத செலவுகளும் பயணமும் உண்டாகும். புதிய முயற்சி லாபமாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். முயற்சிகள் வெற்றியாகும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நீங்கள் மேற்கொள்ளும் செயல்கள் வெற்றியாகும். வியாபாரம், தொழிலில் திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். ஒரு சிலருக்கு புதிய வேலை அமையும். செலவுகள் அதிகரிக்கும். முயற்சிகள் வெற் றியாகும். வருமானம் அதிகரிக்கும். பொன் பொருள் சேரும். செல வில் கவனம் தேவை. லாபம் காண்பீர்கள். அணுகுமுறையால் எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

தடைபட்ட வருவாய் வரத்தொடங்கும். வியாபாரம், தொழில் நிலையில் லாபம் அதிகரிக்கும். சங்கடம் தீரும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். அந்நியரால் லாபம் உண்டாகும். கடனை அடைப்பீர்கள். உங்கள் செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். விருப்பங்கள் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். எதிர்பார்த்த ஆதாயம் உண்டாகும். வரவு அதிகரிக்கும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

முயற்சியைத் தவிர்ப்பதுடன் கவனமாக செயல்படவும். அதன்பின் தடைபட்ட செயல்கள் வெற்றி பெறும். தடைகளும், தோல்வியும் உண்டாகலாம். நிதானித்து செயல்படுங்கள். முயற்சி உங்களுக்கு சாதகமாகும். லாபம் கூடும். செயல்களில் தடை, தாமதங்களும் ஏற்படும். அதன்பின் திட்டமிட்ட செயல்கள் நடந்தேறும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்துவீர்கள். சிலருக்கு திருமண யோகம் கூடி வரும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

நீங்கள் ஈடுபடும் செயல்களில் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். புதிய முயற்சிகள் வேண்டாம். எதிர்பார்த்த வெற்றியை அடைவீர்கள். நெருக்கடிக்கு ஆளாவீர்கள். வாரத்தின் முற்பகுதியில் நீங்கள் திட்டமிட்டிருந்த செயல்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். உங்கள் செயல்களில் தடைகள் தோன்றும் என்பதால் விழிப்புணர்வு அவசியம்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நினைத்ததை சாதிப்பீர்கள். விரும்பியதை அடைவீர்கள். எதிரி தொல்லை விலகும். எச்சரிக்கை அவசியம். செயல்களில் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த சங்கடம் விலகும். தடைகளை சந்திப்பீர்கள். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்னை தீரும். எதிர்பார்ப்பை பிள்ளைகள் நிறைவேற்றுவார்கள். தொழிலில் இருந்த மந்த நிலை அகலும். நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

சொத்து பிரச்னை தலையெடுக்கும். பொறுப்பு அதிகரிக்கும். துணிச்சலுடன் செயல்பட்டு விரும்பியதை அடைவீர்கள். உங்கள் முயற்சிகளில் விழிப்புணர்வு தேவை. மனம் மகிழும்படியான சம்பவம் நடந்தேறும். முயற்சியில் கவனம் செல்லும். முயற்சிகள் வெற்றியாகும் என்றாலும் செயல்களில் நிதானம் அவசியம். புதிய சொத்து வாங்கும் போது வில்லங்கம் பாருங்கள். அடுத்தவரை நம்பி எந்த செயலிலும் ஈடுபடாதீர்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

முயற்சிகள் தாமதமாகும். பொறுப்பு அதிகரிக்கும். வேலைப்பளு கூடும். பிள்ளைகள் வழியே சில சங்கடங்கள் உண்டாகும். முயற்சி வெற்றியாகும். கவனமாக செயல்படுங்கள். வார்த்தைகளில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். இல்லையெனில் அதனால் சங்கடம் ஏற்படலாம். உங்கள் அணுகுமுறை மாறும். அதனால் லாப நிலை உண்டாகும். வாரத்தின் முற்பகுதியில் தடை, தாமதம் உண்டாகும். குடும்பத்தில் சில பிரச்னைகள் தோன்றும். நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

# மீண்டும் தொடங்கும் வான், கடல்வழிப் பயணங்கள்



சென்னை மடல்
-பகவான் சிங்-

'எயர் அலையன்ஸ்' அதிகாரி, நண்பர் பிரவீன் சில நாட்களுக்கு முன் எனக்கு போன் செய்து, சென்னை - யாழ்ப்பாணம் விமானப் போக்குவரத்து மீண்டும் தொடங்குகிறது என்று சொன்னபோது எனக்கு மிக்க மகிழ்ச்சியும் மிகுந்த எதிர்பார்ப்பும் நிரம்பி வழிந்தது. இந்தத் திங்களன்று (டிசம்பர் 12) காலை 09:25 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டு, யாழ்ப் பாணத்துக்கு அருகில் பலாலி விமான நிலையத்திற்கு இந்தத் தொடக்க விமானம் 10:50 மணி அளவில் வந்து சேரும் என்று பிரவீன் சொன்னார். திரும்பும் விமானம், யாழ்ப்பாணத்திலிருந்து 11:50க்குப் புறப்பட்டுச் சென் னைக்கு 13:15க்கு வந்து சேரும் என்றும் அவர் கூறினார். மிக்க மகிழ்ச்சி.

அதேநேரம், மனதில் எங்கேயோ ஒரு மூலையில் சிறியளவில் சோகம். காரணம், கடந்த முறை எயர் அலையன்ஸ் சென்னை - யாழ்ப்பாணம் விமானப் போக்குவரத்துச் சேவை தொடங்கும்போது, அந்த முதல் பயணத்தில் பத்திரிகையாளர்கள் குழுவில் நானும் இருந்தேன். எனக்கு நன்றாகவே நினைவில் நிற்கிறது அந்தப் பயணம் - 17 ஒக்ரோபர் 2019.

மிகுந்த உற்சாகத்துடன் என் இனிய யாழ் நகரத்துப் பயணத்தைப் பற்றியும் அதனால் உண்டாகக் கூடும் நேர்மறையான தாக்கம் குறித்தும் என் 'டெக்கான் க்ரானிக்கல்' நாளிதழில் விரிவாக விளக்கி மகிழ்ந்தேன்.

முதல் விமானத்தை வரவேற்கும் கோலாகல நிகழ்ச்சி யில் கூடியிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அர்ஜ/னா ரணதுங்க உள்ளிட்ட பிரமுகர்கள், இந்திய - இலங்கை உறவுகள் வேகமாக வளர்ந்து வருவதாக வாக்குறுதிகள் அளித்தனர். இந்தியா - இலங்கை இடையிலான வர்த்தகம் - குறிப் பாக, தமிழகத்துக்கும் 93 சதவிகிதம் தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணம் பகுதிக்கும் இடையிலான வர்த்தகம், இந்த விமானப் போக்குவரத்தினால் வெகுவாக முன்னே றும் என்று அங்கு கூடியிருந்த தமிழ்த் தலைவர்கள் தெரிவித்தனர். சர்வதேசப் போக்குவரத்துக்கான பெரிய விமானங்களையும் இயக்கும் அளவுக்கு யாழ்ப்பாண விமான ஓடுதளத்தை விரிவாக்கும் வாக்குறுதியும் அளிக்கப்பட்டது.

முன்னர் இலங்கை இராணுவத்தின் பலாலி விமான தளம் என்று அறியப்பட்ட 'யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய'த்தின் தொடக்கவிழா நினைவுக் கல் வெட்டை, சிறிசேனவும் ரணிலும் இணைந்து திறந்து வைத்தனர். யாழ்ப்பாண விமான நிலையத் தொடக்கத் தையும் எயர் அலையன்ஸின் முதல் விமானம் சென்னை யிருந்து வந்ததையும் குறிப்பிட்டு உணர்ச்சி மிகுந்த இலங்கைக்கான இந்தியத் தூதர் தரண்ஜீத் சிங் சந்து, "இந்தியா - இலங்கை இருதரப்பு உறவுகள் உண்மை யிலேயே விண்ணைத் தொட்டுவிட்டன" என்றும், இலங்கையில் மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியா பூண்டுள்ள உறுதிக்கு இது மற்றோர் எடுத்துக் காட்டு என்றும் கூறினார். 2015இல் இலங்கைப் பயணம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி,

## பரந்த சுபீட்சம் நோக்கிப் பயணிப்போம்!

"இந்தியாவிற்காக நான் காணும் எதிர்காலக் கனவை எங்கள் அண்டை நாடுகளுக்கும் நான் காண விரும்புகி றேன்" என்று குறிப்பிட்டதையும் அவர் நினைவு கூர்ந்தார். யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத் தொடக்கத்தையும் எயர் அலையன்ஸின் முதல் விமானம் சென்னையிலிருந்து வந்ததையும் குறித்துத் தமிழர்களும் தங்கள் வரவேற்பைத் தெரிவித்தனர். முன்னர் அவர்க ளுக்கு, சர்வதேச விமானங்களைப் பிடிக்க, ரயிலிலோ பேருந்திலோ எட்டு மணி நேரத்துக்குமேல் பயணம் செய்து கொழும்பு செல்லவேண்டியிருந்தது. அதனால், யாழ்ப்பாணம் - சென்னை விமானம் அவர்களுக்கு இறைவன் அளித்த கொடை. விமான முன்பதிவும் பெருமளவில் நடந்தது. ஏப்ரல் 2020இல் கோவிட்டால் விமான நிலையம் மூடப்பட்டதையடுத்து, சென்னை - யாழ்ப்பாண இணைப்புத் தடத் திட்டம் கைவிடப் பட்டது. இப்போது மீண்டும் நல்ல காலம் பிறந்துள் ளது. வடக்குப் பகுதி மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டிய தருணம்.

ஒக்ரோபர் 2019இல் விமான சேவை தொடங்கப் பட்டபோது, சென்னை - யாழ்ப்பாணம் இடையிலான ஒரு வழிப் பயணச் சீட்டின் விலை ரூ.4000 என்று எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் இன்று, சென்னை - யாழ்ப்பாணம் பயணச்சீட்டின் விலை ரூ.6000 என்றும், யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை வர ரூ.9000 என்றும் எயர் அலையன்ஸ் அறிவித்துள்ளது. கொழும்புக்கும் சென்னைக்கும் இடையிலான இருவழிப் பயணத்திற் கான தொகை 15,000 இந்திய ரூபாய், அதாவது, இலங்கையின் ரூபாயில் இதன் மதிப்பு 67,000 ரூபாய். (சரியாகக் கணக்கிட்டேனா? பள்ளிப் பருவத்திலிருந்தே நான் கணக்கில் ரொம்ப வீக். 72 வயதில் மேம்பாடு அடையமுடியாது.)

விமான எரிபொருள் விலையுயர்வையும் விமானம் மற்றும் விமான நிலையங்களின் பராமரிப்புச் செலவு களையும் ஊதியச் செலவுகளையும் கருத்தில்கொண்டு நோக்கினால், இந்த பயணச்சீட்டுக் கட்டணம் மிகவும் மலிவானது என்றே கூறலாம். சனியன்று அதிகாலை இந்தக் கட்டுரைக்கு இறுதி வடிவம் கொடுக்க முனைந்தி ருந்த நேரத்தில் கொழும்பு - சென்னை இடையிலான இருவழிப் பயணத்துக்கு மற்ற விமான சேவை நிறுவ னங்கள் விதிக்கும் கட்டணங்களை ஒப்பிட்டுப் பார்த் தேன். எயர் அலையன்ஸ் விதிக்கும் கட்டணங்களைவிட அவை அனைத்தும் அதிகமாகத்தான் இருக்கின்றன. நான் எயர் அலையன்ஸின் விற்பனைப் பிரதிநிதி அல்ல. மக்களின் நன்மைக்காக அக்கறை கொண்டுள்ள ஒரு சாமானிய பத்திரிகையாளன் மட்டும்தான். நமது



## கனவுக்கு வண்ணங்கள் தீட்டுவோம்!

தொப்புள்கொடியின் இரு முனைகளையும் இணைக்கும் சென்னை - யாழ்ப்பாணம் பயணம் மலிவாகவும் எளிதாகவும் ஆக்கப்பட்டுள்ளது என்பதுதான் நான் மகிழ்ச்சியுடன் கூற விரும்புவது.

பல தலைமுறைகளாக, நமது மூதாதையர்கள் பாக்கு நீரிணை வழியாகப் போக்குவரத்து மேற்கொண்டுவந்த அந்தத் தொடர்புகளை நாம் மீண்டும் கட்டமைப்போம். இப்போதைக்கு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலை யத்திலிருந்து வான் வழியாகவும், சில மாதங்களில் சென்னையிலிருந்து 280 கிமீ தொலைவில் கடற்கரை யில் உள்ள காரைக்காலிலிருந்து காங்கேசன்துறை கப் பல் போக்கு வரத்தும் தொடங்கவுள்ளது. மிக்க மகிழ்ச்சி.

யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் இலங்கை யின் இதர வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கு ஆயிரக்கணக்கான பயணிகள், வர்த்தகப் பேச்சுவார்த்தை கள், முதலீட்டுத் திட்டங்கள், கல்வித் திட்டங்கள், திரு மண உறவுகள் தவிர, சுற்றிப்பார்க்கவும் கோவில் திரு விழாக்களுக்காகவும் தமிழகத்திலிருந்து வந்து குவியக் கூடும்.

போருக்குப் பிந்தைய சூழல் குறித்துச் செய்தி சேகரிக்க, 2010 ஜனவரியில் நான் இலங்கை வந்போது, உயிர் பிழைத்திருந்தவர்களின், குறிப்பாக, கணவர்களை இழந்த இளம் பெண்கள் மற்றும் மக்களை இழந்து அநாதைகளான பெற்றோர்களின் துயரத்தை நேரில் பார்க்க நேர்ந்தது. நான் சென்னைக்குத் திரும்பியவுடன், தமிழகத்திலும் தென்னிந்தியாவின் இதர பகுதிகளிலும் பெரிய கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் வைத்திருக்கும் என் நண்பர்கள் பலரிடம் ஈழத்தில் முதலீடு செய்வது குறித்துப் பரிசீலிக்கக் கோரி மன்றாடி னேன். அவர்களில் அநேகம்பேர் அதில் ஆர்வம் காட்டி னாலும், மோசமான, நிலையில்லாத சமூக-அரசியல்-பொருளாதாரச் சூழலில் சிக்கியிருந்த இலங்கையில் முத லீடுசெய்ய அஞ்சினர். நிலைமை மேம்படும்போது இலங் கையில் முதலீடு செய்வதாகவும் அவர்கள் கூறியிருந்த னர்.

அவர்களில் ஒருவர் காற்றடிக்கும் முன்னரே தூற்ற வும் துணிந்து, மிகப் பெரிய லாபம் ஈட்டும் நம்பிக்கை யில், மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த ஊரான அம்பாந் தோட்டையில் பெருமுதலீடு செய்து, கையைச் சுட்டுக்கொண்டார். தவறான நேரத்தில், தவறானவர் களை நம்பி, தவறான துறையையும் தேர்ந்தெடுத்ததால் அவர் கனவு சிதைந்தது. இந்தத் தமிழக முதலீட்டாள ரின் கசப்பான அனுபவம் குறித்து இந்தியாவின் பல பெரு முதலீட்டாளர்களும் அறிந்திருந்தனர். இதனால், இலங்கையில் வர்த்தகம் செய்யும் அவர்களது அச்சம் பன்மடங்கானது. இப்போது, இந்த வான், கடல் தொடர்புகள் மூலம், விரைவான போக்குவரத்து மேம் பட்டு, அதன் மூலம் உயர்கல்வி, சுகாதாரம், உற்பத்தி, ஏற்றுமதி போன்ற முக்கிய துறைகளில் தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பெரு முதலீட்டுத் திட்டங்களை ஊக்குவிக்கலாம்.

யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான மீட்டெடுக்கப்பட்ட வான் தொடர்புகளும், விரைவில் தொடங்கவிருக்கும் காங்கேசன்துறை - காரைக்கால் கடல் தொடர்புகளும் ஈட்டித் தரக்குடிய லாபங்கள் குறித்து, பெரும் அனுபவம் மிக்க, புத்திக்கூர்மையுடைய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெயஷ ங்கர் நன்கறிவார் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். நிதி, தொழில், மீன்வளம், தகவல் தொழில்நுட்பம், அறிவியல் - தொழில்நுட்பம், கலாசாரம் மற்றும் கடல் கடந்த வர்த்தகத் துறைகள் விரைவில் கூட்டுமுயற்சி யைத் தொடங்க, தனது சக அமைச்சர்களின் ஆர்வத் தைத் தூண்ட, அவர் ஆவன செய்வார். ராஜபக்ஷ சகோதரர்களால் உருவாக்கப்பட்ட பொருளாதாரச் சிக்கலின் தாக்கத்தால் தவித்துக்கொண்டிருக்கும் இந்த அழகிய தீவு தேசத்தின் பொருளாதாரத்தை மீட்கவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் மட்டுமன்றி, இருநாட்டு மக்களிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதன் மூலம், வட இலங்கையிலும் பாக்கு நீரிணைப் பகுதியிலும் அதிகரித்துவரும் சீன நடமாட்டத்துக்குப் பதிலடி கொடுக்க இந்தியாவிற்கும் இது உதவும். இதன் மூலம், பீஜிங்கின் கடன் வலையில் மூழ்குவதிலிருந்து இலங்கையையும் காப்பாற்ற முடியும்.

இதுபோன்ற நேர்மறை நடவடிக்கைகள் அரசுகள் மட்டத்தில் மட்டுமல்லாமல், பாக்கு நீரிணையின் இரு தரப்பிலும் இருக்கும் நாட்டு மக்கள் தரப்பிலிருந்தும் ஏராளமான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண் டும். இசை - நடனப் பள்ளிகள், கலாசார, இலக்கிய விழாக்கள், தொழில்துறைக் கண்காட்சிகள், கருத்தரங் குகள், மாணவர்கள் - கல்வியாளர்கள் - ஆய்வாளர்கள் - ஆசிரியர்களுக்கான பரிமாற்றத் திட்டங்கள் போன்ற வற்றிற்கு ஏற்பாடு செய்யலாம். இந்தப் பட்டியல் மேலும் நீளும். மேலும், நமது நலன் விரும்பியும் நண்பருமான சுபாஸ்கரன், தன் மனதுக்கு நெருக்கமான யாழ் மற்றும் வன்னி குறித்த கதைகளை இயற்றி, தமிழகத்திலும் தமிழர்கள் வாழும் உலகின் இதர பகுதிகளிலும் திரையேற்றலாம். அதுபோல, அவரின் 'லைக்கா' நிறுவனம், இலங்கையில் பல பெரிய திரையரங்குகள் அமைத்து, இங்கும் அங்கும் அவரால் தயாரிக்கப்படும் திரைப்படங்களை வெளியிடலாம். தொழில், கல்வி மற்றும் சுகாதாரம்போன்ற துறைகளில் மேற்கொள்ளப்படும் பெரு முதலீடுகளுக்குக் கூடுதலாக லைக்கா நிறுவனம் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, வரும் காலங்களில் செய்யக்கூடிய ஒரு கணிசமான பங்களிப்பாக இது இருக்கும். கலை, வேலை வாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இதெல்லாம் உதவும்.

சுபாஸ்கரனும் அவரது லைக்கா நிறுவனமும் மட்டு மல்லாமல், உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் மத்தியில் செல்வாக்குப்பெற்ற பலரைத் தாய்நாட்டின் வளர்ச்சியில் பங்கேற்க, யாழ் - தமிழகம் பயணத் தொடர்பு மிக உற்சாகமளிக்கும். உலகின் பல நாடுகளில் வசிக்கும் தமிழர்கள், ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் - ஜனவரி மாதங்களில் செனையில் நடக்கும் உலகப் புகழ் பெற்ற மார்கழி இசைவிழாவில் (தென்னிந்தியாவின் இசை மற்றும் நாட்டியத்தின் சிறந்த திறமைகளை வெளிக்கொண்டுவரும் நிகழ்வு, தற்சமயம் நடந்து கொண்டிருக்கிறது. பொங்கலுக்குப் பின் வரை நீடிக்க வுள்ளது) பங்கேற்க வந்து, அங்கிருந்து தென்னிந்தியா வின் பல கோவில்களுக்கும்(சிதம்பரம் நடராஜர் கோவில், திருவண்ணாமலை, திருப்பதி, முருகனின் அறு படை வீடுகள், இன்னும் பல) செல்லவும் திட்டமிடுகின் றனர்.

இது நம் காலை உணவுக்கும், ஞாயிறு காலை சிறு ஓய்வுக்குமான நேரம் என்று நினைக்கிறேன். பகலில் காணும் கனவு பலிக்கும் என்று என் தாய் கூறுவதுண்டு. நமது தொப்புள்கொடி உறவை வலுப்படுத்தி, ஒளிமய மான எதிர்காலத்திற்கான அழகான கனவை இன்று காணுவோம். இனிய 'ஈழநாடு' இதழில், கறுப்பு - வெள்ளை அச்சில் வெளியாகியிருக்கும் என் கனவுக்கு வண்ணங்கள் தீட்டுவோம். வாருங்கள் தோழர்களே, கனவு காணலாம்.

மீண்டும் சந்திக்கும்வரை என் அன்பான வணக்கம்,

# இரட்டைக்குடியுரிமையுடன் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களை கண்டறிய ஏன் இதுவரை நடவடிக்கையில்லை?



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



அரசியலமைப்புக்கான 21 வது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இன்றுடன் சரியாக 50 நாட்கள் கடந்துவிட்டன. ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து பாராளுமன்றத்தின் அதிகாரங்களை அதிகரிப்பதற்காக அரசியலமைப்பு பேரவையையும் சுயாதீன ஆணைக் குழுக்களையும் நியமிப்பது அந்த திருத்தத்தின் பிரதான ஏற்பாடு.

அடுத்து முக்கியமாக கருதப்படக்கூடியது இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் மக்களால் தெரிவுசெய்யப்படும் அரசியல் பதவிகளை வகிப்பதை தடைசெய்யும் ஏற்பாடாகும்.

இதன் பிரகாரம் இரட்டைக்குடியுரிமை கொண்ட எவரும் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கமுடியாது. ஆனால், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களாக இருப்பதாக கூறப்பட்ட போதிலும், இதுவரை எவரும் தாங்கள் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களாக இருப்பதால் நாட்டின் சட்டத்தை மதித்து பதவிகளை துறப்பதாக அறிவிக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்களில் பத்து பேர் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க சில வாரங்களுக்கு முன்னர் கூறினார். அவர் பெயர்களை குறிப்பிடவில்லை.ஆனால் அரசியலமைப்பு திருத்தத்தின் புதிய ஏற்பாட்டின் பிரகாரம் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்கவேண்டும் என்று அரசியல் கட்சிகளிடம் இருந்துதான் கோரிக்கை வரவில்லை என்றால்,சிவில் சமூக அமைப்புக்களும் கூட இதுவரை குரல் கொடுக்கவில்லையே.

இரட்டைக்குடியுரிமைப் பிரச்சினை முன்னர் ராஜபக்ச சகோதரர்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக நோக்கப்பட்டது.19 வது அரசியலமைப்பு திருத்தம் நடைமுயையில் இருந்தபோது 2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்காக கோட்டாபய ராஜபக்ச தனது அமெரிக்க குடியுரிமையை துறந்தார்.

பிறகு அவரின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 20 வது திருத்தம் இரட்டைக் குடியுரிகொண்டவர்கள் பாராளுமன்றம் வருவதற்கு மீண்டும் அனுமதித்ததால் 2021இல் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்த பசில் ராஜபக்ச மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் கடந்த ஜூன் மாதம் பதவியைதுறந்தார்.மீண்டும் 21 வது திருத்தம் காரணமாக அவர் இனிமேல் பாராளுமன்றம் வரமுடியாது.

அதனால் இது ராஜபக்ச சகோதரர்களுடன் தொடர்புடைய பிரச்சினை என்பதை தாண்டி அரசியலமைப்பை மீறி இரட்டைக்குடியுரிமையுடன் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக மாறிவிட்டது.

சம்பிக்க ரணவக்க கூறுவது போன்று பத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்றால் அவர்கள் இப்போது சட்டவிரோதமாகவே சபையில் ஆசனங்களை ஆக்கிரமித்திருக்கிறார்கள். நாட்டின் அதியுயர் சட்டவாக்க சபைக்குள்ளேயே சட்டவிரோத பிரதிநிதிகள்.....!

இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்தில் இருப்பது தொடர்பில் சில வாரங்களுக்கு முன்னர் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் ஊடகங்கள் கேட்டபோது அதை கண்டுபிடிப்பது பாராளுமன்றத்தின் பொறுப்பு அல்ல, தேர்தல் ஆணைக்குழுவே அதைச்செய்யவேண்டும் என்று பதிலளித்தார்.ஆனால், தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்பவர்களின் குடியுரிமை குறித்து விசாரணை செய்வது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு அல்ல என்று அதன் தலைவர் நிமால் புஞ்சிஹேவா கூறினார். போதுமான சான்றுகள் இருந்தால் எவரும் இந்த சர்ச்சையில் நீதிமன்றத்தை நாடலாம் என்பது அவரது நிலைப்பாடு.

2019 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு கோட்டாபய தனது அமெரிக்க குடியுரிமையை கைவிடாமல் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்ததாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டபோது முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் இதே நிலைப்பாட்டையே எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக்குடியுரிமையை இரகசியமாக வைத்திருக்கிறார்கள் என்பது தொடர்பில் எழுந்திருக்கும் சர்ச்சை குறித்து ஆராய்ந்து குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று சில வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் அது பற்றி பிறகு எந்த கதையையும் காணவில்லை.

சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தனது பிரிட்டிஷ் குடியுரிமையை மறைத்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் இலங்கை கடவுச்சீட்டை பெற்றதாக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் இருக்கிறது.

அவர் பிரிட்டிஷ் குடியுரிமையை கொண்டவர் என்பது கண்டறியப்பட்டிருப்பதாகவும் அதனால் அவருக்கு இலங்கை கடவுச்சீட்டு வழங்கப்படமுடியாது என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதமொன்றில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்திருப்பதாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தகவல் வெளியிடப்பட்டது.

அந்த கடிதத்தை சபையில் தாக்கல்செய்த ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் 2004 ஆம் ஆண்டில் இருந்து பிரிட்டிஷ் குடியுரிமையை கொண்டிருக்கும் டயானாவின் ஐக்கிய இராச்சிய கடவுச்சீட்டின் இலக்கத்தையும் 2014 அவர் பெற்றுக்கொண்ட இலங்கை கடவுச்சீட்டின் இலக்கத்தையும் வெளியிட்டார்.

டயான 2018 நவம்பர் 5 இராஜதந்திர கடவுச்சீட்டொன்றையும் பெற்றிருந்தார்.பிரிட்டிஷ் குடியுரிமையை கைவிட்டதை நிரூபிக்கும் ஆவணமெதையும் அவர் காண்பிக்கவில்லை என்பதால் புதிய இராஜதந்திர கடவுச்சீட்டை விநியோகிப்பது சாத்தியமில்லை என்று கட்டுப்பாட்டாளர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாகவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அந்த வேளையில் சபையில் பிரசன்னமாகியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டயானாவின் கடவுச்சீட்டு விவகாரத்தை பரபரப்பாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். “ டயானா நீங்கள் எல்லோரும் பாராளுமன்றம் வருவதற்கு தனது கட்சியை தந்தவர் அல்லவா.அதனால் அவரின் கடவுச்சீட்டு விவகாரத்தை ஒரு பிரச்சினையாக்க வேண்டாம் “ என்று விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினரைப் பார்த்து கூறினார்.

## வழமையாக இதுபோன்ற விவகாரங்களில் நீதிமன்றத்தை நாடும் சிவில் சமூக அமைப்புக்களும் மௌனம்

ஜனாதிபதியின் இந்த ‘ நகைச்சுவையான ‘ கூற்றை நோக்கும்போது இலங்கை குடியுரிமையை கொண்டிராதவர் இலங்கை கடவுச்சீட்டை வைத்திருப்பது மாத்திரமல்ல பாராளுமன்ற உறுப்பினராக அமைச்சராக இருப்பதெல்லாம் அவருக்கு ஒரு பிரச்சினையாக தெரியவில்லை என்றே கருதவேண்டியிருக்கிறது.அதனால் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் என்று கூறப்படுபவர்களின் பிரச்சினையை ஜனாதிபதி எவ்வாறு நோக்குவார் என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

தற்போதைய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் 2020 ஆகஸ்ட் பாராளுமன்ற தேர்தலில் தெரிவானவர்கள். அவ்வேளையில் இரட்டைக்குடியுரிமையை கொண்டவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை தடுக்கும் ஏற்பாட்டைக் கொண்ட 19 வது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறையில் இருந்தது. இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் என்று கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தபோது உண்மையை கூறவில்லை என்பது வெளிப்படையானது.தேர்தல் ஆணைக் குழுவுக்கு மாத்திரமல்ல, தங்கள் கட்சிகளின் தலைவர்களுக்கும் அவர்கள் உண்மையை மறைத்தார்கள் அல்லது உண்மை தெரிந்திருந்தும் அவர்களை தலைவர்கள் வேட்பாளர்களாக நியமித்தார்கள் என்பதே அர்த்தம்.

இந்த விவகாரத்தில் உள்ள பெரிய பிரச்சினை இரட்டைக்குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அடையாளம் காண்பதில் பாராளுமன்றம் உட்பட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் முகங்கொடுக்கும் சிக்கலாகும். தேர்தல் ஆணையாளர் கூறுவதை நோக்கும்போது இந்த விவகாரத்தில் எவராவது நீதிமன்றத்தை நாடினால் தவிர, வேறு வழியில்லை என்றாகிறது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இந்த விவகாரத்தில் முக்கிய பொறுப்பு இருக்கிறது. அந்த பொறுப்பை நிறைவேற்றவேண்டிய சட்ட மற்றும் தார்மீக ரீதியான கடமை தங்களுக்கு இருக்கிறது என்று அவர்களில் எவராவது இதுவரை உணர்ந்ததாக தெரியவில்லை.தங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் எவராவது இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களாக இருக்கிறாரா என்பதை கண்டறிந்து அவர்களை பதவிவிலகுமாறு தலைவர்கள் கேட்கவேண்டும்.

எந்தவொரு கட்சியின் தலைவரும் கூட தங்கள் மத்தியில் இருக்கக்கூடிய இரட்டைக்குடியுரிமை பாராளுமன்ற உறுப்பினர்களை இதுவரையில் அடையாளம் கண்டார்களோ என்றும் தெரியவில்லை அல்லது அவர்களும் சேர்ந்து உண்மையை மறைக்கிறார்களா?



இரட்டைக் குடியுரிமையுடன் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் தாங்களாக முன்வந்து உண்மையை அறிவித்து பதவி விலகும் அளவுக்கு அவர்களிடம் நேர்மையை எதிர்பார்க்கமுடியாது.அதுவே எமது அரசியல்வாதிகளின் நேர்மையின் இலட்சணம்!

டயானா கமகேயின் குடியுரிமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கடந்தவாரம் பிரச்சினை கிளப்பியபோது சபையின் நிலையியல் கட்டளைகளின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதாக சபாநாயகர் அபேவர்தன உறுதியளித்ததை காணக்கூடியதாக இருந்தது.டயானாவின் பிரச்சினையை மாத்திரமல்ல, அரசியலமைப்புக்கு விரோதமாக இரட்டைக்குடியுரிமையுடன் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் சகலரையும் கண்டறிய அவர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வழமையாக இது போன்ற பிரச்சினைகளில் நீதிமன்றத்தை விரைந்து நாடுகின்ற மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் போன்ற முக்கியமான சிவில் சமூக அமைப்புக்கள் இது விடயத்தில் ஏன் இதுவரை நடவடிக்கையில் இறங்கவில்லை?



# யாழில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி இடை நிறுத்தப்பட்டது ஏன்?



மாலினி அஜந்தன்

விளையாட்டு என்பது வெறுமனே பொழுது போக்குக்கானது என்பதற்கு அப்பால் தனிமனித ஆற்றலை மேம்படுத்தும் ஒரு சக்தியாகவும் உருவெடுத்துள்ளது. உலக நாடுகளைப் பொறுத்தவரை விளையாட்டுத்துறை என்பது, அந்தந்த நாடுகளின் பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளுக்கு ஈடான ஒரு துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

உலக நாடுகள் விளையாட்டுத் துறைக்குக் கொடுக்கும் தனிப்பட்ட அங்கீகாரத்தை வேறு எந்தத் துறைகளாலும் வெகுஇலகுவாக எட்டிவிட முடியாது. குறிப்பாக உதைபந்தாட்டம், கிரிக்கெட் இந்த இரண் டும் உலகளவில் மூலை முடுக்கெல்லாம் பேசப்படக் கூடிய ஒரு விடயமாக இன்று மாறியிருக்கின்றது. ஆகவே நாடுகளின் தேசிய அணிகளில் இடம்பிடிக்க வேண்டும் என்ற கனவு, உள்ளூர் விளையாட்டுக் கழகங்களில் விளையாடுகின்ற ஒவ்வொரு சாமானிய வீரனதும் பெரும் கனவாகவே மாறியிருக்கின்றது எனலாம். இந்தக் கனவை எளிதில் அடைந்துவிட முடியாது. அதற்கு அர்ப்பணிப்பு முதற்கொண்டு மிகுந்த பக்கபலமும் அவசியம்.

இலங்கை போன்ற நாடுகளில் கிரிக்கெட் விளையாட்டுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் ஏனைய விளையாட்டுத் துறைக்குக் கொடுக்கப்படாது விடினும், உதைபந்தாட்டம் என்பதைத் தவிர்த்துவிட்டுச் செல்ல முடியாத நிலைமையும் காணப்படுகின்றது. உதைபந்தாட்டத்திற்கென தனி வரலாறு உண்டு. உலகளவில் உதைபந்தாட்டத்திற்கே அதிக இரசிகர்கள் உள்ளார்கள். உதைபந்தாட்ட வீரர்கள் பலர் தொழில்முறை உதைபந்தாட்ட வீரர்களாகவும் உள்ளார்கள். இலங்கையில் கிரிக்கெட் துறையில் எளிதில் எட்டிப்பார்த்து விட முடியாத எண்ணிக்கையில் சிறுபான்மையான சமூகங்களுக்கு ஓரளவு நிவாரணம் தரும் ஒரு துறையாக உதைபந்தாட்டமே விளங்குகின்றது எனலாம். இலங்கையின் தேசிய உதைபந்தாட்ட வரலாற்றை எடுத்து நோக்கினால், அதில் தமிழ்பேசும் சிறுபான்மை இனக்குழுமம் வகிக்கும் ஏன் வகித்துள்ள இடமென்பது நிரப்பபப்பட முடியாத ஒன்றாகவே திகழ்கின்றது எனலாம். அதை நோக்கி வட, கிழக்கிலிருந்து தமிழ் பேசும் வீரர்களை நகர்த்த வேண்டிய முக்கிய பொறுப்பு எமது சமூகத்திடம் உள்ளது. அதை யாரும் தட்டிக் கழித்துவிட முடியாது. வெறுமனே பொழுதுபோக்காக விளையாடுவதன் ஊடாக ஒரு வீரனால் ஒரு துறையில் பிரகாசித்துவிட முடியாது. அவன் தொழில்முறை வீரனாக மாறும்போதே அவனால் மீத்திறனுடன் பிரகாசிக்க முடியும்.

வீரர்களை தொழில்முறை வீரர்களாக மாற்றுவதற்கான களம் என்பது யுத்தத்திற்குப் பின்னர் வடக்கு, கிழக்கில் இருக்கவில்லை. தென்னிலங்கை நிறுவனங்கள் நடாத்தும் சுற்றுப்போட்டிகளும், உள்ளூர் கழகங்கள் நடாத்தும் சுற்றுப்போட்டிகளும் வீரர்களை தொழில்முறை வீரர்களாக வளர்க்கவில்லை என்ற விமர்சனம் எழுந்த ஒரு காலப்பகுதியிலேயே, எமது பிரதேச வீரர்களை தொழில்முறை வீரர்களாக மாற்ற வேண்டும் என்ற தூரநோக்குச் சிந்தனையுடன், டான் தொலைக்காட்சிக் குழுமம், யாழ்ப்பாண மாவட்டத்தில் 'புதிய விடியல்' என்ற உதைபந்தாட்டத் தொடரை ஆரம்பித்தது. யாழ்.மாவட்டத்தில் உள்ள உதைபந்தாட்ட லீக்குகளின் அங்கத்துவக் கழகங்களிடையே இந்தப் போட்டியானது நடாத்தப்பட்டு, வெற்றியீட்டும் அணிக்கு வீரர்களும், கழகங்களும் தமது செலவுகளை ஈடுகட்டக்கூடிய ஒரு பெருந்தொகைப் பணத்தையும், வெற்றிக் கேடயத்தையும் டான் குழுமம் வழங்கி வருவதுடன், வருடா வருடம் வழங்கப்படும் குறித்த பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுக்கொண்டே வந்திருக்கின்றது. இதனால் 'புதிய விடியல்' உதைபந்தாட்டத் தொடர் மீதான எதிர்பார்ப்பு யாழ். மாவட்ட உதைபந்தாட்ட இரசிகர்களிடையே தனி இடத்தைப் பிடித்தது எனலாம்.

## புதிய விடியல்: 2022 என்ன குழப்பம்?

2012ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய விடியல் உதைபந்தாட்டத் தொடரானது, கோவிட் காலப்பகுதியைத் தவிர்த்து, இவ்வருடம் 8வது தொடராக, யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன், கடந்த ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி அன்று அரியாலை உதைபந்தாட்ட மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யாழ்.மாவட்டத்தின் 5 லீக்குகளில் இருந்தும் 50 கழகங்கள் இத்தொடரில் பங்குபற்றின. விலகல் முறையிலான போட்டிகளில் வெற்றிபெற்றிருந்த 8 அணிகளான, நவாந்துறை சென்மேரிஸ், இளவாலை யங்ஹென்றீஸ், இளவாலை சென்.லூட்ஸ், நவாந்துறை சென்.நீக்கிலஸ், குருநகர் பாடுமீன், அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ், ஆனைக்கோட்டை யூனியன், பாசையூர் சென்.அன்ரனீஸ் ஆகிய அணிகள் காலிறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியிருந்தன. காலிறுதிப் போட்டிகள் துரையப்பா விளையாட்டரங்களில் இடம்பெற்றிருந்த நிலையில், அரையிறுதிச் சுற்றுக்குள் நவாந்துறை சென்மேரிஸ், இளவாலை யங்ஹென்றீஸ், நவாந்துறை சென்.நீக்கிலஸ் மற்றும் குருநகர் பாடுமீன் ஆகிய அணிகள் நுழைந்தன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும், நவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியும் மோதியிருந்த நிலையில், அப்போட்டியில் வெற்றியீட்டிய சென்.நீக்கிலஸ் அணி இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகியிருந்தது. மறுநாள் அரையிறுதிப் போட்டியின் இரண்டாவது போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து நவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதுவதாக இருந்தது. இப்போட்டி கடந்த 07-12-2022 புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் போட்டி தொடர்பான தொலைக்காட்சி விளம்பரத்தை டான் குழுமம் போட்டி நாளன்று பிற்பகல் 2.30 மணி வரை ஒளிபரப்பாக்கியது. நவாந்துறை சென்.மேரிஸ் அணியும், இளவாலை யங்ஹென்றீஸை எதிர்கொள்வதற்காக பிற்பகல் 2.45 மணியளவிலேயே மைதானத்திற்கு வருகை தந்து பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.



இந்நிலையில்தான், யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் ஒரு அறிவிப்பு சென்.மேரிஸ் அணிக்கு வழங்கப்படுகிறது. அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற யங்ஹென்றீஸ் அணி இடை விலக்கப்பட்டு, இளவாலை சென்.லூட்ஸ் அணியே அரையிறுதியில் மோதும் என கூறப்படுகிறது. இதனால் சென்.மேரிஸ் அணி வீரர்கள் மற்றும் அணி முகாமையாளர்கள் இடையேயயும் குழப்பங்கள் ஏற்பட்டன. இதேவேளை, "உங்களது அணி அரையிறுதியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது" என்ற அறிவிப்பு இளவாலை யங்ஹென்றீஸ் அணிக்கும் வழங்கப்படுகிறது. இவ் அறிவிப்புக்கள் வழங்கப்படுவதற்கு முன்பதாக காலை 11 மணியளவில் இளவாலை சென்.லூட்ஸ் அணிக்கு "நீங்கள் சென்.மேரிஸ் அணியோடு அரையிறுதியில் மோதப்போகின்றீர்கள்" என்ற அறிவிப்பும் வழங்கப்படுகிறது. இவ்வாறெல்லாம் யாழ். உதைபந்தாட்ட லீக் அறிவிப்புக்களை வழங்கிய பின்னர், புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடாத்தும் டான் குழுமத்திற்கும் அன்றைய போட்டி தொடர்பில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அறிவிப்பை வழங்கி, கழகங்கள் மாற்றப்பட்ட தகவலைத் தெரிவிக்கிறது.

## எங்கே குழப்பம்?

இரண்டாவது அரையிறுதி தொடர்பில் விளம்பரப்படுத்தல்களை டான் குழுமம், தொலைக்காட்சி ஊடாகவும், ஈழநாடு பத்திரிகை ஊடாகவும் வழங்கியிருந்த பின்னர், இரண்டாவது போட்டியில் பங்கேற்கும் கழகம், இடைநிறுத்தப்பட்டப்பட்ட தகவலை மிக மிகத் தாமதமாக பொறுப்பான காரணங்களை உத்தியோகபூர்வமாக அறிவிக்காது, யாழ் லீக் வழங்கியதை டான் குழுமம் ஏற்றுக்கொள்ளவில்லை. யாழ்.லீக் எடுத்த முடிவுகளுக்கு கடும் ஆட்சேபனையை டான் குழுமம் தெரிவித்ததோடு, ஒரு தலைப்பட்சமாக எடுக்கப்பட்ட முடிவுக்கு எதிர்ப்பு வெளியிட்டு, இரண்டாவது அரையிறுதிப் போட்டியை இடைநிறுத்தியது.

## என்ன குழப்பம்?

யாழ்ப்பாணம் இளவாலை யங்ஹென்றீஸிடம் காலிறுதிப் போட்டியில் தோல்விடையந்த இளவாலை சென்.லூட்ஸ் அணி, தோல்வியடைந்த பின்னர், யாழ். உதைபந்தாட்ட லீக்கிடம் ஒரு முறைப்பாடொன்றை செய்கிறது. "இளவாலை யங்ஹென்றீஸ் அணியில் விளையாடிய வீரரொருவர், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கிற்கு அப்பால், தீவக உதைபந்தாட்ட லீக்கில் ஒரு கழகத்திற்காக விளையாடுபவர் அங்கிரந்து முறையாக அனுமதிபெற்று வெளியேறமல் இப்பேஉது அநத அணிக்கு விளையாடுவது தவறானது" எனும் சாரப்பட முறைப்பாடு யாழ் உதைபந்தாட்ட லீக்கிடம் பதிவு செய்யப்படுகிறது.

இந்த முறைப்பாடு தொடர்பில், யாழ்.லீக், தீவக மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்களிடம் விளக்கம் கோருகிறது. தீவக உதைபந்தாட்ட லீக் குற்றஞ்சாட்டப்பட்ட வீரர் தமது லீக்கில் உள்ள கழகம் ஒன்றில் விளையாடியதை உறுதிபடுத்துகிறது. அதே வேளை வலிகாமம் உதைபந்தாட்ட லீக், குறித்த வீரர் அவ்வாறு விளையாடியதற்காக ஏற்கனவே விசாரணை நடாத்தப்பட்டு அவருக்கு அதற்கான தண்டனையும் வழங்கப்பட்டுவிட்டது என்றும் இப்போது அவர் விளையாடுவதில் எந்த முறைகேடும் இல்லை என்றும் விளக்கமளித்தது. இந்த தகவல்களை பெற்றுக்கொண்ட யாழ்.லீக் அதன்பின்னரும் யங்ஹென்றீஸை அரையிறுதியில் இருந்து வெளியேற்றும் முடிவை எடுத்துள்ளது.

இளவாலை சென்.லூட்ஸ் அணி குற்றஞ்சாட்டிய யங்ஹென்றீஸ் அணி வீரர் உரிய விடுகையைப் பெற்றுக் கொள்ளாது ஏனைய லீக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கழகங்கள் சிலவற்றில் விளையாடியிருந்தமை கடந்த செப்ரெம்பர் மாதமளவில் கண்டு பிடிக்கப் பட்டிருந்த நிலையில், அது தொடர்பில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு, குறித்த வீரர் 2 உதைபந்தாட்ட தொடர்களில் விளையாட முடியாது என்ற தடையை விதித்தது. அந்தத் தடைக்காலம் முடிந்த பின்னர், குறித்த வீரர் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கை பிரதிநிதித் துவப்படுத்தும் இளவாலை யங்ஹென்றீஸ் சார்பாக மூன்று தொடர்களில் அதாவது, வடமராட்சியில் நடைபெற்றிருந்த பிரான்ஸ் கிண்ணம், வலிகாமம் லீக் தலைவர் கிண்ணப் போட்டி என்பவற்றுடன் 3ஆவது தொடராக டான் குழுமத்தின் "புதிய விடியல்" தொடரில் விளையாடியிருந்தார். அவர் குறித்த தொடர்களில் விளையாடுவதற்கான முழு அனுமதியை வலிகாமம் லீக் வழங்கியிருந்தது. இந்த தொடர்களில் அவர் விளையாடும்போது தற்போது குற்றம் சுமத்தும் சென்.லூட்ஸ் அணியும் அதே தொடர்களில் பங்கேற்றிருந்தமை குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயம்.

இந்நிலையில், தண்டனைக் காலம் முடிவடைந்து, வேறு தொடர்களில் பங்கேற்ற ஒருவர் மீது, புதிய விடியல் காலிறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பின்னர், இளவாலை சென்.லூட்ஸ் அணி யாழ் லீக்கிற்கு முறைப்பாடளித்திருந்தமை தொடர்பில், பொறுப்பு வாய்ந்த யாழ்.உதைபந்தாட்ட லீக் உரியமுறையில் விசாரணை நடாத்தியிருந்தால், புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நிகழ்ந்த குழப்பங்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

## இதன் நியாயம் என்ன?

புதிய விடியல் குழப்பங்கள் தொடர்பில், புதிய விடியலின் நீண்ட கால இரசிகர்கள் பலரும் வினா எழுப்பிய நிலையில், அது தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில், டான் தொலைக்காட்சி நடாத்திய "எது சரி? எது பிழை?" நிகழ்ச்சியில், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறையன், இளவாலை சென்.லூட்ஸ் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட ஒருவரிடம், " நீங்கள் முறைப்பாடளித்த வீரர் மீதான உங்களது குற்றச்சாட்டுக்களையும், ஆட்சேபனைகளையும் காலிறுதிப் போட்டி ஆரம்பமாகுவதற்கு முன்னரே ஏன் நீங்கள் எழுப்பவில்லை?" என வினவியபோது, "தாம் வழங்கிய முறைப்பாடு தொடர்பில் போட்டி ஆரம்பமாகுவதற்கு முன்னரே தாம் ஆலோசித்து வைத்திருந்ததாகவும், போட்டியில் வெற்றியீட்ட இதுவும் ஒரு வழி என்ற வகையில் போட்டி விதிமுறைகளுக்கு அமைய ஏற்கனவே அறிந்த குற்றச்சாட்டை தாம் தோல்வியடைந்த பின்னர் யாழ்.லீக்கிடம் வழங்கியதாகவும்" கூறியிருந்தார். இது ஒரு விளையாட்டின் பண்பை மழுங்கடிக்கும் ஒரு பதிலாகவே அமைந்துள்ளது. இந்த குறுக்கு வழி உத்திகள் தொடர்பில் யாழ்.லீக் விசாரணைகளை முன்னெடுத்திருக்கலாம்.

●

—— பனங்காட்டான்

# சிங்களத்தின் இறையாண்மையை நிலைநாட்ட

# தமிழ்த் தேசியம் அடகு வைக்கப்படுமா?

**'என்னை நம்புங்கள். முன்நிபந்தனை வேண்டாம். முதலில் பேச்சை ஆரம்பிப்போம்" என்று அழைக்கும் ரணிலை நம்பி, அவருடன் நாலரை ஆண்டுகள் தேநிலவு கழித்து ஏமாந்தவர்கள் இரண்டாம் தேநிலவுக்கு ஏதோவொரு நம்பிக்கையில் ஆயத்தமாகிவிட்டனர். அதற்கான களமே முன்னால் விரிந்துள்ளது.**

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழருக்கு எவ்வாறு புராதன வரலாறுண்டோ, அவ்வாறு அவர்களின் உரிமைக்கான பேச்சுவார்த்தைகளுக்கும் உடன்படிக்கைகளுக்கும் தனியான ஒரு வரலாறுண்டு. இதற்கான அகவை 65 ஆண்டுகள்.

இந்த வரலாற்றை அறுந்துவிடாது தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்காக சிங்கள அரசாட்சியினர் காலத்துக்குக் காலம் தமிழர் தரப்போடு பேச்சுவார்த்தையும், உடன்பாடும் - சில வேளை தேநிலவும்கூட மேற்கொள்கின்றனர்.

இலங்கைத் தமிழரின் அரசியல் தலைமைக்கும் சிங்கள அரசியல் தலைமைகளுக்குமிடையிலான முதலாவது நம்பிக்கை உடன்படிக்கை 1957 யூலை 26ம் திகதி ஒப்பமிடப்பட்டது. அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவும் தமிழரசுக் கட்சியின் தலைவராகவிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகமும் இதில் ஒப்பமிட்டதால் பண்டா-செல்வா உடன்படிக்கையென இது பெயர்பெற்றது.

இந்த ஒப்பந்தத்தின் 'ஆ' பகுதியில், பிரதேச சபைகளை உருவாக்கவும், வட மாகாணத்துக்கு ஒரு சபையும், கிழக்கு மாகாணத்துக்கு இரண்டு அல்லது கூடிய சபைகள் உருவாகவும், மாகாண எல்லைகளைத் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்கு நாடாளுமன்றத்தில் சட்ட அங்கீகாரம் பெறலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

அதாவது, வடக்கிலும் கிழக்கிலும் உருவாகும் பிரதேச சபைகள் தேவைப்படின் இணைந்து செயற்பட வாய்ப்பளிக்க பண்டா-செல்வா உடன்படிக்கை இடமளித்தது.

அந்த வேளையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களில் ஒருவராகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன இந்த உடன்படிக்கையை எதிர்த்து பௌத்த பிக்குகளை அணியாகச் சேர்த்து கண்டி யாத்திரையை மேற்கொண்டதும், இதனைக் கண்டு அஞ்சிய பண்டாரநாயக்க ஒருதலைப்பட்சமாக உடன்படிக்கையைக் கிழித்து எறிந்ததும், தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாற்றின் முதலாவது அத்தியாயம். பின்னாளில் பண்டாரநாயக்கவை வேறு காரணத்துக்காக ஒரு பௌத்த பிக்குவே சுட்டு கொலை செய் தார். இதுவே இலங்கையின் முதலாவது அரசியற்கொலையாகும்.

1960ம் ஆண்டு பொதுத்தேர்தலையடுத்து இலங்கையின் இரண்டு சிங்கள பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஆட்சியமைப்பதற்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவைக் கோரின. அவ்வேளை குறைந்தபட்ச கோரிக்கையாக நான்கு அம்சங்களை தமிழரசுக் கட்சி முன்வைத்தது.

ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு பதிலாக தமிழ் பேசும் மக்களின் பிரதேச சுயாட்சியை ஏற்றுக்கொள்ளும் இணைப்பாட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் திட்ட மிட்டு இடம் பெறும் சிங்கள குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டுமென்பவை இவற்றுள் முக்கியமானவை. (60 ஆண்டுகளைத் தாண்டியும் அதே இடத்திலேயே இன்றும் தமிழினம் போராடிக் கொண்டிருக்கிறது).

1965ம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தமிழரின் சில நிபந்தனைகளை கொள்கையளவில் ஏற்க இணங்கியது. இதன் அடிப்படையில் அதன் தலைவர் டட்லி சேனநாயக்கவும் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர். டட்லி-செல்வா என்ற பெயரிலான இந்த உடன்படிக்கையில் மாவட்ட சபைகளை அமைக்க இணக் கம் காணப்பட்டது. டட்லியின் ஐந் தாண்டு ஆட்சி முடியும் வரை தமிழரசுக் கட்சி அதற்கு ஆதரவு வழங்கியதாயினும், உடன்படிக்கை நிறைவேறாத ஒன்றாகவே முடிவு பெற்றது. தமிழ் மக்கள் சிங்கள் ஆட்சியினரால் ஏமாற்றப்பட்ட இரண் டாம் கட்டம் இது. இன்றுவரை இந்த அரசியல் நாடகமே வெவ்வேறு பெயர்களில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.







1987 யூலை 29ல் இலங்கைத் தமிழர் பிரச்சனையைத் தீர்க்கவென இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஓர் உடன்படிக்கை செய்தனர். இதன்வழியாக அரசியலமைப்பில் 13வது திருத்தம் ஏற்படுத்தப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

1957ம் ஆண்டில் பண்டா-செல்வா உடன்படிக்கை ஏற்றுக்கொண்ட பிரதேச சபை முறைமையை ஏற்றுக்கொள்ளாது, அதனை எதிர்த்து கண்டி யாத்திரை மேற்கொண்டு வெற்றிபெற்ற ஜெயவர்த்தன, முப்பது ஆண்டுகளின் பின்னர் - 1987ல் இலங்கை-இந்திய உடன்படிக்கையின் கீழ் அதிகார பரவலாக்கலுக்கென மாகாண சபைகளை உருவாக்கவும், வடக்கு கிழக்கு மாகாண சபைகளை இணைத்து செயற்படுத்தவும் எவ்வாறு இணங்கினர் என்பது பலரதும் புருவத்தை உயர்த்தும் முக்கியமான கேள்வி.

இதற்கான பதிலை ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1992ம் ஆண்டில் எழுதி வெளியிட்ட அவரது நினைவுப் பகிர்வான 'Men and Memories' என்ற நூலின் 109ம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"I Suggested that the temporary joinder should have a time-limit and that a referendum be held in the Eastern Province to decide whether or not people there wished their Province to be linked to the Nothern Province. The Indians agreed to this. I took a caclulated risk, as I had in 1957, opposed the Bandaranaike-Chelvanayagam Packed on this very issue. There was however the escape clause of a referendum which I hope would mollify critics of this move, because the Sinhalese and Muslims who together constituted 60 percent of the population of the Eastern Province would not willingly accept this merger and that at a referendum the 60 percent would win."

இதன் தமிழாக்கம் வருமாறு:

'தற்காலிக இணைப்புக்கு காலவரையறை இருக்க வேண்டுமெனவும், வடக்கு மாகாணத்துடன் இணைந்து இயங்குவதா இல்லையா என்பதை முடிவெடுக்க கிழக்கு மாகாண மக்களிடையே ஒரு கருத்துக்கணிப்பு (சர்வஜன வாக்கெடுப்பு) நடத்தப்பட வேண்டுமெனவும் நான் ஆலோசனை கூறினேன். 1957ம் ஆண்டு பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன் படிக்கையின் இதே விடயத்தில் (இணைப்பு) நான் எவ்வாறு ஒரு கணிப்பீட்டு அபாயத்தை முடிவெடுத்து எதிர்த்துச் செயற்பட்டேனோ அதுபோலவே இங்கும் (கருத்துக் கணிப்பீட்டில்) முடிவெடுத்தேன். கருத்துக் கணிப்பீட்டின் முடிவு பற்றி எனக்கொரு நம்பிக்கை இருந்தது.

கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையில் சிங்களவரும் முஸ்லிம்களும் இணைந்து 60 வீதமாக இருந்தமையால் வடக்குடன் இணைவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். எனவே கருத்துக் கணிப்பில் 60 வீதமே வெற்றிபெறும்".

ஜே.ஆர்.ஜெயவர்த்தன எப்போதும் குள்ளநரித்தன்மை கொண்டவர் என்பதை இவ்விடயத்தில் அவரே தமது கூற்றினூடாக நிரூபித்துள்ளார். வடக்கிலும் கிழக்கிலும் மாகாண சபைகள் அமைக்கப்பட்டனவாயினும் அவைகளை இணைப்பதற்கு ஒருபோதும் கருத்துக்கணிப்பு இடம் பெறவில்லை. அதுமட்டுமன்றி இலங்கையின் உச்ச நீதிமன்றம் சட்ட நுணுக்கத்தை முன்னிறுத்தி இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட இணைப்பை ரத் தாக்கிவிட்டதையும், இப்போது பேச்சு வார்த்தை முயற்சியில் ஈடுபடும் தமிழர் தரப்பினர் கவனத்தில் கொள்ளவேண்டும்.

1987ம் ஆண்டுக்குப் பின்னர் கிழக்கில் மேற் கொள்ளப்பட்ட மற்றும் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வரும் சிங்கள குடியேற்றங்களை கவனத்தில் கொண்டு, தற்போது கிழக்கு மாகாண மக்களிடையே ஏதாவதொரு காரணத்தையொட்டி கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்படுமானால் அதன் முடிவு எவ்வாறு அமையுமென்பதை இலகுவாக ஊகித்துக் கொள்ளலாம்.

கடந்த மூன்று தசாப்தங்களாக இனப்பிரச்சனைத் தீர்வுக்கென இடம் பெற்ற சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் புதிய வரலாறு. தாயகத்தில் வாழ்பவர்கள் மட்டுமன்றி, புலம் பெயர்ந்தும் புலன்பெயராது வாழும் தமிழ் மக்களும் இவ் விடயத்தில் சம பங்காளர்களாக இருக்கிறார்கள். நிகழ்கால சாட்சிகளாக ஜெனிவா அமர்வு, அதன் தீர்மானங்கள், சர்வதேச விசாரணைப் பொறிமுறை என்பவைகளை குறிப்பிட முடியும்.

நாடாளுமன்றத் தேர்தலில் படுகுப்புற விழுந்தபோதிலும், தேசியப் பட்டியல் ஊடாக எம்.பியாகி, அறகலய போராட்டத்தின் சின்னமாக முதலில் பிரதமராகி பின்னர் ஜனாதிபதியாகியுள்ள ரணில் விக்கிரமசிங்க தமது பங்குக்கு தமிழர் தரப்போடு பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளார்.

2002 முதல் 2004 வரை விடுதலைப் புலிகளோடு சர்வதேச நாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுகளை நடத்தி வரலாற்றில் பதிவுக்குரியவரான ரணில் இப்போது புதிய தோற்றத்தில் சமாதான தேவதையாக காட்சி கொடுக்கிறார். இலங்கையில் அனைத்துக்குமே தட்டுப்பாடு எனும் இன்றைய சூழலில், இனப்பிரச்சனைக்கு மூன்று மாதங்களில் தீர்வு காணப்போவதாக அதே ரணில் இப்போது உறுதியும் கூறுகிறார்.

எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஏற்றுக்கொண்ட பிரதேச சபை முறைமை, டட்லி சேனநாயக்க முன்மொழிந்த மாவட்ட சபை முறைமை, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒப்புக்கொண்டு அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை, சந்திரிகா குமாரதுங்கவின் தீர்வுப் பொதியில் இடம்பெற்ற பிராந்தியங்களின் ஒன்றியம் என்பவைகளின் வரிசையில் ரணில் எதனை முன்வைக்கப் போகிறார்?

மறுபுறுத்தில், சமக்ஷ்டி கோரும் தமிழர் தரப்பினர் சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா, கனடா என்ற எந்த நாட்டின் அரசியல் யாப்பை முன்வைக்கப் போகிறார்கள்? மாநிலங்களை விரும்பும் நேரத்தில் கலைக் கும் ஆளுமை அதிகாரத்தைக் கொண்ட இந்திய அரசியலமைப்பை நாடுவார்களா?

'என்னை நம்புங்கள். முன்நிபந்தனை வேண்டாம். முதலில் பேச்சை ஆரம்பிப்போம்" என்று அழைக்கும் ரணிலை நம்பி, அவருடன் நாலரை ஆண்டுகள் தேநிலவு கழித்து ஏமாந்தவர்கள் இரண்டாம் தேநிலவுக்கு ஏதோவொரு நம்பிக்கையில் ஆயத்தமாகிவிட்டனர். அதற்கான களமே முன்னால் விரிந்துள்ளது.

சிங்கள தேசியத்தின் இறையாண்மையை நிலைநாட்ட, தமிழ்த் தேசியம் அடகு வைக்கப்படுமா?

# கடல் அட்டை பண்ணைகள்: மீனவர்களின் வாழ்வாதார அழிவா?

## மீன் உற்பத்தி குறைந்து விட்டது



ஆ. றெனால்ட், அனலைதீவு.

அனலைதீவு கடல் பண்ணையால் எங்களுடைய கிராமத்து மக்கள் அதாவது, எங்களுடைய கடல் தொழில் செய்யும் மக்கள் நிறைய கஷ்டப்படுகின்றார்கள். எங்களுக்கு வாழ்வாதாரம் கடல்தான்.

மீன்பிடி அனலைதீவு மக்களின் பாரம்பரிய தொழிலாக - வாழ்வாதாரமாகக் காணப்படுகின்றது. அதனை செய்வதற்கான கஷ்டமாக உள்ளது. காரணம், கடல் அட்டை பண்ணைகள். நாம், மீன்பிடி வலை போடும் இடங்களில் கடல் அட்டை பண்ணையை கொண்டு வந்து போட்டுள்ளார்கள். அட்டைப் பண்ணையைப் போட்டதால் நமது வாழ்வாதார மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக காணப்படுகிறது. மீன்களின் இனப்பெருக்கமானது பெரிதாக இல்லை முதலில் நன்றாக இருந்தது. ஆனால், தற்போது குறைவடைந்துள்ளது. குறிப்பாக கடல் பண்ணையானது முதலில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்டது. இப்போது பெருமெடுப்பில் முன்னெடுக்கப்படுகின்றது.

மீனவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டமானது கடலட்டை பணியாளர்களுக்கு எதிராகவே முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக, சங்கங்கள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் இந்த தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். ஒரு குடும்பத்தை கொண்டு நடத்தக்கூடிய சூழ்நிலை தற்போது மீனவர்களான நம்மிடம் இல்லை. ஏனென்றால் இந்த கடல் அட்டை பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டதனால் மீன்களின் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ளது. மீன் உற்பத்தி இல்லாமையால் கடற்றொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

நமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தில் அடிக்கடி ஏதோ ஒரு பிரச்னை பூதாகரமாக உருவெடுக்கிறது. ஆரம்பத்தில், போர் - போர் முடிந்த பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறல். கூடவே, தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு இந்தப் பிரச்னைகள் தொடருகின்ற நிலையில், பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட எரிபொருள் பிரச்னை என்பனவற்றிலிருந்து இன்னமும் நமது மீனவர்கள் மீளவில்லை. இந்தப் பிரச்னைகளுடன் அண்மைக்காலமாக பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ளது கடல் அட்டைப் பண்ணைகள்.

இந்தக் கடல் அட்டைப் பண்ணைகள் ஏற்றுமதியை மட்டுமே பிரதானமாகக் கொண்டு அமைக்கப்பட்டவை. யாழ்ப்பாணத்தின் கடற்பரப்பில் இந்தக் கடல் அட்டைப் பண்ணைகளே அதிகளவில்



ஆக்கிரமித்து வருகின்றன.

இந்தக் கடல் அட்டைப் பண்ணைகளால் மீன் வளம் குறைவடைகிறது. இதனால், தாம் வாழ்வாதாரத்தை இழக்கிறோம் என்று மீன்பிடியை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். இந்த நிலையில், அனலைதீவு - பருத்தித்தீவின் கடல் அட்டைப் பண்ணையை எதிர்த்து மீனவர்கள் தொடர் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களின் மனக்குமுறல்கள் இங்கு பதிவுகளாகிறது.

## கையேந்தும் நிலைக்கு தள்ளிவிடாதீர்கள்!



க.ஜெகதீஸ்வரி, அனலைதீவு.

அனலைதீவு மீனவர்கள் நாங்கள் ஒரு சிறிய இடத்தில்தான் கடற்தொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். நாங்கள் படகுகளிலோ அல்லது பெரிய வள்ளங்களிலோ இந்த கடற்றொழிலை நாங்கள் மேற்கொள்ளவில்லை.

சிறிய சிறிய அளவுகளில் நாங்கள் இந்த மாதிரி தொழிலை மேற்கொண்டு எமது வாழ்வாதாரத்தை நடத்துகிறோம். அந்த இடத்தையும் தற்போது கடல் அட்டை பண்ணையினர் பிடித்துள்ளமையால் எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பொறுப்பான அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் நம்மை பட்டினி சாவில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். தவறும் பட்சத்தில் எமது வாழ்வாதாரம் முற்றுமுழுதாக அளிக்கப்பட்டு, நாங்கள் கையேந்தும் நிலைக்கு செல்ல வேண்டி ஏற்படும்.



அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## மீன்பிடிக்கச் சென்றவர்கள் வெறும் கையுடனே திரும்புகிறார்கள்!



உ. சவீந்திரா, அனலைதீவு.

அனலைத்தீவும் பருத்தித்தீவும் ஒரே இடமாகத்தான் காணப்படுகின்றது. ஏனென்றால், இப்பொழுது அனலைதீவு கிழக்கு தொழிலாளர்கள் உண்மையில் வறுமை நிலைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர்.

அதிலும், இந்த அட்டை பண்ணை வந்தமையால் எமது தொழிலாளர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள்.

ஏனென்றால், அவர்கள் தினமும் தொழிலுக்கு செல்கிறார்கள். வீட்டில் இருக்கின்ற மனைவி பிள்ளைகள் எல்லோருமே தொழிலுக்குப் போனவர்கள். கரைக்கு மீன் கொண்டு வந்து தமது அன்றாட வாழ்வாதாரத்தை மேற்கொள்வார்கள் என்றெண்ணி இருப்பார்கள். ஆனால், வரும்போது மீன் இல்லாது வெறும் வலையுடன் இங்கே திரும்பி வருகின்றார்கள். கடல் அட்டைப் பண்ணை காரணமாக எமக்கு மீன்கள் பெரிதாக பிடிபடுவதில்லை. இந்தக் கடல் பண்ணை வந்ததன் பிறகு நமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

தயவுசெய்து அனலைதீவு மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் விடயங்களை கருத்தில் கொண்டு உடனடியாக இந்த அட்டைப் பண்ணைகளை அகற்ற உதவுமாறு கோரிக்கை விடுகிறோம். ஏழைகளின் சோற்றில் கை வைக்காது - இந்த அட்டைப் பண்ணைகளை உடனடியாக அகற்றுடுமாறு தாழ்மையாக கோரிக்கை விடுக்கிறோம்.

## பிள்ளைகள் உணவு உண்ணாமல் பாடசாலை செல்லும் அவலநிலை!



எஸ். குமார்,அனலைதீவு.

இந்த கடல் அட்டைப் பண்ணை ஒரு வருடத்துக்கு மேலாக ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. இந்த அட்டைப் பண்ணை காணப்படுவதனால், எமது அனலைதீவு பகுதி மீனவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றார்கள்.

இந்தக் கடலை நம்பித்தான் அனலைதீவு பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது பண்ணை வந்ததன் காரணமாக கூலி வேலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, நாங்கள் இந்த கடலை நம்பித்தான் கடலில் தொழிலுக்கு சென்று அதில் வரும் மீனை பிடித்து விற்பனை செய்து எமது வாழ்வாதாரத்தை நடத்துகிறோம்.

ஆனால், இந்த அட்டை பண்ணை வந்ததன் பின்னர் நமக்கு மீன் பெரிதாகப் பிடிபடுவது இல்லை. இதன் காரணமாக நமது மீன்பிடித் தொழிலாளர்கள் பலர் கூலி வேலைக்கு செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால், இந்த விடயம் தொடர்பில் எந்த மட்டத்திலும் நமக்குரிய தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை. இந்த மக்களின் வறுமையை போக்குவதாக இருந்தால் அட்டைப் பண்ணையை முதலில் அகற்ற வேண்டும். இதை அகற்றினால் மாத்திரமே நமது தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்படும். அதாவது அட்டைப் பண்ணை அகற்றினால் மாத்திரமே பருத்தித்தீவுக்கும் அனலைதீவுக்கும் இடைப்பட்ட பகுதியில் மீன் இனப்பெருக்கம் கூடும்.

ஆனால், கடல் அட்டைப் பண்ணையால் மீன் இனப் பெருக்கமில்லாதால் மீன்கள் நமக்கு பிடிபடுவதில்லை. இதனால், எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக, இந்த கடலட்டை பண்ணையால் மீன் இனப்பெருக்கம் பெரிதாக பாதிக்கப்பட்டுள்ளது. மீன் வளம் அருகி விட்டது.

அனலைதீவு மீனவர்களிடம் பெரிய படகுகளோ, இயந்திரங்களோ இல்லை. இலகு கருவிகள் மூலமே மீன்பிடித்தலில் ஈடுபட்டு வருகின்றோம். எனவே, எமது மீனவர்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் இந்த கடல் அட்டை பண்ணை கட்டாயமாக அகற்ற வேண்டும். இந்த கடலட்டை பண்ணைக்கு யார் அனுமதி கொடுத்தார்கள் என்பது யாருக்குமே தெரியாது.

கடல் அட்டைப் பண்ணைக்கு அனுமதி கொடுத்தவர்கள் எமது மீனவர்களின் நிலையை ஏன் சிந்திக்காது கொடுத்தார்கள் என்ற கேள்வியை நாம் எழுப்புகிறோம்.

இந்த அனுமதி கொடுத்தவர்கள் கடலட்டைப் பண்ணையை இரத்து செய்து, நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவி செய்ய வேண்டும் என நாங்கள் கோரிக்கை விடுகின்றோம்.

குறிப்பாக இந்த பகுதியில் உள்ள மாணவர்கள் காலை உணவு உண்ணாது தான் பாடசாலைக்கு செல்கின்றார்கள். ஏனென்றால், மீன்பிடி படாததன் காரணமாக கடத்தொழிலுக்கு செல்வோர் ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றார்கள்

அவ்வாறு ஏமாற்றத்துடன் திரும்பி வரும்போது பாடசாலைக்கு செல்லும் மாணவர்களுக்கான காலை உணவை வழங்குவதற்கு அவர்களிடம் பணம் இல்லை. மீன் கொண்டு வந்தால் மாத்திரமே எமது மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படும். ஆனால், கடலுக்கு செல்லும் பலர் மீன் இல்லாது வலையுடன் மாத்திரம் திரும்பி வரும் அவல நிலை இங்கே காணப்படுகின்றது.




## திரைப்படம் -நாய்சேகர் ரிட்டர்ன்ஸ்

**நடிப்பு - வடிவேலு, ரெடின் கிங்ஸ்லி, ஷிவாங்கி**
**இயக்கம் - சுராஜ்**
**இசை - சந்தோஷ் நாராயணன்**
**தயாரிப்பு - லைகா**




நகைச்சுவை கடத்தல் மன்னன் ஒருவன் அசல் ரௌடிகளை கதறவிட்டு, ஓடவிட்டால்... அதுதான் 'நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்'. பணக்கார வீட்டு நாய்களை குறிவைத்து கடத்தி அதன் உரிமையாளர்களிடம் பணம் பறிக்கும் 'நகைச்சுவை' கடத்தல் மன்னன் நாய் சேகர் (வடிவேலு). இடையில் நிஜ ரௌடி ஒருவரின் நாயைக் கடத்தி சிக்கலில் மாட்டிக்கொள்கிறார்.

பின்னர் ஊரைவிட்டு கிளம்பலாம் என நினைக்கும்போது, அவரின் சொந்த நாயையே ஒருவர் கடத்தி வைத்து, அதன் யோகத்தால் கோடிகளில் புகழடைந்திருப்பதை அறிந்து, அதை மீட்க புறப்படுகிறார். இறுதியில் தனது நாயை நாய் சேகர் மீட்டாரா? இல்லையா? அதற்கிடையில் அவருக்கு வந்த பிரச்னைகளை எப்படி சமாளித்தார்? – இதுதான் படத்தின் திரைக்கதை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு திரையில் மீண்டும் வடிவேலு. பார்வையாளர்கள் பார்த்துப் பார்த்து ரசித்து குலுங்கி சிரித்த தனது தனித்துவ உடல் மொழியை வார்த்திருக்கிறார். அவருக்கான அறிமுகக் காட்சிகள் கிட்டத்தட்ட ஒரு அதிரடி நாயகனுக்கு இணையான அந்த அறிமுகக் காட்சி ரசிக்க வைக்கிறது. அந்த தனக்கான உடல் மொழியில் ஸ்ரைலாக நடந்து வருவது, வசனமற்ற காட்சிகளிலும் தனது முக பாவனையால் சிரிக்க வைப்பது, ஆங்கிலம் பேசும் அந்த ஸ்ரைல், டம்மியான தன்னை மாஸாக காட்ட நினைத்து பல்பு வாங்குவது என ஈர்க்கிறார். ஆனாலும், இயல்பான அந்த பழைய வடிவேலு ஏனோ தவறிவிடுகிறார்.

ஆனந்தராஜ் நகைச்சுவை காட்சிகளுக்கான பொருத்தமாக நடிக்கிறார். முன்னாள் ரௌடியை வைத்து, டம்மி கூட்டாளிகளுடன் அவர் நடத்தும் 'கடத்தல்' தர்பார் பல இடங்களில் ரசிக்க வைக்கிறது. இரண்டாம் பாதியில் வரும் ராவ் ரமேஷின் நடிப்பு கவனம் பெறுகிறது. ரெடின் கிங்ஸ்லீ வழக்கமான தனது பாணியில் சில இடங்களில் புன்முறுவலையும், ஒரு சில காட்சிகளில் சத்தமாக சிரிக்கவும் வைக்கிறார்.

செட் ப்ராபர்டிகளாக வருகிறார் ஷி வாங்கி. பிரசாந்தை முதல் பாதியுடன் முடித்து அனுப்பும் இயக்குநர் அந்த இடத்தில் இரண்டாம் பாதிக்கு ஷிவானியை தேர்ந்தெடுத்துள்ளார். தவிர முனிஷ்காந்த், லொள்ளு சபா ஷேஷு, கலக்கப்போவது யார் புகழ் ராமர், கலக்கப்போவது யார் புகழ் பாலா, லொள்ளு சபா மாறன், மனோபாலா தேவையான நடிப்பை பதிவு செய்கின்றனர்.

சுராஜ் இயக்கியிருக்கும் இப்படத்தின் முதல் பாதி திரைக்கதையில் நகைச்சுவை வறட்சி தலைவிரித்தாடுகிறது. நகைச்சுவையை எதிர்நோக்கி காத்திருக்கும் பார்வையாளர்களுக்கு ஆனந்தராஜ் திரையில் தோன்றுவது சற்று ஆறுதல். மற்றபடி, வடிவேலு நாய் கடத்துபவர் என காட்ட நினைத்து வைக்கப்பட்ட பெரும்பாலான காட்சிகள் உப்பு சப்பில்லாதவை.

ஆனந்தராஜ் – வடிவேலு நேருக்கு நேர் சந்திக்கும் காட்சிகள் சுவாரஸ்யம். நிறைய நகைச்சுவை நடிகர்கள் இருந்தும் அவர்களால் திரைக்கதைக்கு தேவையான நகைச்சுவை கொடுக்க முடியாததாலும், அழுத்தமில்லாத காட்சிகளாலும் வடிவேலுவால் கூட முதல் பாதியைக் காப்பாற்ற முடியவில்லை.

'கொண்டைக்கு கோக்கனேட் ஒயில்', 'நீங்க டாக்டரா டயலொக் ரைட்டரா', 'பங்களாவா இங்க இருக்காரு பாரு சிங்கிளா' என ரைமிங் டயலொக்குகள் சில இடங்களில் கைகொடுக்கின்றன. இரண்டாம் பாதியில் கண்தெரியாத மாற்றுத்திறனாளியாக ஸ்கோர் செய்கிறார் வடிவேலு.

இடையில் வரும் கடவுச்சொல் நகைச்சுவையும் உச்சக்கட்ட காட்சியும் சிரிப்பலையை எழுப்புகின்றன. இதைத்தாண்டி படத்தில் பெரியளவில் சிரிக்கவோ, ரசிக்கவோ, அழுத்தமான திரைக்கதைக்கோ எந்த இடத்திலும் இடமளிக்காதது கைபேசியை கையிலெடுக்க தூண்டுகிறது.

'அப்பத்தா' பாடலுக்கான பின்னணி இசையை பெரும்பாலான இடங்களில் பிணைத்து, நகைச்சுவை காட்சிகளுக்கான இசையை தேவைக்கேற்ப கொடுத்திருக்கிறது சந்தோஷ் நாரயணனின் இசை. வடிவேலுவுக்கான ஆடைகள் தேர்வு கிட்டத்தட்ட 'ஒரு கல் ஒரு கண்ணாடி' சந்தானத்தின் உடைத் தேர்வை நினைவுபடுத்தியது.



வடிவேலு தன்னால் முடிந்த நடிப்பை யும், உழைப்பையும் செலுத்தியிருப்பது பளிச்சிடுகிறது. ஆனால், அவரை இன்னும் பயன்படுத்தியிருக்கலாம் என தோன்றுகிறது. குறிப்பாக மொத்தப் படமும் முழுமையற்று ஒரு சில நகைச்சுவை காட்சிகளை மட்டும் பார்த்த உணர்வை தருகிறது. தவிர கதையாகவோ, திரைக்கதையாகவோ எந்த இடத்திலும் அழுத்தம் மேலோட்டமாக நகரந்தது பலவீனமான எழுத்தை உறுசெய்கின்றன.

மொத்தத்தில் வடிவேலுவின் 'நாய் சேகர்' பார்வையாளர்கள் மனதில் நீங்கா இடத்தில் நிலைகொள்ளும் என கருதினால், அது சில நகைச்சுவைக் காட்சிகளைத் தாண்டி பெரிய அளவில் ஆட்கொள்ளாமல் கடந்திருக்கிறது.



## வாய்ப்பு கேட்ட ஜான்வி

மறைந்த நடிகை சிறீதேவியின் மூத்த மகள் ஜான்வி கபூர். நாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட கதைகளில் நடித்து வருகிறார்.

அவர், விரைவில் தென்னிந்திய மொழியில் அறிமுகமாக இருப்பதாகக் கூறப்படும் நிலையில், விஜய் சேதுபதியிடம் நடிக்க வாய்ப்புக் கேட்டுள்ளாராம்.

"நானும் ரௌடிதான்' படத்தை 100ஆவது முறை பார்த்துவிட்டு, விஜய் சேதுபதிக்கு போன் செய்தேன். 'நான் உங்களின் தீவிர ரசிகை. உங்கள் படத்தில் வாய்ப்பு இருந்தால் சொல்லுங்கள், படப்பிடிப்பு தேர்வில் கலந்து கொள்கிறேன்' என்றேன்.

அவர் 'ஐயோ, ஐயோ' என்றார். அவர் கோபப்பட்டாரா, வெட்கப்பட்டாரா என்று தெரியவில்லை" என்று ஜான்வி கபூர் தெரிவித்துள்ளார்.

## திருமணம் எப்போது?

நடிகை தமன்னா தெலுங்கில் நடித்துள்ள படம், 'குர்துந்தா சீதாகாலம்' கடந்த வெள்ளிக்கிழமை வெளியானது.

இப்போது என்னை ஒரு நட்சத்திரமாக பார்க்கவில்லை. நடிகையாக மட்டுமே பார்க்கிறேன். படங்களில் ஒப்பந்தமாகும் போது, உடன் நடிப்பவர் பெரிய நாயகனா? புதுமுகமா என்றும் யோசிப்பதில்லை. கதையையும் அதில் நடிப்பது பற்றி என் உள்ளுணர்வு சொல்வதையும் மட்டுமே கேட்கிறேன்.

என் திருமணம் பற்றி கேட்கிறார்கள். நான் திருமணத்துக்கு அவசரப்படவில்லை. எப்போது நடக்க வேண்டுமோ அப்போது நடக்கும் - என்றார்.






## சிலம்பம் கற்கும் மாளவிகா!

பா. ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் படம், 'தங்கலான்'. இதில் பார்வதி, பசுபதி, மாளவிகா மோகனன் உட்பட பலர் நடிக்கின்றனர்.

கோலார் தங்க வயல் பின்னணியில் உருவாகும் இந்த படத்தின் படப்பிடிப்பு இப்போது நடந்து வருகிறது. இந்தப் படத்துக்காக நடிகை மாளவிகா மோகனன், சிலம்பம் பயிற்சி செய்யும் காணொலியை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், சிலம்பம்என்ற அற்புதமான உலகத்துக்குள் முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆதி படத்தில் அனிகா

'மீசைய முறுக்கு' என்ற படத்தை இயக்கி நாயகனாக அறிமுகமானவர் இசையமைப்பாளர் ஹிப் ஹாப் ஆதி. அதன் பிறகு நட்பே துணை, நான் சிரித்தால், சிவக்குமாரின் சபதம், அன்பறிவு போன்ற படங்களில் நடித்தார்.

தற்போது நாயகனாக நடிக்கும் படத்தை கார்த்திக் வேணுகோபாலன் என்பவர் இயக்குகிறார். இப்படத்தில் என்னை அறிந்தால், விஸ்வாசம் போன்ற படங்களில் அஜித்தின் மகளாக நடித்த அனிகா சுரேந்திரன் நாயகியாக நடிக்கிறார்.

பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்த இவர் தற்போது நாயகியாக நடிக்கத் தொடங்கியுள்ளார். தெலுங்கு, மலையாளத்தில் தலா ஒரு படத்தில் நாயகியாக இவர் நடிப்பவர் இந்த படம் மூலம் தமிழில் நாயகியாக களமிறங்கியுள்ளார்.





# போர்த்துக்கல்லின் துணிச்சல் முடிவு

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் சுவிற்சர்லாந்து அணியை 6-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி கடைசி அணியாக காலிறுதிக்குள் நுழைந்தது போர்த்துக்கல். கோன்கலோ ரமோஸ் ஹட்ரிக் கோல் அடித்து அசத்தினார்.

கட்டார் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை நடந்த போட்டியில் போர்த்துக்கல் - சுவிற்சர்லாந்து அணிகள் மோதின. போர்த்துக்கல் அணியில் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ றொனால்டோ களமிறக்கப்படவில்லை. அவருக்கு பதிலாக கோன்கலோ ரமோஸுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

17ஆவது நிமிடத்திலேயே தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு சரியானதுதான் என நிரூபித்தார் 21 வயதான ரமோஸ். ரபேல் குரேரோ த்ரோ செய்த பந்தை ஜோவோ பெலிக்ஸ் கட் செய்து கோன்காலோ ரமோஸுக்கு அனுப்பினார். அருகில் சுவிற்சர்லாந்து தடுப்பாட்ட வீரர் பேபியன் பங்கு இருந்த போதிலும் அவரை கடந்து கோல் காப்பாளர் யான் சோமர் திகைத்து போகும் அளவுக்கு பந்தை கோல் வலைக்குள் திணித்தார் கோன்காலோ ரமோஸ்.

இதனால் போர்ச்சுகல் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 33ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் 2ஆவது கோலை அடித்தது. கோர்ணரில் இருந்து புரூனோ பெர்னாண்டஸ் உதைத்த பந்தை இலக்குக்கு மிக நெருக்கமான வகையில் தலையால் முட்டி கோல் அடித்தார் பெப்பே. இதனால் போர்த்துக்கல் அணி முதல் பாதியில் 2-0 என முன்னிலை வகித்தது. 2ஆவது பாதி ஆட்டம் தொடங்கிய 6ஆவது நிமிடத்தில் கான்கோலோ ரமோஸ் மீண்டும் ஒரு கோலை அடித்தார்.

இலக்குக்கு 6 அடி தூரத்தில் இருந்தபடி டியோகோ டலோத்திடமிருந்து கான்கோலா ரமோஸ் அற்புதமாக கோல் அடித்தார்.அடுத்த 4ஆவது நிமிடத்தில் ரமோஸின் உதவியுடன் பந்தை பெற்று ரஃபேல் குரேரோகோல் அடிக்க சுவிற்சர்லாந்து அணி அதிர்ச்சியில் உறைந்தது.

எனினும் அந்த அணி கோல் அடிக்க போராடியது. 58ஆவது நிமிடத்தில் கோர்ணரில் இருந்து உதைக்கப்பட்ட பந்தை சுவிற்சர்லாந்து வீரர் அகன்ஜி கோலாக மாற்றினார்.

67ஆவது நிமிடத்தில் கான்கோலா ரமோஸ் ஹட்ரிக் கோல் அடித்து அசத்தினார். ஜோவோ பெலிக்ஸ் உதவியுடன் இந்த கோலை அவர், அடித்தார். இதனால் போர்த்துக்கல் 5-1 என்ற வலுவான முன்னிலையை நோக்கி நகர்ந்தது. போட்டி முழுவதும் போர்த்துக்கல் அணியின் கட்டுப்பாட்டுக்குள் வந்த நிலையில் 73ஆவது நிமிடத்தில் ஜோவோ பெலிக்ஸுக்கு பதிலி வீரராக கிறிஸ்டியானோ றொனால்டோ களமிறக்கப்பட்டார். 83ஆவது நிமிடத்தில் றொனால்டோ அடித்த கோல் ஓவ் சைட் என அறிவிக்கப்பட்டது.

காயங்களுக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட 2ஆவது நிமிடத்தில் ரபேல் லியோ கோல் அடிக்க போர்த்துக்கல் 6-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு முன்னேறியது.



21 வயதான கோன்காலோ ரமோஸ் சுவிற்சர்லாந்து போட்டிக்கு முன்னதாக வெறும் 3 ஆட்டங்களில் 33 நிமிடங்கள் மட்டுமே போர்த்துக்கல் அணிக்காக விளையாடி இருந்தார். அப்படி இருக்கும்போது அவருக்காக 5 உலகக் கிண்ணங்களில் கோல் அடித்த வீரர் என்ற பெருமையையும் தேசிய அணிக்காக 118 கோல் விளாசியவருமான றொனால்டோவை வெளியே அமர வைத்தது என்பது பயிற்சியாளர் பெர்னாண்டோ சாண்டோஸ் எடுத்த துணிச்சலான முடிவாகவே பார்க்கப்படுகிறது.



எனினும், தன் மீது வைத்த நம்பிக்கையை ரமோஸ் நீர்த்துப்போக செய்யவில்லை. விளையாடிய முதல் நொக் அவுட் ஆட்டத்திலேயே ஹட்ரிக் கோல் அடித்து புதிய நாயகனாக உருவெடுத்துள்ளார்.

5ஆவது முறையாக உலகக் கிண்ணத்தில் பங்கேற்றுள்ள கிறிஸ்டியானோ றொனால்டோவுக்கு பதிலாக களமிறக்கப்பட்ட கோன்காலோ ரமோஸ் தான் பங்கேற்ற முதல் நொக் அவுட் சுற்று ஆட்டத்தில் 17ஆவது நிமிடத்திலேயே கோல் அடித்து அனைவரையும் ஈர்த்தார்.

### கிறிஸ்டியானோ றொனால்டோவை நீக்கியது ஏன்?

கிறிஸ்டியானோ றொனால்டோ லீக் சுற்றில் தென் கொரியாவுக்கு எதிரான போட்ட்யில் 25ஆவது நிமிடத்தில் வெளியே எடுக்கப்பட்டார். இதனால் அவர், அதிருப்தியுடன் வெளியே வந்தார். இந்நிலையில் சுவிற்சர்லாந்துக்கு எதிராக றொனால்டோ தொடக்க வரிசையில் சேர்க்கப்படவில்லை. 73ஆவது நிமிடத்தில் பதிலி வீரராகவே அவர், களமிறக்கப்பட்டார்.

இது குறித்து போர்த்துக்கல் அணியின் பயிற்சியாளர் பெர்னாண்டோ சாண்டோஸ் கூறும்போது, “தென் கொரியாவுக்கு எதிரான ஆட்டத்தில் நிகழ்ந்தது முடிந்து போன விஷயம். றொனால்டோ உலகின் சிறந்த வீரர்களில் ஒருவர். அணியைப் பற்றியும் நாம் கூட்டாகச் சிந்திக்க வேண்டும். றொனால்டோவும் நானும் பயிற்சியாளர் மற்றும் வீரருக்கு உண்டான தொடர்புகளுடன் தனிப்பட்ட அம்சத்தை ஒருபோதும் குழப்புவதில்லை” என்றார்.

### முதல் கோல் மழை:

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் நொக் அவுட் சுற்றில் போர்த்துக்கல் அணி கடைசியாக கடந்த 1996ஆம் ஆண்டு 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராக இரு கோல்கள் அடித்திருந்தது. இதன் பின்னர் தற்போதுதான் நொக் அவுட் சுற்றில் அதிக கோல்கள் அடித்துள்ளது.

### கோல் பட்டியலில் பாப்பே ஆதிக்கம்

கட்டார் உலகக் கிண்ணத் தொடரானது காலிறுதி சுற்றை எட்டியுள்ளது. காலிறுதிக்கு முந்தைய சுற்றுவரை அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் பிரான்ஸின் கிளியன் பாப்பே 5 கோல்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

என்னர் வலென்சியா (ஈகுவடோர்), கோடி காக்போ (நெதர்லாந்து), மார்கஸ் ராஷ்போர்ட் (இங்கிலாந்து), அல்வரோ மொராட்டா (ஸ்பெயின்), லயோனல் மெஸ்ஸி (அர்ஜெண்டினா), ஆலிவர் கிரவுடு (பிரான்ஸ்), புகாயோ சகா (இங்கிலாந்து), ரிச்சர்லிசன் (பிரேசில்), கோன்காலோ ரமோஸ் (போர்ச்சுகல்) ஆகியோர் தலா 3 கோல்கள் அடித்துள்ளனர்.

### அதிக வயதில் கோல்...

சுவிற்சர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் போர்த்துக்கல் அணியின் 2-வது கோலை பெப்பே அடித்தார். இதன் மூலம் உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் ரோஜர் மில்லாவுக்கு (42 வருடங்கள் 39 நாட்கள்) பின்னர் அதிக வயதில் கோல் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார் பெப்பே (39 வருடங்கள் 283 நாட்கள்). ரோஜர் மில்லா 1994-ம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் ரஷ்யாவுக்கு எதிராக கோல் அடித்திருந்தார்.

### பீலேவுக்கு பிறகு...

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் நொக் அவுட் சுற்றில் பிரேசிலின் பீலேவுக்கு பிறகு இளம் வயதில் ஹட்ரிக் கோல் அடித்த வீரர் என்ற பெருமையை போர்த்துக்கல்லின் 21 வயது வீரர் கோன்காலோ ரமோஸ் பெற்றுள்ளார்.

இலக்குக்கு 6 அடி தூரத்தில் இருந்தபடி டியோகோ டலோத்திட மிருந்து கான்கோலா ரமோஸ் அற்புத மாக கோல் அடித்தார்.அடுத்த 4ஆவது நிமிடத்தில் ரமோஸின் உதவியுடன் பந்தை பெற்று ரஃபேல் குரேரோகோல் அடிக்க சுவிற்சர்லாந்து அணி அதிர்ச்சி யில் உறைந்தது. எனினும் அந்த அணி கோல் அடிக்க போராடியது. 58ஆவது நிமிடத்தில் கோர்ணரில் இருந்து உதைக்கப்பட்ட பந்தை சுவிற்சர்லாந்து வீரர் அகன்ஜி கோலாக மாற்றினார்.

## வன்னிப் பெருநிலப்பரப்பில்

# மீண்டும் அரியதொரு தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு

**பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்**

வவுனியா வடக்கு பெரியமடுப் பகுதியைச் சேர்ந்த திருவாளர்களான த.சசிகரன், ப.செந்தூரன், வி.ஜெகதீஸ்வரன், இ.நகுலேஸ்வரன் மற்றும் வ.கிந்துஜன் ஆகியோர் அண்மையில் தமது நெற்காணிகளுக்கு காட்டு வழியூடாக சென்று வரும் போது அக்காட்டில் அழிவடைந்த சிறிய கேணிக்கு அருகிலுள்ள கற்தூண் ஒன்றை அடையாளம் கண்டனர். அக்கற்தூணில் புராதன எழுத்துக்கள் சில இருப்பதை அவதானித்த அவர்கள் அதுபற்றிய புகைப் படத்தை எமது தொல்லியல் பட்டதாரிகளான சுதர்சன் தம்பதியினருக்கு அனுப்பி வைத்தனர். அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட அவர்கள் அப்புகைப் படத்தை எனக்கு அனுப்பி வைத்தனர். அப்புகைப்படத்தில் உள்ள எழுத்துக்கள் ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்குரியவை என்பதை உறுதிப்படுத்திய நாம் தொல்லியற் திணைக்களக பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன், பிராந்திய தொல்லியற் திணைக்களக ஆய்வு உத்தியோகத்தர்களான திரு.வ.மணிமாறன் மற்றும் பா. கபிலன் ஆகியோருடன் பெரியமடு பிரதேசத்திற்கு சென்றிருந்தோம். அங்கு சென்ற போது கல்வெட்டுகளை அடையாளம் கண்ட அன்பர்களும், திரு.சுதர்சன் குடும்பத்தினரும் கல்வெட்டுக்காணப்பட்ட இடத்திற்குச் செல்வதற்கான ஒழுங்குகளையும் செய்துதந்தனர்.

இக்கல்வெட்டு வவுனியா வடக்கில் நெடுங்கேணியின் தென்னெல்லையில் உள்ள பெரியமடு பிரதேசத்தின் நயினாமடு கிரமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட கோடலிபறிச்சான் என்ற காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. இவ்விடத்தை இங்குள்ள சிறிய நடைபாதையில் இருந்து அடர்ந்த காடுகள் ஊடாக நீண்ட நேரக் கால்நடைப் பயணத்தின் பின்னரே அடையமுடிந்தது. இவ்விடத்திற்கு மிக அருகில் பாழடைந்த சிறிய கேணியொன்று காணப்படுகின்றது. அக்கேணியைச் சுற்றி பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்கள் நாட்டப்பட்டுள்ளன. இவை இங்கிருக்கும் கேணியின் தொன்மையையும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதாக இருந்தது. இவ்விடத்தின் சுற்றாடலில் பழடைந்த சில குளங்களும், சிறிய மண்மேடுகளும், அடர்ந்த காட்டுமரங்களுடன் சில புளிமரங்களும், இலுப்பை மரங்களும் காணப்படுகின்றன. அவற்றிடையே அரிதாக சில செங்கட்டிகளும், சிலவகை மட்பாண்ட ஓடுகளும் காணப்பட்டன. இவை முன்பொரு காலத்தில் இவ்விடங்களில் செறிவான மக்கள் குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றாகும். ஆகவே இவ்வாதாரங்களின் பின்னணியிலேயே இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டியுள்ளது.

இக்கல்வெட்டு ஒரே வெள்ளைக் கருங்கல்லில் பீடத்துடன் இணைந்ததாகச் செதுக்கப்பட்டு இங்கிருக்கும் கேணிக்கு அருகில் நாட்டப்பட்டிருந்துள்ளது. ஆயினும் தற்போது அக்கல்வெட்டுப் பாகம் மூன்று துண்டங்களாக உடைந்து கேணிக்கு அருகிலேயே காணப்படுகின்றன. அவற்றுள் 70 செ.மீ உயரமும், 24 செ.மீ அகலமும் கொண்ட கல்வெட்டின் பீடம் தனித்துண்டாகக் காணப்படுகின்றது. இதற்கு அருகில் 164 செ.மீ உயரமும், 20 செ.மீ அகலும் கொண்ட எழுத்துப் பொறிக்கப்பட்டுள்ள கல்லின் பாகமும் இன்னொரு துண்டமாகக் காணப்படுகின்றது.

இக்கல்வெட்டில் மேற்பாகத்தில் மங்கலச் சொல்லுடன் தொடங்கியிருக்க வேண்டிய இரண்டு அல்லது மூன்று வரிகள் கொண்ட கல்வெட்டின் பாகம் உடைந்த அல்லது உடைக்கப்பட்ட நிலையில் உள்ளது. ஆயினும் அப்பாகத்தை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 164 செ.மீ உயரம் கொண்ட கல்லின் நான்கு பக்கங்களில் ஏறத்தாழ 63 வரிகளில் எழுத்துப் பொறிப்புகள் காணப்படுகின்றன. 16 வரிகள் கொண்ட நான்காவது பக்கச் சாசனத்தின் (எழுத்துப் பொறிப்புகளில்) சில வரிகளின் எழுத்துக்கள் தேய்வடைந்து காணப்படுவதால் அவற்றைச் சரியாக வாசிக்கமுடியவில்லை. அவ்வரிகளை மீண்டும் முறையாகப் படியெடுக்கும் போது இக்கல்வெட்டின் நான்கு பக்க சாசனங்களின் வாசிப்பும் முழுமைபெறலாம்.

இக்கல்வெட்டை அடர்ந்த காட்டினுள் மழையும், இருட்டும் தொடர்ந்த நிலையில் யானைகள் வந்துவிடுமோ என்ற அச்சத்துடன் குறுகிய நேரத்திலேயே படியெடுக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் இக்கல்வெட்டை அடையாளம்காட்ட உதவிய அன்பர்களின் கடின உழைப்பினாலும், அவர்கள் கொடுத்த தன்னம்பிக்கையாலும் எமது தொல்லியல் பட்டதாரிகளின் முழுமையான பங்களிப்புடன் இக்கல்வெட்டைப் படியெடுத்து முடிக்கப்பட்டமை இவ்விடத்தில் சிறப்பாக நினைவுகூரத்தக்கது. இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றின் புகைப்படங்களை படிப்பதற்கும், அதுபற்றி கருத்துக்களை அறிவதற்கும் வெளிநாடுகளில் வசிக்கும் எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர் பொ.இரகுபதி, கலாநிதி. இராஜகோபால் ஆகியோருக்கு அனுப்பி வைத்தேன். அக்கல்வெட்டு படிகளை பேராசிரியர் வை.சுப்பராயலு, பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியேயார் தனித்தனியாகப் படித்து எனக்கு அனுப்பி வைத்தனர். அவர்களின்





வாசிப்பையிட்டு பேராசிரியர் இந்திரபாலா அவர்களும் தனது திருப்தியை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்தியிருந்தார். அவர்களின் வாசிப்பின் முக்கிய அம்சங்களை இவ்விடத்தில் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

ஜெயபாகு தேவரது பன்னிரண்டாவது ஆட்சியாண்டின் போது வடகரை நாட்டு மூன்று கை திரு வேளைக்காறர் பிரிவைச் சேர்ந்த மதிமான் பஞ்சரத் தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் இங்கிருந்த கோயிலின் அம்பலம்(மடம்) பொகொறோணி (சிறுகுளம்) கிணறு ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர் என்பதும், இவற்றைச் செய்தவன் மூவேந்தவேளான் என்ற பட்டம் கொண்ட அதிகாரி என்பதும் தெரியவருகின்றது.

மேலும் இக்கல்வெட்டின் இரண்டாம், மூன்றாம் பக்கங்களில் இப்படைப் பிரிவில் இருந்த படைவீரர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஒரே பெயர் பல படைவீரர்களுக்குரிய பெயர்களாகக் காணப்படுகின்றது. அப்பெயர்களாக :

*1.--இர 2.க்கன் 3.இரக்கன் 4. பெரியான் 5.இரக்கன் 6.புத்தை 7.நெட்டுர் 8.ஆதித்தந் 9.கொடி 10.சோழன் 11.சாத்தன் 12. கண்டந் 13.கூத்தந் 14.ஏறன் சு 15. ந்தன் 16.சாத்தன் 17.சாத்தி 18.சாத்தன் 19.அம்மணி 20. சாத்தன் 21.இரக்கந் 22. கண்டந் 23.அம்பலம் 24.சோழன் அ 25.மூதி* ஆகிய பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் இடைக்கால வடஇலங்கையின் வரலாறு பொறுத்தும், தமிழர் வரலாறு பொறுத்தும் எழும் கேள்விகளுக்கு விடைகூறும் புதிய செய்திகளைத் தருவதாக இருக்கும். இக்கல்வெட்டில் வரும் ஜெயபாகு என்ற பெயரில் பொலநறுவை இராசதானி காலத்தில் மூன்று சிங்கள மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட ஆறு கல்வெட்டுகள் இதுவரை கிடைத்துள்ளன. இதேவேளை ஜெயபாகு என்ற பெயர் கொண்ட ஒருவனை பாளி, சிங்கள இலக்கியங்கள் தமிழ் மன்னன், தமிழ்ச் சிற்றரசன், பொல நறுவையில் கலிங்கமாகனுடன் இணைந்து ஆட்சிபுரிந்த துணையரசன் எனவும், அவனிடம் நாற்பதாயிரம் படைவீரர்கள் இருந்ததாகவும் கூறுகின்றன. ஆயினும் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் ஜெயபாகுவும் கல்வெட்டில் வரும் ஜெயபாகு மன்னனும் ஒருவனா என்பது கல்வெட்டின் காலத்தைச் சரிவர வரையறுத்ததன் பின்னரே கூறமுடியும். இக்கல்வெட்டில் வடகரைநாடு பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சிங்கள கல்வெட்டுகளிலும், பாளி, சிங்கள இலக்கியங்களிலும் வடஇலங்கை வடகர( வடகரை), படகர ( பஃவ) என அழைக்கப் பட்டுள்ளது. ஆயினும் தமிழக கல்வெட்டுக்களில் வடகரைநாடு பற்றி பல குறிப்புகள் காணப்படுகின்றன. இதனால் இக்கல்வெட்டில் வரும் வடகரைநாடு என்பது எந்த நாட்டைக் குறிக்கின்றதென்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

இக்கல்வெட்டு மதிமான் பஞ்சரத்தெரிந்த வில்லிகள் என்ற படைப்பிரிவு வீரர்கள் பற்றிக் கூறு கின்றது. மதிமான் பஞ்சரன் பற்றிய சில சான்றுகள் இடைக்கால இலங்கைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. ஆயினும் பேராசிரியர் சுப்பராயலு அவர்கள் இப்பெயர் கொண்ட படைப்பிரிவு தமிழகத்தில் இருந்ததற்கு சான்றுகள் இல்லையெனக் கூறுகின்றார். இதனால் இப்படைப்பிரிவை இலங்கைக்கு உரியதாகப் பார்க்க இடமுண்டு. இதை எதிர்கால ஆய்வுகள் மூலம் மேலும் உறுதிப்படுத்தவேண்டும். இன்று காடாகக்காணப்படும் கோடலிபறிச்சான் இற்றைக்கு 1000க்கு முன்னரும் காடாக இருந்திருக்கும் எனக் கூற முடியாது. ஏனெனில் இக்கல்வெட்டு இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்விடத்தில் கோயில் மடம், சிறுகுளம், கிணறு இருந்தன என்ற புதிய செய்தியைத் தருகின்றது.

இவற்றில் இருந்து இங்கு இந்து ஆலயம் இருந்துள்ளமை உறுதியாகத் தெரிகின்றது. இக்கூற்றைத் தற்போது அழிவடைந்து காணப்படும் கேணியும், அதைச்சுற்றி பரவலாகக் காணப்படும் பொழிந்த வெள்ளைக் கருங்கற் தூண்களும், அருகிலே காணப்படும் உயர்ந்த மண்மேடுகளும் உறுதிசெய்கின்றன. அவ்விடங்களில் அகழ்வாய்வுகள் செய்யப்படுமானால் அந்த உண்மையை மேலும் உறுதி செய்யப்படலாம்.

இங்கிருந்த ஆலய மடம், சிறுகுளம், கிணறு என்பன தமிழ்ப்படை வீரர்களுக்கு ஜீவிதமாக வழங்கப்பட்டமையும், அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை அப்படைவீரர்கள் ஏற்றுக் கொண்டமை பற்றியும் இக்கல்வெட்டுக் கூறுவது அதி முக்கிய வரலாற்றுச் செய்தியாக உள்ளது. இவற்றில் இருந்து சோழர் ஆட்சியின் முடிவோடு வடஇலங்கை பொலநறுவையின் பண்பாட்டு வட்டத்தில் இருந்து படிப்படியாக விடுபட்டு வருவதை இச்செய்தி உணர்த்துவதாக உள்ளது. அண்மைக்காலங்களில் இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்த வரலாற்று நூல்களும், கல்வெட்டுகளின் கண்டுபிடிப்புக்களும் 1070 இல் சோழரின் ஆட்சி வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரின் அரசியல், பண்பாட்டு வரலாறு தனிப்போக்குடன் தமிழ்ப் பிரதேசங்களில் படிப்படியாக வலுப்பெற்று வந்ததை வெளிப்படுத்துவதாக உள்ளன. இதற்கு உதாரணமாக சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட சில சம்பவங்களை இவ்விடத்தில் குறிப்பிடலாம்.

சோழரை வெற்றி கொண்ட முதலாம் விஜயபாகு தனது அரசையும், பௌத்த மதத்தையும் பாதுகாக்க சோழர்காலப் படைவீரர்களிலேயே தங்கியிருந்தான். ஆயினும் அவன் சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு அப்படைவீரர்களை வேண்டிய போது அதை ஏற்க மறுத்த தமிழ்ப்படைவீரர்கள் பொலநறுவை அரசின் மீது படையெடுத்து அவ்வரசை வெற்றி கொண்டனர்.

**(18 ஆம் பக்கம் பார்க்க...)**

# சமரசம் மலர்ஸ்

—— நெற்கொழு தாசன்



என்னதான் இருந்தாலும் கொடியாள் ஆளொரு விண்ணிதான் என தன்னையறியாமல் உரத்துக் கூறி விட்டதை உணர்ந்து, தான் கூறியதை யாராவது கவனித்திருப்பார்களா எனத் திரும்பிப் பார்த்தார் உலகளந்த பிள்ளை. குரல் கொட்டாவியோடு கலந்திருந்ததாலோ என்னவோ ஒரு வருக்கும் விளங்கியிருக்கவில்லை. மெல்லிய புன்னகையோடு திருப்திப்பட்டுக்கொண்டார். இருந்தபடியே தோளில் கொழுவியிருந்த பைக்குள் கையைவிட்டு யாருக்கும் தெரியாமல் விரல்களை மடித்து எண்ணிப் பார்த்தார். திரும்பி எங்கோ பராக்கு பார்ப்பவர் போலப் பாவனை செய்தபடி மீண்டும் ஒருமுறை மனதால் கணக்கிட்டார். மெதுவாகத் தலையாட்டி இதுவரை எல்லாம் சரியாகத்தான் போகிறது. ஆள் வந்தவுடன் காசைக் கொடுத்துவிட்டு உள்ளுக்குள் போய் விட்டால் சரியெனத் தனக்குள் சொல்லிக்கொண்டார்.

அமர்ந்திருந்த இடத்திலிருந்து பார்க்கையில் டிஸ்னிலாண்ட் வர வேற்புப் பலகையும், அதனோடு இணைந்திருந்த அறிவிப்புப் பலகையும் தெரிந்தது. நான்கு மொழிகளில் அறிவுறுத்தல்கள் எழுதப்பட்டிருந்தன. தமிழ் இருக்கிறதா எனத்தேடினார். இல்லை. என்ன எழுதியிருக்கிறதென அறியும் ஆவலில் மனைவியின் முகத்தைப் பார்த்தார். போனில் வீடியோ எடுத்துக்கொண்டிருந்த மலர்க்கொடியாள் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். அவளது அசைவுகள், நீ அதை அறிஞ்சு என்ன கிழிக்கப்போறாய் என்று கேட்பதுபோல இருந்தது. பேசாமல் பார்வையை வேறுபக்கம் திருப்பினார். அலவாங்கை விழுங்கிவிட்டு அருந்தண்ணி குடிச்சென்ன பலனென எண்ணிக்கொண்டார்.

உலகளந்தபிள்ளையின் பயத்திலும், பவ்வியத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. சாணேற முழம் சறுக்கி விடும் அல்லது சறுக்கவிடுவார். அப்படித்தான் போனதடவை ஈபிள்ரவர் சுற்றுலாவுக்கு தாங்களும் வருவதாகச் சொல்லியிருந்த இருவர், கடைசி நேரத்தில் காலைவாரிவிட, அவர்களின் நுழைவுச் சிட்டைகளுக்கான பணத்தினை தானே பொறுப்பேற்றிருந்தார். அன்றுமுதல்தான் அவரை வெங்காயம் என்று திட்டும் வழக்கம் ஆரம்பித்தது. எப்பொழுதெல்லாம் மலர்க்கொடியாள் ஈபிள்ரவரை காணுறாவோ அப்போதெல்லாம், "வெறும் வெங்காயம்" என்று திட்டுவதை மறக்காதிருந்தார். ஒருமுறை தொலைக்காட்சியில் ஈபிள்ரவருக்கு சுற்றுலாப் பயணிகளின் வரவு அதிகரித்திருக்கிறது என்ற செய்தி காணொளியாக வந்தபோது கூட திட்டு வாங்கியிருந்தார். இந்தச் சுற்றுலாப் பயண ஒழுங்குகளை மேற்கொள்வது பற்றிய உரையாடலின் போதும் "வெறும் வெங்காயம்" என்று மலர்க்கொடியாள் திட்டியிருந்தார்.

உலகளந்தபிள்ளையும் சளைத்தவரல்ல. மனைவி வெங்காயம் என்று பேசும் போதெல்லாம் தன்னைத் தானே திட்டிக்கொள்வார். அவர் தன்னைத்தானே திட்டிக்கொள்வதைப் பார்த்தவுடன், மலர்க்கொடியாள் ஏசுவதை நிறுத்திவிடுவார். மனைவி அப்படி உருமாறி நிற்கும் வேளைகளில் மறந்தும் கூட சிரித்துவிடுவதில்லை. ஒருதடவை திட்டும்போது "ஆண்டவன் படைச்சான் எங்கிட்ட கொடுத்தான்" என்ற பாடலை கேட்டுக்கொண்டிருந்தார். அதன்பின் என்றுமே எந்தவொரு பாடலைத் தன்னும் கேட்டதில்லை.

கடந்தமுறை நிகழ்ந்த தவறு இந்த முறை நடந்துவிடக்கூடாது என்பதற்காக முழுப் பொறுப்பையும் மனைவியிடம் விட்டுவிட்டார். அப்படியாக அவராக நினைத்துக்கொண்டார். உண்மையில் அவரிடம் இருந்து எல்லாப் பொறுப்புகளும் பறிக்கப்பட்டிருந்தன. அது அவருக்கும் புரிந்திருந்தது. நிம்மதியாக இருந்தால் காணும். பொறுப்புக்கள் யாருக்கு முக்கியம். கணவர்களே, உங்கள் மனைவியரை நேசியுங்கள். அவர்களுக்கு எதிராகவும் கொடுமையாகவும் இருக்கவேண்டாம் என்று புதிய ஏற்பாட்டிலேயே சொல்லியிருக்கிறது எனச் சொல்லிக்கொள்வார்.

மலர்க்கொடியாள் யார் யாரை ரூர் போக அழைப்பதென ஒரு பட்டியல் தயாரித்தார். அவர்களில், தங்களோடு வரக்கூடியவர்களாகவும், முக்கியமாகச் செலவு குறைவாகச் செய்பவர்களாகப் பார்த்துத் தெரிவு செய்தார். அதிலிருந்தும் துல்லியமாக அலசியாராய்ந்து, எட்டுப்பேர்களைத் தெரிவு செய்து, அவர்களைத் தொலைப்பேசியில் அழைத்து உறுதிப்படுத்தினார்.

இந்தமுறை உலகளந்தபிள்ளையை ஒருவருடனும் கதைக்க விடவில்லை மலர்க்கொடியாள். அவரும், அதுதான் வாய்ப்பு என்று பேசாமல் இருந்துவிட்டார். இரட்டைநாடி உடம்பு கொண்ட மலர்க்கொடியாளை, கொடியாள் என அழைத்துக் குத்திக் காட்டுவதில் ஒருவித இன்பத்தை உணர்ந்து கொண்டதாலோ என்னவோ, எல்லோரும் மலர் என்று அழைக்க, அவர் மட்டும் கொடியாள் என்றுதான் அழைப்பார். ஆளுயரக் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்க்கும் போதெல்லாம் மலர்க்கொடியாள், ஊரில எப்படியொரு அழகாக இருந்தனான். உந்த மனுசனால இஞ்சை வந்து கொழுத்துப் போனதுதான் மிச்சம் எனக் கேட்கும்படி வாய்விட்டுச் சொல்வார்.

பாரிஸிலிருந்து நாற்பது கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் புறநகர் செவ்ரோன். அங்கு இருபது வருடங்களாக வசித்து வருகிறார் உலகளந்தபிள்ளை. பதினொரு அடுக்குகள் கொண்ட மாடி வீட்டுத்தொகுதியில் ஆறாவது வீடு அவருடையது. உலகின் எல்லாப் பாகங்களிலும் வறுமையால் போரால் இன்னபிற உயிரச்சத்தால் உழன்ற மக்கள், அங்கங்கிருந்து உயிரை மட்டும் சுமந்துவந்து குடியேறிய நகர் அது. தமிழர்களால் நிறைந்துபோன அந்த நகரத்திற்கு, தமிழர்கள் "சமரசம்" எனப் பெயர் வைத்திருக்கிறார்கள். "சமரசத்திற்கு எப்படி போறது" என்று கேட்டால் நேற்றுப் பிறந்த தமிழ்ப்பிள்ளையும் அழைத்துக்கொண்டு போய் விடும். கஞ்சா முதல் மொரோக்கன் வீட்டு வடிசாராயம்வரை கிடைக்கும். பகலில் ஒரு முகமும், இரவில் ஒரு முகமுமாக இருக்கும் கிராமம் அது. இரவுகளில் பொலீஸ் அந்த கிராமத்துக்குள் வருவதேயில்லை. பொலீஸ் அலுவலகத்தில் அந்த கிராமத்தின் வரைபடத்தைச் சிகப்பு வட்டத்தால் குறித்து வைத்திருக்கிறார்கள். பிரஞ்சுப் பொலீசை மாதிரி ஒரு கேடுகெட்ட தொழில் இல்லையென்பது அங்கு வசிப்பவர்களின் கருத்து. சோளம் விற்ற பெண்ணொருவரை கைது செய்து கொண்டு சென்றதற்காக பெண்கள் கூடிச் சென்று தூமைத்துணிகளால் பொலிஸ்நிலைய வாசலை மூடியிருந்தார்கள். மூர்க்கமாக எதிர்ப்பைக் காட்டும் மக்கள் சொல்வதெல்லாம் ஒன்றுதான். அதிகாரத்தோடு வராதே. நண்பனாக வா. பழகு. நீயும் நானும் ஒன்று அவ்வளவுதான். அந்த கிராமத்தை அழித்துவிட வேண்டுமென்பது பிரஞ்சுக்காரர்களின் கருத்து. போனமாதம் நடந்த நகரசபை தேர்தலில் தீவிர வலதுசாரி வேட்பாளர் அந்த நகரத்தை அகற்றுவதாகக் கூறி வாக்கு கேட்டுப் படுதோல்வி அடைந்திருந்தார்.

இருபது வருடங்களாக அங்கு வசிப்பதால் நகரின் மூலை முடுக்குகளெல்லாம் உலகளந்தபிள்ளைக்கு தண்ணி பட்டபாடு. நீண்டகால வாடிக்கையாளர் என்பதால் கஃபே பார்கள், கடைகள் என எல்லாவற்றிலும் அவருக்குத் தனி மரியாதையுண்டு. இரண்டு பிள்ளைகள். ஏதோ பெரிய படிப்பு படிப்பதாக மட்டும் தெரியும். ஆனால் அது டொக்ரரோ இஞ்சினியரோ இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுவு மெங்கோ தூர இடத்தில் தங்கியிருந்து படிக்கிறார்கள். அங்கால சுவிஸூம் இஞ்சால ஜெர்மனியும் என்று ஒரு தடவை வந்திருந்தபோது சொல்லியிருந்தார்கள். டொக்ரர் இஞ்சினியர் இல்லாத படிப்பு என்ன பெரிய படிப்பு. அதுவும் யாழ்ப்பாணத்தானுக்கு என்று விட்டு அதோடு விட்டுவிட்டார். அதற்கு மேல் என்ன விளக்கம் கேட்டாலும் கிடைக்காது என்பதும் அவருக்குத் தெரியும். அவர்களே உழைத்து செலவுசெய்து படிக்கிறார்கள். அவர்களது எல்லாக் கதைகளும் தாயோடுதான். எப்பவாவது வருவார்கள். மறக்காமல் தந்தையர் தினத்திற்கு வாழ்த்து அனுப்புவார்கள். அவரும் அதற்கு மேல் எதிர்பார்ப்பதில்லை.

"ரூர் போவமோ" என்று கேட்ட போது பதிலேதும் சொல்லாமல் அண்ணாந்து யன்னலால் வெளியில் பார்த்தார் உலகளந்தபிள்ளை. கடந்த முறை பயணத்தில் கிடைத்த அனுபவங்கள் அப்படி. இருவரும் வேலைக்குச் செல்வதால் சந்திக்கும் நேரத்தில் அவசர அவசரமாக உரையாடிக் கொள்வார்கள். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற தொனியில் தான் உரையாடல் இருக்கும். கல்யாணமான முதல் இரண்டு, மூன்று வருடங்கள் "அப்பா, இஞ்சையுங்கோ" என்றெல்லாம் குழைந்த மலர்க்கொடியாள் முதல் பிள்ளை பிறந்ததும் பெயரைச்சொல்லி அழைத்தார். பின் காலப்போக்கில் அதுவும் மறைந்துபோனது. இப்ப சமீப காலமாக ரிக்ரொக் இல் பிரபலமான பின்னர், இரண்டே இரண்டுவகை உரையாடல்தான். ஒன்று கேள்வி. மற்றது செய்யவேண்டிய வேலை. தவிர வேறெந்த உறவுமில்லை. மனைவியும், பாயும் வந்த புதிதில் சிறப்பாய் இருப்பவை என்றுகூட வேலை செய்யும் பிரெஞ்சுக் கிழவன் சொல்வதை நினைத்துக்கொள்வார்.

மேலதிகமாக ஏதும் தேவையென்றால் பொறுமையாகக் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொள்வார். கேட்டும் தெளிவான பதில் கிடைக்கவில்லை என்றால், எளிய தட்டுவாணி பறதியில போவாள் சந்திரிக்கா சரியென்றால் எனக்கு ஏன் இப்படி நடக்குது என சந்திரிக்காவை திட்டுவார். சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது ஆரம்பித்த சூரியகதிர் இராணுவ நடவடிக்கையோடுதான் ஊரிலிருந்து கிளம்பி அகதியாகப் பாரிசிற்கு வந்தவர்.

"ரூர்" என்றதும் என்ன சொல்வதென புரியவில்லை உலகளந்தபிள்ளைக்கு. ஏன் என்று எப்படித் திருப்பக் கேட்பதென யோசித்தார். கடந்த கிழமை மலர்க்கொடியாள் ரிக்ரொக்கில பதிவேற்றிய வீடியோவில் யாரோ ஒருவர், உங்களூரில் தானே டிஸ்னிலாண்ட் இருக்கிறது. போறதில்லையா. அங்கு போய் வீடியோ போடுங்களென எழுதியிருந்தார். அதற்கு, அடிக்கடி போவதால் வீடியோ எடுக்க தோணியதில்லை. உங்களுக்காக அடுத்த தடவை எடுத்துப் போடுகிறேன் எனப்பதில் எழுதியிருந்ததையும் வாசித்திருந்தார். "சமரசம் மலர்ஸ்" என்ற பெயரில் மலர்க்கொடியாள் வீடியோ போடுவதைக் கண்டுபிடித்தவர் தானும் ஒரு கள்ள ஐடி திறந்து "சமரசம் மலர்ஸ்"-ஐ பின்தொடர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவரது முகத்தைப் பார்த்ததும் புரிந்துகொண்ட மலர்க்கொடியாள், வீடெல்லாம் ஒரே பூச்சி. மருந்து வைக்கவேண்டும். மருந்து வைத்தால் அன்றையநாள் முழுவதும் வீட்டுக்குள் இருக்கமுடியாது. அதுதான் எங்காவது போய் நின்று, இரவு திரும்பலாம். நாளைக்கு பூச்சி மருந்தை வாங்கி வாங்கோ. அதற்குப் பிறகு எப்ப போறது. எங்க போறதென யோசிப்போம் என்றபடியே புறப்பட்டவர் திரும்பி, பூச்சி மருந்துக்கு காசு மேசையில் வைத்துக்கிடக்கு. பில் முக்கியம் என்று சொல்லிவிட்டுப் போனார்.

பில் முக்கியம் என்றதும் தேகமெல்லாம் பற்றிக்கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டார். எவ்வளவு காசை இவளுக்கு கொட்டி இருப்பன். இப்ப காசை தந்திட்டு பில் பத்திரமாம். தனக்குள்ளேயே புறுபுறுத்துக் கொண்டார். தான் வீடியோ போடுறதுக்கு எப்படியொரு சாட்டு. தும்பிக்கு பயந்து சிவபெருமான் சாரைப்பாம்பை கழுத்தில் போட்டுக்கொண்டாராம் என்கிற மாதிரியல்லவா இருக்கிறது.

(மிகுதி அடுத்த வாரம்...)

# கிழக்கு தீமோர் - முடிவிலா துயரில்! இந்தோனேசியா ஆக்கிரமிப்பு முடிவும்

## அவுஸ்திரேலியா எண்ணைவள ஆதிக்கமும்

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

கிழக்கு தீமோர் அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேசியாவுக்குமிடையில் அமைந்துள்ள கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்ததாகும். அவுஸ்திரேலியா தனது பாதுகாப்புக்கு இன்றியமையாத ஒரு இடமாக எப்போதும் தீமோரைக் கருதி வருகின்றது.

அது மட்டுமின்றி இருநாடுகளுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் இருக்கின்ற பெரும் எண்ணெய் வளத்தை தனதாக்கிக் கொள்வதிலும் அவுஸ்திரேலியா நீண்ட காலமாக குறியாக இருக்கின்றது.

நீண்ட காலமாக தொடர்ந்த கிழக்குத் தீமோரின் விடுதலைப்போராட்டம் அவுஸ்திரேலியாவினுடைய நலன்களின் அடிப்படையில் பல இன்னல்களை சந்தித்தது என்பதே உண்மையாகும்.

சுதந்திர கிழக்குத் தீமோருடைய இறைமையை பொருளாதார அடிப்படையிலேயே அவுஸ்திரேலியா மட்டுப்படுத்த முனைகின்றது.  கிழக்கு தீமோரில் பாரிய எண்ணை வளம் உள்ளது. அவற்றை தானே கைப்பற்றி சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற பொருளாதாரக் காரணம் தான் இந்தோனேசியா ஆக்கிரமிக்க முதன்மைக் காரணமாயிற்று.

பிற்காலத்தில் அதே காரணத்திற்காக தான் சர்வதேச சமூகம் கிழக்கு தீமோர் சுதந்திரத்தை ஆதரித்தது என்பது வேடிக்கையானது. இன்று கிழக்கு தீமோர் எண்ணை வளத்தை அவுஸ்திரேலியா மேற்பார்வை செய்து வருகின்றது என்று கூறினாலும் முழுமையாக ஆதிக்கம் செலுத்துகிறது என்பதே உண்மை.

**அமெரிக்காவின் பிராந்திய ஆதிக்கம்:**

1975 ஆரம்பத்தில் தென்கிழக்கு ஆசியாவில் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் பரவுவதை தடுப்பதற்கு அக்கால கட்டத்தில் அமெரிக்காவிற்கு இருந்த மிக முக்கியமான கூட்டாளி நாடாக இந்தோனேசியா அமைந்திருந்ததே ஆகும்.

அக்காலத்தில் மாக்சீய சார்பு இயக்கமான கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கம் வெற்றி பெற்றால் அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புக்கு இன்றியமையாதென கருதப்பட்ட ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம் சோவியத் யூனியனின் கைக்குள் போய் விடும் என்ற அச்சமும் இருந்தது.

எனவே கிழக்குத் தீமோரை இந்தோனேசியாவின் மிகக் கொடூரமானபிடிக்குள் வைத்திருப்பதையே அமெரிக்காவும் அதன் கூட்டு நாடான அவுஸ்தி ரேலியாவும் அதிகமாக விரும்பின.

இதன் காரணமாக கிழக்குத் தீமோர் விடுதலைப்போராட்டத்தையும் அந்தப் போராட்டத்தையொட்டி இந்தோனேசிய இராணுவம் அங்கு செய்த பயங்கரமான செயல்களையும் மேற்கத்திய ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை என்பதும் வரலாற்று துயரமாகும்.

ஆயினும் சோவியத் வீழ்ச்சியின் பின்னர், அதாவது கிழக்குத்தீமோருக்கு வரையறுக்கப்பட்ட சுதந்திரத்தைக் கொடுத்து அந்நாட்டையும் அதன் கடலில் காணப்படும் எண்ணெய் வளங்களையும் நிரந்தரமாகவே தன் கைக்குள் வைத்துக் கொள்ளலாம் என அவுஸ்திரேலியா கருதியதாலேயே அது கிழக்குத் தீமோர் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென இந்தோனேசிய அரசின் மீது அழுத்தம் கொடுத்தது.

ஐநா சபை மேற்பார்வையில் நடந்த கிழக்குத் தீமோர் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பை நடத்த பின்னணியில் அவுஸ்திரேலியா முழுமையாக செயற்பட்டதாகக் கருதவும் இடமுண்டு.

**அவுஸ்திரேலியா வள அபகரிப்பு :**

உலகின் இளைய சுதந்திர நாடான கிழக்குத் தீமோர் வறிய நாடுகளில் ஒன்றாகத் தான் இப்போதும் இருக்கிறது. ஆயினும் தீமோர் வட கடலில் உள்ள எண்ணெய் வளங்களை அவுஸ்திரேலியா அபகரிக்க முயன்ற போதும் எதிர்த்து நின்று தன் பங்கைப் பெற்றுக் கொள்வதில் கிழக்குத் தீமோர் பிடிவாதமாக இருக்கிறது.




அத்துடன் அமெரிக்க கைப்பொம்மையாக இருந்த சுகாத்தோவின் வீழ்ச்சிக்குப் பிறகு பதவிக்கு வந்த அரசுகள் கிழக்குத் தீமோரின் வளங்களை அவுஸ்திரேலியா பயன்படுத்துவதற்கு முட்டுக்கட்டை போடலாம் என அவுஸ்திரேலியா பயந்தமையால் தீமோரின் சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென்றதும் இதற்குமுக்கிய காரணமாகும்.

இதனாலேயே பலம் வாய்ந்த எதிரியை வெல்ல வீரம் மட்டுமல்ல, விவேகமும் வேண்டும் என்பதையும் அரசியல் தலைமை குறுகிய நோக்கங்கள் இல்லாமல், பதவி வெறி இல்லாமல், எல்லாரையும் பழிவாங்கும் நோக்கமின்றி அரவணைத்துச் சென்றால் இலட்சியத்தை இலகுவாக அடைய முடியும் என்பதற்கு தீமோர் போராட்டமும், இன்றைய அரசியல் நிகழ்வுகளும் சாட்சியமாகின்றன.




**கிழக்கு தீமோரின் வரலாறு**

இரண்டாம் உலகப் போரில் 1941 ஆம் ஆண்டில், ஜப்பானிய இராணுவத்தால் எதிர்பார்க்கப்பட்ட படையெடுப்பைத் தடுக்க ஆஸ்திரேலிய மற்றும் டச்சு வீரர்கள் திமோரை கைப்பற்றினர்.

ஆயினும் 1942 பெப்ரவரி மாதம் ஜப்பான் தீமோரை கைப்பற்றியது. எஞ்சியுள்ள படை வீரர்கள் பின்னர் ஜப்பானியர்களுக்கு எதிரான கொரில்லா போரில் உள்ளூர் மக்களுடன் சேர்ந்து கொண்டனர். திமோரை எதிர்த்து ஜப்பானிய படைகளின் பழிவாங்கல் தாக்குதலில் மொத்தத்தில் 50,000 க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

1945 ஆம் ஆண்டில் ஜப்பான் சரணடைந்த பிறகு, கிழக்கு திமோர் கட்டுப்பாடு போர்த்துக்கல்லுக்கு திரும்பியது. இந்தோனேசியா தனது சுதந்திரத்தை அறிவித்தது, ஆனால் கிழக்கு திமோரைக் கட்டுப்படுத்துவது குறித்து எதுவும் குறிப்பிடவில்லை.

**இந்தோனேசியா ஆக்கிரமிப்பு:**

1974ஆம் ஆண்டு போர்த்துக்கல் நாட்டின் ஆட்சி மாற்றம்-

காரணமாக அந்நாடு அங்கோலா போன்ற தனது காலனிகளில் வைத்திருந்த பிடி தளரத் தெடங்கிற்று. இந்த சந்தர்ப்பத்தைப் பன்படுத்தி கிழக்குத் தீமோரிலும் அதன் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் நோக்குடன் இடதுசாரி இளைஞர்கள் பிரேட்டிலின் என்ற அரசியல் அமைப்பை உருவாக்கினார்கள்.

ஆயினும் அந்த ஆண்டின் டிசம்பரில் இந்தோனேசியா கிழக்கு திமோர் மீது படையெடுத் தது, ஆறு மணிநேரத்தில் தலைநகர் டிலிவைக் கைப் பற்றியது. இந்தோனேசியா தனது 27 வது மாகாணமாக தீமோரை அறிவித் தது. இந்த இணைப்பு, ஐ.நாவால் அங்கீகரிக்கப்படவில்லை.

தீமோரில் அதன் பின்னைய ஆண்டில், தொடர் போரினால் 100,000 திமோரிய மக்கள் இந்தோனேசிய துருப்புகளால் கொல்லப் பட்டனர். அத்துடன் ஐந்து வெளிநாட்டு- ஆஸ்திரே லிய பத்திரிகையாளர்கள் அரச படையால் படு கொலை செய்யப்பட்டனர்.

**இந்தோனேசியாவின் 27ஆவது மாகாணமாக பிரகடனம்:**

கிழக்குத் தீமோர் சுயநிர்ணய உரிமைக்கான மக்களின் போராட்டத்தை இந்தோனேசியப் படைகள் அமெரிக்க, பிரித்தானிய மற்றும் அவுஸ்திரேலிய சிறப்புப் படைகளின் ஆலோசனைக்கு இணங்க மிகக் கொடூரமான முறைகளின் மூலம் அடக்கி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தன.

பல்லாயிரக் கணக்கான மக்கள் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். மேலும் பல்லாயிரம் மக்கள் அகதிகளாக வீடு வாசல்களை விட்டு மேற்குத் தீமோரில் தஞ்சம் புகுந்தனர்.



1976ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவின் 27ஆவது மாகாணமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் கிழக்குத் தீமோரில் தனக்கு எதிரான சக்திகள் அனைத்தையும் பூண்டோடு அழிக்கும் நோக்கில் இந்தோனேசிய இராணுவம் ஒரு இலட்சம் மக்களுக்கு மேல்கொன்று குவித்தது என்பதும் வரலாற்று உண்மையே.

**இந்தோனேசிய இராணுவ படுகொலை:**

1991ஆம் ஆண்டு அங்கு ஓர் ஆர்ப்பாட்டத்தின்போது இந்தோனேசிய இராணுவம் செய்த படுகொலையொன்று பெரியளவில் மேலைத்தேய ஊடகங்களில் பேசப்பட்டது. இந்நிலையில் 1993ஆம் ஆண்டு கிழக்குத் தீமோர் விடுதலை இயக்கத் தலைவரை இந்தோனேசிய படைகள் கைது செய்து 20வருட சிறைத்தண்டனை வழங்கின.

1998ஆம் ஆண்டு சுகார்த்தோவை அடுத்துப் பதவிக்கு வந்த இந்தோனேசிய ஜனாதிபதி கபீப கிழக்குத் தீமோரில் அதன் சுயநிர்ணய உரிமையை தீர்மானிப்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என அறிவித்தார்.

**ஐக்கிய நாடுகள் சபை சர்வஜன வாக்கெடுப்பு**

1999ஆம் ஆண்டு மே மாதம் கிழக்குத் தீமோரின் சுயநிர்ணய உரிமையை வழங்குவது தொடர்பான ஒரு ஒப்பந்தத்தில் போர்த்துக்கலும் இந்தோனேசியாவும் கைச்சாத்திட்டன. அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வாக்கெடுப்பு நடத்த ஐக்கிய நாடுகள் சபைமுற்பட்ட வேளையில் இந்தோனேசியப் படைகளின் உதவியோடு ஒட்டுப் படைகள் கிழக்குத் தீமோரில் பயங்கர அழிவு நடவடிக்கைகளில் இறங்கின.

இதனிடையிலும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் எண்பது சதவீதமான கிழக்குத் தீமோர் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு வாக்களித்தனர். இதைத் தொடர்ந்து மேற்படி ஒட்டுப்படைகள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு நடவடிக்கைகளில் இறங்கியதால் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இவ் வொட்டுப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

கிழக்குத் தீமோரின் தலைநகரமான டிலி நாசமாக்கப்பட்டது. ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். இந்த நிலமைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காக 99 செப்டெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவின் தலைமையில் ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும்படையொன்று கிழக்குத் தீமோரில் சென்றது.

தற்போது கிழக்குத் தீமோரின் எண்ணெய் வளங்களைதான் பயன்படுத்துவதற்கும் அந்நாட்டின் அரசியலையும் பாதுகாப்பையும் தன்கைக்குள் வைத்திருப்பதற்கும் அவுஸ்திரேலியா முயற்சி செய்து வருகின்றது.

மக்கள்தொகையில் அரைவாசி மக்கள் வறுமையில் வாழ்கின்றனர், 70 சதவிகிதத்தினர் நாள்பட்ட உணவு பாதுகாப்பின்மைக்கு முகம் கொடுக்கின்றனர். வேலையின்மை 50 சதவிகிதமாகவும், தனிநபர் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2006 ல் சுமார் கூ 750 அமெரிக்க மட்டுமே இருந்தது.

**பொருளாதார பாரிய வீழ்ச்ச :**

ஆனாலும் விடுதலை பெற்ற தீமோரின் கடற்பகுதியில் இருக்கின்ற பெரும் எண்ணெய் வளத்தை தனதாக்கிக் கொள்வதிலும் அவுஸ்திரேலியா நீண்ட காலமாக குறியாக இருக்கின்றது.

சுதந்திர கிழக்குத் தீமோருடைய இறைமையை பொருளாதார அடிப்படையிலேயே அவுஸ்திரேலியா மட்டுப்படுத்த முனைகின்றது.

கிழக்கு தீமோரில் பாரிய எண்ணை வளம் தற்போது குறையும் தருவாயில் உள்ளது. முழு வளத்தையும்-தானே கைப்பற்றி சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்ற பொருளாதாரக் காரணம் அவுஸ்திரேலியாவிற்கு இன்னமும் உள்ளது.

ஏற்கனவே கிழக்கு தீமோரின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சியை நோக்கிச் செல்கிறது. தீமோரிய எண்ணை வளம் குறைந்து, இச்சிறிய நாடு மேற்குலகிடம் கையேந்தி நிற்பது கவலைக்கு உரியதே.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C  2) E  3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16  2) 15  3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்  2) நிஷான்  3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13  2) 14  3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்  2) செவ்வகம்  3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm  2) 18cm  3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3  2) 2  3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14  2) 10  3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ  2) ஆ  3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்  2) 3 தடவைகள்  3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) தடவைகள்  2) 5 தடவைகள்  3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2  2) 3  3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**11.12.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**11.12.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் இந்திய மேற்பார்வை அவசியம்!

## வலியுறுத்துகின்றார் செல்வம் எம்.பி.

கொழும்பு, டிசெ. 11

**இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் விவகாரத்தில் இந்தியா, மேற்பார்வை பொறுப்பை ஏற்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்தார்.**



இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு விவகாரத்தில் இந்தியா ஆரம்பத்தில் இருந்து தலையீடு செய்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே தற்போது மேற்பார்வை பொறுப்பை ஏற்றால் நியாயமான ஒரு தீர்வை பெற முடியும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறினார்.

மேலும் சர்வதேசமும் இந்த பேச்சுவார்த்தையில் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்னைக்கு தீர்வு குறித்த 13 ஆம் திகதி இடம்பெறவிருக்கும் சந்திப்பு, மனசாட்சியின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (அ)

# வெளிநாட்டு ஊழியர்களால் மூன்று பில்லியன் டொலர்!

கொழும்பு, டிசெ. 11



2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் பணம் அனுப்பப்பட்டுள்ளது.

நவம்பர் மாதத்தில் தொழிலாளர்களின் பணம் 384.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஒக்ரோபர் மாதத்தில் இலங்கைக்கு 355.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்ட நிலையில் அந்த மாதத்தைவிட 30 மில்லியன் டொலர் அதிகம் என அவர் கூறினார்.

2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 42 வீதம் அல்லது 113 மில்லியன் டொலர் அதிகரிப்பு எனவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறினார்.

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அனுப்பும் அந்நிய செலாவணிக்கான புதிய ஊக்குவிப்பு திட்டம் கடந்த நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாட்டு வேலை ஆசைகாட்டி மோசடி செய்த 2 பெண்கள் கைது!

கொழும்பு, டிசெ. 11

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட இளம்பெண் ஒருவரும் பெண்ணொருவரும் சிலாபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு நபர்களிடம் இருந்து ரூ.5.9 மில்லியன் மோசடி செய்ததாக இருவரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

சிலாபம் பொலிஸில் செய்யப்பட்ட ஆறு முறைப்பாடுகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் 19 மற்றும் 45 வயதுடைய சிலாபத்தை சேர்ந்தவர்கள்.

இரு வரையும் சிலாபம் நீதவான் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# இலங்கை கடன் நெருக்கடியை தீர்ப்பதற்கு சீனா பச்சைக்கொடி!

கொழும்பு, டிசெ. 11

சாம்பியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு குறித்த சீனாவுடனான பேச்சு பயனுள்ள வகையில் நிறைவடைந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கான விரைவான கடன் மறுசீரமைப்பு குறித்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சீனா சாதகமாக பதிலளித்துள்ளது என அதன் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவருக்கும் சீனப் பிரதமருக்கும் இடையிலான பேச்சின் பின்னர் இந்த நம்பிக்கையான பதில் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தமிழ் எம். பிக்களின் பதாகை மீது தக்காளி பழங்கள் வீசி தாக்குதல்!

வவுனியா, டிசெ. 11

தமிழ் எம்.பிக்களின் பதாகைகள் மீது வவுனியாவில் அழுகிய தக்காளி பழங்கள் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை தினமான நேற்று வவுனியா பிரதான தபாலகத்துக்கு முன்பாக 2120 ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது தமிழ் எம்.பிக்கள் இலங்கை அரசுடன் பேச வேண்டாம், தமிழ் எம்.பிக்கள் இலங்கை அரசுடன் தனியாக பேசவேண்டாம் என்ற கோசங்களை எழுப்பியிருந்ததுடன், பதாதைகளையும் தாங்கியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.






இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தமிழ் எம்.பிக்களின் புகைப் படங்கள் தாங்கிய பதாதைக்கு அழுகிய தங்காளி பழங்களினால் எறிந்து தமது எதிர்ப்பினை தெரிவித்தனர். (அ)

# வன்னிப் பெருநிலப்பரப்பில்....

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூளவம்சம் இப்படைவீரர்கள் வடஇலங்கையில் உள்ள மகாதீர்த்த, மட்டிகாவட்டதீர்த்த ஆகிய இடங்களில் தங்கியிருந்தே இப்படையெடுப்புகளை மேற்கொண்டதாகக் கூறுகின்றது. அவற்றுள் மகாதீர்த்த என்ற இடம் மாதோட்டதுறைமுகத்தைக் குறிக்கின்றது. மட்டிகாவட்டதீர்த்த என்ற இடம் பாளி இலக்கியத்தில் முதன் முறையாகக் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடம் மாதோட்டத்திற்கு வடக்கே பூநகரிப்பிராந்தியத்தில் உள்ள மட்டுவில்நாடு என்ற இடமாக இருக்கலாம். இரண்டாம் இராதிராச சோழனது பல்லவராயன்பேட்டை மற்றும் திருவாலங்காடு சோழக் கல்வெட்டுகள் வடஇலங்கையில் மாதோட்டம், புலச்சேரி முதலான இடங்களுடன் மட்டிவால் என்ற இடத்தையும் சோழப் படைகள் வெற்றி கொண்டதாகக் கூறுகின்றது. கல்வெட்டில் கூறப்படும் மட்டிவால் தற்போது பேச்சு வழக்கில் உள்ள மட்டுவில் நாடாக இருக்கலாம். இவ்விடத்திலும் போத்துக்கேயர்காலக் கோட்டை கட்டப்பட்டதற்கு இவ்விடம் துறைமுக நகராக இருந்ததே முக்கிய காரணமாகும்.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் ஹோமாறன்கடவல (குமரன்கடவை) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து 1215 இல் பொலநறுவையை வெற்றி கொண்டு ஆட்சிபுரிந்த கலிங்கமாகன் வடகலிங்கத்தில் இருந்தோ அல்லது மலேசியாவில் இருந்தோ படையெடுக்கவில்லை, மாறாக அவன் ஹோமாறன்கடவலவில் இருந்த சோழப்பிரதிநிதியால் அல்லது சோழப் படைத்தளபதியால் ஆட்சிக்கு அமர்த்தப்பட்டவன் என்ற புதிய செய்தி தெரியவந்துள்ளது. மேலும் 1070 இல் பொலநறுவையில் சோழர் ஆட்சி வீழ்ச்சியடைந்தாலும் அவர்களின் ஆதிக்கமும், நிர்வாக ஒழுங்கும் தமிழர் பிரதேசத்தில் ஐரோப்பியர் காலம்வரை தொடர்ந்தமையும் இக்கல்வெட்டால் அறியப்படும் புதிய சான்றாகும்.

பொலநறுவை வீழ்ச்சியைத் தொடர்ந்து கலிங்கமாகன் அரசு வடஇலங்கையில் இருந்ததற்குப் பாளி சிங்கள இலக்கியங்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வரசின் தலைநகர் எது என்பதை இவ்விலக்கியங்கள் கூறாவிட்டாலும் அவனது படைநிலைகள், ஆதிக்கம் நிலவிய இடங்களாக புலத்திநகர (பொலநறுவை), கொட்டசார (திருகோணமலை கொட்டியாரம்) ஹந்கதலக (கந்தளாய்), காகலய, பதிமாவட்டம் (பதவியா), குருந்தி (குருந்தலூர், குருந்தலூர்மலை) மானாமத் (இவ்விடம் ஹோமாறன்கடவல கல்வெட்டில் கூறப்படும் மாநாமத்(து) நாடாக இருக்கலாம்), மகாதித்த (மாதோட்டம்), மன்னார (மன்னார்), புலச்சேரி, கோணா மாவட்டம் (கோணாவில்), மதுபதித்த (இலுப்பைக்கடவை?), சூறதித்த (ஊர்காவற்துறை), வலிகாம (இவ்விடம் மன்னார் அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் என்ற இடமாக இருக்கலாம்). இவ்விடங்களிலேயே கலிங்கமாகனுக்கு பின்னர் ஆட்சி புரிந்த சாவகன் காலத்திலும் அவன் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததை பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்விடங்களில் பெரும்பாலனவை திருகோணமலை உள்ளிட்ட வடபகுதியில் காணப்படுகின்றன. அவ்விடங்களில் சாகவன் ஆட்சி நிலவியதை தமிழக புதுக்கோட்டை குடுமியாமலையில் உள்ள 1262 ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றது.

கலிங்கமாகனுக்குப் பின்னர் இலங்கைமீது இரண்டாவது தடவையாகப் படையெடுத்த சாவகன் தென்னிந்தியாவிலிருந்து பாண்டிய, சோழப்படைகளுடன் மாதோட்டத்தில் வந்திறங்கி பதி (பதவியா), குருந்தி (குருந்தலூர்) ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொண்டு தம்பதேனிய அரசு மீது படையெடுத்தான் எனச் சூளவம்சம் கூறுகின்றது பேராசிரியர் இந்திரபாலா இவன் சுதந்திர மன்னனாக இருந்தே இப்படையெடுப்பை மேற்கொண்டான் எனக் கூறுகின்றார்.

மேலே கூறப்பட்ட வரலாற்றுச் செய்திகள் கோடலிபறிச்சான் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய சிறு அறிமுகமாகும். இக்கல்வெட்டு இலங்கைத் தமிழரின் அதிலும் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழரின் இருப்பு, இடைக்கால அரசியயல் வரலாறு, தமிழ் அரச உருவாக்கம், பண்பாடு மற்றும் இடப்பெயர் பற்றி ஆய்வில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. ஆகவே இக்கல்வெட்டை ஆராய்வதற்கு பலதுறை சார்ந்த புலமையாளரின் பங்களிப்பு மிக அவசியமாகும். இவற்றைக் கருத்தில் கொண்டே இக்கல்வெட்டின் நான்காவது பக்கத்தில் தெளிவற்றுக் காணப்படும் சில வரிகளை மீண்டும் படியெடுத்ததன் பின்னர் பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரிர் சுப்பராயலு, பேராசிரியர் இரகுபதி மற்றும் கலாநிதி இராஜகோபால் ஆகியோரிடன் இணைந்து இக்கல்வெட்டின் வரலாற்று முக்கியத்துவத்தை முழுமையாகப் பதிவுசெய்ய உள்ளோம் .அவற்றின் பெறுபேறுகள் இரு மொழிகளில் வெளியிடப்படும்.

## நெல் விலை....

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் இம்முறை நெற்செய்கைக்காக 23,399 ஹெக்ரேயர் இலக்காக இருந்தது. இவற்றில் 85 முதல் 90 வீதம் பயிரிடப்பட்டுள்ளது. எனினும் இதுவரை போதியளவு மழை வீழ்ச்சி கிடைக்கவில்லை.

இதனால் மானாவாரியாக விதைக்கப்பட்ட இடங்கள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. அத்துடன் குளங்களுக்கும் போதிய நீர் கிடைக்கவில்லை.

தற்போது பெய்த மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்நிலையில் பசளை போதியளவு கிடைக்கப்பெற்றமையால் ஒரு அந்தர் 10000 ரூபா வீதம் உலக வங்கியின் அனுசரணையோடு விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் குடலைப் பசளை 50 கிலோ மூடை 19,500 ரூபாவுக்கு கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலவச பசளை யு.எஸ் எயிட் மூலமாக ஒரு ஹெக்ரேயருக்கு குறைந்த 5326 விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

இந்நிலையில் நீர் பற்றாக்குறையால் பல இடங்களில் இதுவரை நெல் விதைக்கப்படாமல் உள்ளது. அத்துடன் சில இடங்களில் நீர் அதிகரித்ததால் மானாவாரி காணிகளும் கைவிடப்பட்டுள்ளன.

இத்துடன் விவசாயத்திற்கான செலவு அதிகரித்துள்ளது. ஆனால் சந்தையில் நெல்லின் விலை குறைவாகவே உள்ளது. இதனால் விவசாயிகள் தங்கள் தமது செலவை ஈடுசெய்ய முடியாமல் உள்ளனர்.

ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்சத்து 80ஆயிரம் முதல் இரண்டு இலட்சம் வரை செலவாகின்றது. அந்த அளவுக்கு நெல்லின் விலை காணப்படவில்லை. நெல் சந்தைப்படுத்தும் சபையால் நெல்லை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்படவில்லை-என்றார். (அ)

## இலங்கை....

பிரபாத் புலத்வத்த “திரிபோலி படைப்பிரிவு” என அழைக்கப்படும் இரகசிய இலங்கை இராணுவப் படைப் பிரிவின் தலைவராக இருந்தார்.

இராஜாங்கத் திணைக்களத்தின் தகவல்

2008 மே மாதத்தில் 7031(சி) பிரிவின் படி, சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தை அல்லது தண்டனை போன்ற மனித உரிமை மீறல்களில் மேஜர் பிரபாத் புலத்வத்த ஈடுபட்டதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள தகவலை சுட்டிக்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதலின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்காக, 2020 பெப்ரவரியில், முன்னாள் இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மீது அமெரிக்கா தடைகளை விதித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வேலுகுமார்....

தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்துக்குத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் மிகவும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வேலுகுமார் எம்.பியின் நடுநிலைப் போக்கு மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பம் குறித்து கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தில் நானும் களமிறங்கினேன். பல சவால்கள் இருந்தன. அவற்றை எதிர்கொண்டேன். இறுதியில் தோல்வி என்பதைவிட தோற்கடிக்கப்பட்டேன். இந்நிலையில், சுமார் 20 வருடங்களுக்குப் பிறகே கண்டி மாவட்டத்துக்குத் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைத்தது. அந்தப் பிரதிநிதித்துவம் மக்களுக்கு மிகவும் அவசியம்.

அதனை இல்லாது செய்வதற்கு நாம் இடமளிக்கப்போவதில்லை. வேலுகுமார் சுயாதீனமாகவாவது இருந்துவிட்டு போகட்டும். தமிழ் முற்போக்குக் கூட்டணியில் இருந்து வேலுகுமார் வெளியேற்றப்படவில்லை. அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்-என்றார். (அ)

## இலங்கைக்கு....

சீனா, இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புக்களை விரைவுபடுத்த வேண்டும் என இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் சீன அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

அப்போதுதான் சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்கள் இலங்கைக்கு நிதியுதவியளிக்க முற்சிகளை மேற்கொள்ளும் என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பேச்சு மிகப் பயனுள்ள வகையில் அமைந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீன மத்திய வங்கி, சீன நிதியமைச்சு, எக்ஸிம் வங்கி, சீன அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அதிகாரிகளுடன் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர், உலக வங்கியின் தலைவர் உள்ளிட்ட ஏனைய நிதித்துறை தலைவர்கள் சீனாவில் நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடினர். (அ)

## மண்டாஸ்....

எனினும் அதன் பின் தாக்கமாக, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் தொடர்ந்தும் மழை பெய்யும்.

அத்துடன் வடக்கு, வடமத்திய, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## கோட்டாபயவை....

வெளிநாட்டுக்குச் சென்று அங்கிருந்தே இராஜினாமாக் கடிதத்தை அனுப்பினார். தற்போது நாடு திரும்பியுள்ளார்.

இந்நிலையிலேயே கோட்டாவை பிரதமராக்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக அவரை பாராளுமன்ற உறுப்பினராக்குவதற்கு மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலர் முற்படுகின்றனர் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. (அ)

## மாவட்டம்,....

ருந்தன.

இந்த நிலையிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், பொது சுகாதார பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி கொண்டு செல்வதை நிறுத்துமாறு ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழில் 142....

சேர்ந்த 534 பேர் பாதிக்கப்பட்டுள்ளன. 2 வீடுகள் முழுமையாகச் சேதம் அடைந்துள்ளன. 98 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. 8 சிறு முயற்சியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 உட்கட்டுமானங்கள் பாதிக்கப்பட்டுளளன.

49 மாடுகள் இறந்துள்ளன. 58 ஆடுகள் இறந்துள்ளன-என்றார். (அ)

# உயிரை பணயம் வைத்து நாட்டிலிருந்து தப்பிச்செல்லும் நிலைப்பாட்டில் மக்கள்!

### சபையில் சுட்டிக்காட்டினார் காவிந்த ஜயவர்தன



கொழும்பு, டிசெ. 11

உயிரை பணயம் வைத்தேனும் நாட்டை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டினதும், அரசாங்கத்தினதும் இருப்பிற்கு வரி அறவிடல் அவசியம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். வரி அறவிடல் ஊடாக நாட்டு மக்கள் பிரதிபலனை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தற்போதை வரி திருத்தம் தமக்கு எந்தளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் மக்கள் அவதானத்துடன் உள்ளார்கள். 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன், ஆட்சிக்கு வர ஒத்துழைப்பு வழங்கியவர்களை திருப்திப்படுத்தவதற்காக அரசாங்கம் வரி விலக்கு செய்தது.

இதனால் பல பில்லியன் ரூபாவை அரசாங்கம் இழக்க நேரிட்டது.பொருளாதாரத்தை சீரழித்து முழு நாட்டு மக்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்கிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பது பிரச்னைக்குரியதாக உள்ளது.

பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் நிதி மூலதனச்சந்தை இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் நாட்டின் நிதி மற்றும் வெளிநாட்டு கையிருப்பு தொடர்பில் எவ்வித நெருக்கடியும் இல்லை என குறிப்பிட்டு முழு நாட்டையும் தவறாக வழிநடத்தினார்.

முழு நாட்டு மக்களையும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி விட்டு, நாட்டை பிற நாடுகளிடம் கையேந்த வைத்துவிட்டு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தற்போது நாட்டு மக்களின் வரிப்பணத்தில் சுகபோகமாக வாழ்கிறார்.

அது மாத்திரமல்ல பொருளாதார பாதிப்பு தொடர்பில் புத்தகம் எழுதுகிறார். பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் வரி செலுத்த முடியாது என நாட்டு மக்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

இது உண்மை. நாட்டு மக்களின் நம்பிக்கையை வெற்றிக் கொள்வதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. அரசாங்கத்தின் முறையற்ற வரி கொள்கையினால் மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 400 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். மறுபுறம் தகவல் தொழிநுட்பத்துறை நிபுணர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளார்கள். உயிரை பணயமாக வைத்து நாட்டை விட்டு சென்றுவிடலாம் என்ற நிலைப்பாட்டில் தான் பெரும்பாலான மக்கள் உள்ளார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண வேண்டுமாயின் நாட்டு மக்களின் ஒத்துழைப்பை உறுதிப்படுத்த வேண்டும் இந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவு கிடையாது. ஆகவே தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்ய நாட்டு மக்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்-என்றார்.

# இலகுரக ரயில் சேவை திட்டத்தை மீள ஆரம்பிக்க ஜப்பான் இணக்கம்

கொழும்பு, டிசெ. 11

ஜப்பானின் கடன் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இரத்து செய்யப்பட்ட இலகுரக ரயில் சேவை திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையை எட்டியவுடன் அதனை மீண்டும் நடைமுறைப்படுத்த முடியும் என ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடெனகி ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜயவர்தனவிடம் குறிப்பிட்டார்.

ருவான் விஜேவர்தன மற்றும் ஜப்பான் தூதுவருக்கிடையிலான சந்திப்பு ஜப்பான் துதரகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போதே ஜப்பான் தூதுவர் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாட்டை எட்டியவுடன் குறித்த வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்த பின்னர் ஜப்பான் அரசாங்கம் இலங்கையில் பல்வேறு முதலீட்டு திட்டங்களின் ஊடாக உதவுவதற்கு தயாராக உள்ளதாகவும் ஜப்பான் தூதுவர் தெரிவித்ததாக, ருவான் விஜேவர்தன கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதன் போதும் இந்த வேலைத்திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்ததாகவும் ருவான் விஜேவர்தன கூறினார்.

## எங்கள்....

நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வானது நேற்றுக் காலை 10 மணியளவில் மன்னார் வலயக் கல்விப் பணிமனை முன்பாக ஆரம்பித்து மன்னார் நகரத்தை சுற்றி, பின் பிரதான வீதியூடாக முருங்கன், நானாட்டான் பஸ்தரிப்பு நிலையங்களை சென்றடைந்து வங்காலை ஊடாக மீண்டும் மன்னாரை வந்தடைந்தது.

இதன்போது ‘எங்கள் உரிமையே எங்கள் சுதந்திரம்’ ‘பேச்சு சுதந்திரம் கல்விக்கான உரிமை, மற்றும் சமூக பாதுகாப்புக்கான உரிமை’ ‘உலகில் உள்ள யாவருக்கும் உரிமைகள் சமமே’ போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மனித உரிமைகள் தொடர்பாக எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

ஈழநாடு
Eelanadu

# அரையிறுதிக்கு முன்னேறிய மொராக்கோ! அதிர்ச்சியுடன் வெளியேறிய போர்த்துக்கல்!

பிபா உலகக்கிண்ண காற்பந்து தொடரின் மற்றுமொரு காலிறுதியில் போர்த்துகல் மற்றும் மொரோக்கோ அணிகள் நேற்று பலப்பரீட்சை நடத்தியிருந்தன.

இந்த போட்டியில் பலம் வாய்ந்த போர்த்துகல் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் மொரோக்கோ அணி வீழ்த்தி அதிர்ச்சியளித்துள்ளது.



போட்டியின் 42ஆஆவது நிமிடத்தில் மொரோக்கோ அணி வீரர் நெஸ்றி அபாரமான கோல் ஒன்றைப் பெற்றுக்கொடுத்து அவ்வணியின் வெற்றிக்கு வழி வகுத்தார்.

இந்த போட்டியில் போர்த்துகல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ 52ஆவது நிமிடங்கள் வரை விளையாடும் பதினொருவர் அணிக்குள் உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் ஊடாக உலகக்கிண்ண தொடரில் அரையிறுதிக்குள் நுழைந்த முதல் ஆபிரிக்க அணியாக மொரோக்கோ அணி பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மொராக்கோ அணி முதல் முறையாக உலக கிண்ண அரையிறுதிக்கு தகுதி பெற்று சாதனை படைத்துள்ளது.

## இஷான் இரட்டைச் சதம்

# பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது இந்தியா!

பங்களாதேஷ் மற்றும் இந்திய கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி சிட்டாகாங்கில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் பங்களாதேஷ் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 409 ஓட்டங்களை குவித்தது. தொடக்க ஆட்டக்காரர் இஷான் கிஷன் இரட்டைச் சதம் அடித்து சாதனை படைத் தார். இது அவர் அடிக்கும் முதல் இரட்டைச் சதம் ஆகும். அவருக்கு பக்கபலமாக ஆடிய விராட் கோலி சதமடித்தார். 2ஆவது விக்கெட்டுக்கு இஷான் கிஷன், விராட் கோலி ஜோடி 290 ஓட்டங்களை குவித்தது.

இஷான் கிஷன் 210 ஓட்டங்களும், விராட் கோலி 113 ஓட்டங்களும் அடித்து ஆட்டமிழந்தனர். வாஷிங்டன் சுந்தர் 37 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பங்களாதேஷ் சார்பில் தஸ்கின் அகமது, எபாட் ஹொசைன், ஷகிப் அல் ஹசன் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.



இதையடுத்து, 410 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் பங்களாதேஷ் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் லிட்டன் தாஸ் 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பொறுப்புடன் ஆடிய ஷகிப் அல் ஹசன் 43 ஓட்டங்களில் வெளியேறினார். யாசிர் அலி 25 ஓட்டங்களும், மகமதுல்லா 20 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில், பங்களாதேஷ் அணி 182 ஓடாங்களுக்கு சகல விக்கெட்டுகளை இழந்தது. இதன்மூலம் 227 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் ஷர்துல் தாக்குர் 3 விக்கெட்டும், அக்சர் படேல், உம்ரான் மாலிக் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை பங்களாதேஷ் அணி 2-1 என கைப்பற்றியுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

மண்ணில்
14 - 09 - 1937



விண்ணில்
09 - 12 - 2022

### கந்தையா வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணம், தென்மராட்சி – வரணியைப் பிறப்பிடமாகவும் கண்டாவளை, வரணி ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட, திரு. கந்தையா வேலாயுதபிள்ளை நேற்று முன்தினம் (09.12.2022) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா – வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மகனும், கண்டாவளையைச் சேர்ந்த, காலஞ்சென்ற சித்தர் குமாரவேலு – சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தியின் பாசமிகு கணவரும், விஜயகுமார் (இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முன்னாள் நடத்துனர்), சுகுணகுமாரி, வேணுகுமாரி ( முன்னாள் ஆசிரியை, கிளி/முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி), காலஞ்சென்ற பகீரதகுமார் ( மூத்த தளபதி பிரிகேடி யர் தீபன்), மற்றும் சிவஞானகுமாரி ( ஆசிரியை- யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் ), காலஞ்சென்ற சிவகுமார் (லெப்.கேணல்.கில்மன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனந்தநீலா, அனந்தசேகரன், லோகநாதன், குமாரி, சிறீதரன் (பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்) ஆகியோரின் மாமனாரும், கோபினா, கோபிசன், அனோஜா, சிறிதரன், அஜிந்த், கீர்த்தனா, அருணியா, அஜந்தூரன், லக்சன், லக்சனா, சாரங்கன், பிரணவன், பிரவீனன், ஆர்த்தி, பகீரதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அஞ்சனா, ஆசா, அஸ்மி, அகானா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (12.12.2022) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில், முரசுமோட்டையில் அமைந்துள்ள அவரது மூத்தமகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக, அன்னாரின் குடும்ப மயானமான யாழ் வரணி – குடமியன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
20 - 10 - 1948



இறப்பு
07 - 12 - 2022

### திருமதி தவநாதன் ஈஸ்வரி அம்மா

துன்னாலை தெற்கு தாமரை குளத்தடியை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி தவநாதன் ஈஸ்வரியம்மா (ஓய்வு பெற்ற பிரதம தாதி – கிளிநொச்சி) கடந்த 07.12.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் தவநாதன் (நீர்ப்பாசன திணைக்கள மேற்பார்வையாளர்) அவர்களின் அன்புக் கணவரும், குணரூபன் (U.K), அஜந்தன் (சமுர்த்தி உதவி முகாமையாளர்), இரவிவர்மன் (ஊடகவியலாளர்), யாழினி ( ஆசிரியை நுகேகொடை த.ம.வி ) ஆகியோரின் அன்பு தாயாரும், சுகந்தா, லோஜினி (முன்பள்ளி ஆசிரியை – வவுனியா), ஆர்த்தி (ஊடகவியலாளர்), கங்கா, சுதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஷாலினி, ஷாருஜன், ஷர்மிணி, ஆருஜன், ஏஞ்சல், டிவார்தினி, டணிஷியா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவர்.

அன்னாரின் இறுதிகிரியைகள இன்று (11.12.2022) ஞாயிற்றுக்கிழமை காலை ஞானபதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி எனும் முகவரியில் இடம்பெற்று நேரியதூது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்று க்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
**இரவிவர்மன்**
**077 817 7589**

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### மாணிக்கம் நடராசா

யாழ். சங்குவேலி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும், சுவிஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் நடராசா கடந்த 29-11-2022 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார், மாணிக்கம் – பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், கந்தையா – அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணி அவர்களின் அன்புக் கணவரும், யூலியன் ஜெறோம்(லண்டன்), போல்டன் டயஸ்(ஜெகன்), ஜீன் ஜெனிஸ்ரா(ஜெனி– பிரான்ஸ்), யுடிற்றா(சுதா– கனடா), லெனின்ரா(யெனா), டிலானி(செல்லா– பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,அனிஸ்ரா(லண்டன்),றெஜிலின்சியா, துஸ்யந்தன்(பிரான்ஸ்), பிரதாபன்(றமணன் –கனடா), றெஜினோல்ட்(வவா– பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,சவரிமுத்து(பிரான்ஸ்), சந்திரன்(அன்ரனி), கமலாதேவி, சறோஜாதேவி, அருள் றூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இயுனிஸ் ஆலயா(லண்டன்), இவான் ஜெர்மாயா(லண்டன்), ஏனோக் ஜெறோன்(லண்டன்), எடின் மனாசே(லண்டன்), ஷெடின் ஷைனி(இலங்கை), ஷெடின் சஞ்சனா(இலங்கை), யசிந்தன்(பிரான்ஸ்), தனிஸ்ரன் (பிரான்ஸ்), றெனோயா(பிரான்ஸ்), யோனத்தன்(கனடா), ஜெரேமியா(கனடா), ஸ்ரீபன்(கனடா), சிந்துஜன்(லண்டன்), றெனேஸ் ரெஃபானி(பிரான்ஸ்), றெனேஜெய்சன்(பிரான்ஸ்), றெனேபிறைடன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பூமிபாலன், காலஞ்சென்ற சிங்கராசா, காலஞ்சென்ற யோசேப்பு, தனபாலரத்தினம், சண்முகராசா (கனடா), தேவதாஸ், காலஞ்சென்ற ஜெயதாஸ், விமலதாஸ் (லண்டன்), அமலதாஸ்(லண்டன்), அக்கினேஸ், யோகேஸ்வரி, விக்கினேஸ்வரி, தவமணிதேவி, தேவமலர், யோகேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ராசாராணி, ஸ்ரீரஞ்சனி, கலைவாணி, சுயந்தினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (12-12-2022) திங்கட்கிழமை மு.ப 08.30 மணியளவில் 15 Rue de l'ill 6700 Strasbourg, France எனும் முகவரியில் நடைபெற்று அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.